தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

VOL: 22 NO: 1 YEAR: 1990

DATE: 21, March 1990

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

V211,32 N.90
N90.22.1
213427

வெளியீடு 3-9-1990 Issued 3-9-1990

1161

NADU POLLUTION CONTROL BOARD LIBRARY

மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை - 600 004.
5 - டிச 1990

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 21, 1990–தொகுதி 22–எண் 1

Wednesday, the 21st March 1990–Volume 22–No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
...islative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

D.
V24, 31'N90.
N90.20.1.
213 427

...0] [Price Rs. 3.00

உள்ளடக்கம்.

21—3—1990

	பக்கங்கள்.
தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும Personnel of the Government of Tamil Nadu	iii—ix
சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	xi—xiv
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)	xv—xxvii
1. வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1—35
2. தகவல் கோரல்—	
(அ) இலங்கையிலிருந்து வந்து ஒரிசா மாநிலத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து	35—37
(ஆ) சட்ட விரோதமான ஆயுதப்பயிற்சி தமிழ்நாட்டில் சில இடங்களில் அளிக்கப்படுவதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து	37—38
(இ) விடுதலைப் போராட்ட வீரர் ஆச்சாரிய நரேந்திர தேவ் அவர்களுக்கு ஈரோட்டில் திருவுருவச் சிலையும் நினைவுச் சின்னமும் நிறுவுவது குறித்து	38—41
3. சட்ட முன்வடிவு (ஆய்வு செய்தல்)—	
நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1990	41

D II 53-44—1

	பக்கங்கள்
4. வரவு-செலவுத் திட்டம், 1990–91, பொது விவாதம்—தொடர்ச்சி.	42—121
திரு. வி. பி. இராசன்	42—4
*திரு. வி. கே. சின்னசாமி.	47—5
திரு. எஸ். டேனியல்ராஜ்.	57—7
திரு. வே. தங்கபாண்டியன்.	72—8
*திரு. செ. நூர்முகமது.	81—88
திரு. ஜி. பழனிச்சாமி.	89—95
*திரு. கே. கந்தசாமி.	95—105
*திரு. வி. பி. சந்திரசேகர்.	106—11
திரு. பி. வி. இராஜேந்திரன்.	111—12
5. அறிவிப்பு—	
பேரவை அலுவல் நேரம்.	121
6. பேரவை முன்—வைக்கப்பெற்ற ஏடுகள். ..	122

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—திரு. பி. சி. அலெக்ஸாண்டர்.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. *முதலமைச்சர்* .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத் துறை.

2. **கல்வி அமைச்சர்** .. மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்ட மன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத் தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. **சட்ட அமைச்சர்** .. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்.** மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. போக்குவரத்துத் துறை அமைச்சர்	மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறை முகங்கள் மற்றும் வீட்டு வசதி.
6. அறநிலையத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. கே. பி. கந்த சாமி : அறநிலையத் துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின் கோனா.
7. ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. கோ. சி. மணி: நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங் கள், மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.
8. உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. பொன். முத்து ராமலிங்கம் : உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.
9. வேளாண்மைத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு.வீரபாண்டி சோ. ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண் மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்பு கள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி.
10. பொதுப்பணித் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம், (சிறப்பு சிறு பாசனம் உட்பட) திட்டப் பணிகள், நெடுஞ்சாலை கள் மற்றும் மின்சாரம்.
11. சமூக நலம்-ஊரகத் தொழிற்துறை அமைச்சர்.	மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சமூக நலம் (குழந் தைகள், மகளிர் நலம் உள்பட) பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில் கள் உள்பட) கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

12.	ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.	மாண்புமிகு டாக்டர் ஏ. இராம கிருஷ்ணன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.
13.	மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.	மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.
14.	செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. கே. என். நேரு : செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழி லாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட் டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப் பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம் மற்றும் பால் வளம்.
15.	கால்நடை பரா மரிப்புத் துறை அமைச்சர்.	மாண்புமிகு டாக்டர் க. சந்திர சேகரன் : கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம்.
16.	கைத்தறி-நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர்.	மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் குடிசைமாற்று வாரியம்.
	முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்.	திரு. எல். கணேசன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
213427.
சென்னை-600 008

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU
THIRU P. C. ALEXANDER.

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Chief Minister **The Hon. Dr. M. Karunanidhi :** Public, General Administration, Indian Administrative Service District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise.

2. Minister for Education .. **The Hon. Dr. K. Anbazhagan :** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology.

3 Minister for Law **The Hon. Thiru S. J. Sadiq Basha :** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits and Wakf.

4. Minister for Revenue .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act.

5. Minister for Transport .. **The Hon. Thiru M. Kannappan :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing.

6. Minister for Hindu Religious and Charitable Endowments. **The Hon. Thiru K. P. Kandasamy :** Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona.

7. Minister for Rural Development and Local Administration.	**The Hon. Thiru KO. SI. Mani :** Municipal Administration, Rural Development, Panchayats. Panchayat Unions and Rural Indebtedness.
8. Minister for Food and Co-operation.	**The Hon. Thiru Pon. Muthuramalingam :** Food, Price Control and Civil Supplies. Co-operation and Statistics.
9. Minister for Agriculture ..	**The Hon. Thiru Veerapandi S. Arumugam :** Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production.
10. Minister for Public Works ..	**The Hon. Thiru Duraimurugan :** Public Works, Minor Irrigation including Special Minior Irrigation, Programme Works, Highways and Electricity.
11. Minister for Social Welfare and Rural Industries.	**The Hon. Thirumathi Subbulakshmi Jagadisan :** Social Welfare including Children and Women's Welfare, Beggars' Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan.
12. Minister for Adi-Dravidar Welfare.	**The Hon. Dr. Ramakrishnan:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.
13. Minister for Public Health ..	**The Hon. Dr. K. Ponmudi alias Deivasigamani :** Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control.

14. Minister for Information and Labour. — **The Hon. Thiru K. N. Nehru :** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indians, Overseas, Refuges and Evacueese, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing, Government Press and Milk.

15. Minister for Animal Husbandry. — **The Hon. Dr. K. Chandrasekaran :** Animal Husbandry, Fisheriesa ıl Fisheries Development Corporation.

16. Minister for Handlooms and Urban Development. — **The Hon. Thiru S. Thangavelu :** Handlooms, Textiles, Town Planning, Urban Development, Accommodation Control and Slum Clearance Board.

Parliamentary Secretary to Chief Minister. — **Thiru L. Ganesan.**

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர்.

திரு. வீ. பெ. துரைசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்
திரு. பெ. சு. திருவேங்கடம்
திரு. இரா. மோகன்
திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்
திரு. குமரி அனந்தன்
திரு. உ. ரா. வரதராசன்

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல்.	இணைச் செயலாளர்
டில்லிதுரை, திரு. த.ப., பி.எஸ்.ஸி, பி.எல்.	இணைச் செயலாளர்
இராசமாணிக்கம், திரு. பெ., பி. ஏ., பி. எல்.	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி. ஏ., பி. எல்.	துணைச் செயலாளர்
கனகசபாபதி, திரு. பெ.ச., பி.ஏ., பி.எல்.	துணைச் செயலாளர்
சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ.	துணைச் செயலாளர் (பதிப்பாளர்.)
ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ.	துணைச் செயலாளர்
ஜானகிராமன், திரு. செ. சு., பி. ஏ., பி.எல்.	துணைச் செயலாளர்
கோவிந்தராஜன், திரு. ஆர்.	குழு அலுவலர்
அப்துல் சத்தார், திரு. ஜெ., பி. ஏ., பி.எல்.	சார்புச் செயலாளர்
இராசாராமன் திரு. வி., பி.ஏ.,பி.எல்.	சார்புச் செயலாளர்
கேசவராம், திரு. சு.,பி.ஏ.	சார்புச் செயலாளர்
சந்திரசேகரன்,திரு ஆர்.,பி.ஏ.	சார்புச் செயலாளர்
சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல்.	சார்புச் செயலாளர்
சுந்தரராஜன், திரு. கா. செ., பி. ஏ., பி.ஜி.எல்.	சார்புச் செயலாளர்
முனிர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி.	சார்புச் செயலாளர்
ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ.	சார்புச் செயலாளர்

ஜான், திரு. வ.சா., பி. ஏ.,	சார்புச் செயலாளர்
ஜேக்கப் ஆர்தர், திரு. தா.,பி.ஏ. பி.எல்.	சார்புச் செயலாளர்
ஜோசப், திரு. மா.கு., பி.ஏ.	சார்புச் செயலாளர்
வெங்கட்டராமன், திரு. கோ.	பேரவைத்தலைவரின் தனிச் செயலாளர்
அரங்கநாதன், திரு. ச., பி.ஏ.,பி.எல்.	தலைமை நிருபர் (குழுக்கள்)
ஜெயதேவ், திரு. பி.சி.	தலைமை நிருபர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
'அ'	
1. அங்கமுத்து, திரு. கே.	உளுந்தூர்பேட்டை (செ.வ.)
2. அசேன், திரு. ஜெ.	இராணிப்பேட்டை
3. அண்ணாதுரை, திரு. கா.	பட்டுக்கோட்டை
4. அண்ணாதுரை, டாக்டர் கே.	வரகூர் (செ.வ.)
5. அண்ணாநம்பி, திரு. ஆர்.	அவிநாசி (செ.வ.)
6. அண்ணாமலை, திரு. எம்.	அரூர் (செ.வ.)
7. அதியமான், திரு. ஆ.	சேடப்பட்டி
8. அப்துல் சமத், திரு. பா.	வாணியம்பாடி
9. அப்துல் லத்தீப், திரு. எம்.	சேப்பாக்கம்
10. அர்ஜுனன், திரு. கே.	தாரமங்கலம்
11. அழகர்சாமி, திரு. சோ.	கோவில்பட்டி
12. அழகுவேலு, திரு. ச.	கண்டமங்கலம் (செ.வ.)
13. அறிவழகன், திரு. ஆ.	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
14. அன்பழகன், டாக்டர் க.	அண்ணாநகர்
15. அன்பழகன், திரு. வ.	செய்யாறு
16. அன்பில் பொய்யாமொழி, திரு.	திருச்சிராப்பள்ளி-2

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
'ஆ'	
17. ஆசையன், திரு. பெ.	ஆண்டிபட்டி
18. ஆண்டி அம்பலம், திரு. மெ.	நத்தம்
19. ஆறுமுகம், திரு. த.	அரியலூர்
20. ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ.	சேலம்-2
'இ'	
21. இரகுமான்கான், திரு. அ.	பூங்காநகர்
22. இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்
23. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ.	மேலூர்
24. இராசன், திரு. வி. பி.	ராஜபாளையம் (செ. வ.)
25. இராசு, திரு. வி. கே.	அரக்கோணம் (செ. வ.)
26. இராசு, திரு. வெ.	குளத்தூர் (செ. வ.)
27. இராசேந்திரன், திரு. அ.	போளூர்
28. இராதா, திரு. எஸ். ஆர்.	மதுரை கிழக்கு
29. இராதாகிருஷ்ணன், திரு. டி.	சோழவந்தான்
30. இராமகிருஷ்ணன், டாக்டர் எ.	அச்சரபாக்கம் (செ. வ.)
31. இராமகிருஷ்ணன், திரு. நா.	கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. எம்.	திருவோணம்
33. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்.	விளாத்திகுளம்
34. இராமச்சந்திரன், திரு. ந.	செஞ்சி

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
இ—தொடர்ச்சி.	
35. இராமசாமி, திரு. ஏ. எம்.	ஆத்தூர்
36. இராமசாமி, திரு. கே. வி.	கரூர்
37. இராமசாமி, திரு. வி.	திருச்செங்கோடு
38. இராமசாமி, திரு. கே. ஆர்.	திருவாடானை
39. இராமநாதன், திரு. மு.	கோவை மேற்கு
40. இராமலிங்கம், திரு. செ.	திருவிடைமருதூர்
41. இராஜேந்திரன், திரு. கே. ஆர்.	பர்கூர்
42. இராஜேந்திரன், திரு. பி.வி.	வேதாரண்யம்
43. இளம்வழுதி, திரு.	எழும்பூர் (செ.வ.)
'ஈ'	
44. ஈஸ்வரன், திரு. ஆர்.	வாசுதேவநல்லூர் (செ.வ.)
'உ'	
45. உகம்சந்த், திரு. எஸ்.டி.	மதுராந்தகம்
46. உதயசூரியன், திரு. தா.	சின்னசேலம்
47. உபயதுல்லா, திரு. எஸ்.என். எம்.	தஞ்சாவூர்
'ஏ'	
48. ஏகாம்பர ரெட்டி, திரு. எ.	பள்ளிபட்டு
'க'	
49. கண்ணப்பன், திரு. மு.	பல்லடம்
50 கண்ணன், திரு. எஸ். பி.	அணைக்கட்டு
51. கணபதி, திரு. என்.	மயிலாப்பூர்
52. கணேசமூர்த்தி, திரு. ஏன்.	குறிஞ்சிப்பாடி

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
	க—தொடர்ச்சி.
53. கணேசமூர்த்தி, திரு. ஏ.	மொடக்குறிச்சி
54. கணேசன், திரு. எல்.	ஒரத்தநாடு
55. கணேசன், திரு. க.சொ.	ஜெயங்கொண்டம்
56. கணேசன், திரு. சா.	தியாகராய நகர்
57. கணேசன், திரு. வே.	மங்களூர் (செ.வ.)
58. கந்தசாமி, திரு.கே.	கிணத்துக்கடவு
59. கந்தசாமி, திரு. கே.பி.	திருச்செந்தூர்
60. கரீம், திரு. எம்.கே.	கூடலூர்
61. கருணாநிதி, டாக்டர் மு.	துறைமுகம்
62. கருப்பசாமி, திரு. எஸ்.எஸ்.	சாத்தூர்
63. கருப்பையா மூப்பனார், திரு. ஜி.	பாபனாசம்
64. கன்னையன், திரு. க.	தொட்டியம்
65. கஜபதி, திரு. டி.ஆர்.	ஆற்காடு
66. காஞ்சனா, டாக்டர் க.	கிருஷ்ணகிரி
67. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு.	முதுகுளத்தூர்
68. காளியப்பன், திரு. பி.	ஒட்டன்சத்திரம்
69. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து.	சிதம்பரம்
70. கிருஷ்ணன், திரு. சி.	ஓமலூர்
71. குணசேகரன், திரு. எஸ்.	தலைவாசல் (செ.வ.)
72. குமரி அனந்தன், திரு.	சாத்தான்குளம்
73. குருநாதன், திரு. சு.	புளியங்கோட்டை

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
க—தொடர்ச்சி.	
74. குருமூர்த்தி, திரு. ஜி.ஜி.	பவானி
75. கோதண்டம், திரு. ஏ.	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
76. கோபாலகிருஷ்ணன், திரு. வெ.	மேட்டுப்பாளையம்
77. கோவிந்தசாமி, திரு. சி.	திருப்பூர்
78. கோவிந்தசாமி, திரு. வி. சி.	காவேரிப்பட்டினம்
79. கோவிந்தராஜன், திரு. சி.	நெல்லிக்குப்பம்
80. கோவிந்தன், திரு. வெ.	பேரணாம்பட்டு (செ.வ.)
ச	
81. சண்முகம், திரு. சி.	ஆலந்தூர்
82. சந்திரசேகர், திரு. வி.பி.	பொள்ளாச்சி
83. சந்திரசேகரன், டாக்டர் க.	ஆலங்குடி
84. சம்சுதீன் என்கிற கதிரவன், திரு.	கடையநல்லூர்
85. சம்பத், திரு. ஏ.ஜி.	முகையூர்
86. சற்குணம், திருமதி எஸ். பி.	இராதாகிருஷ்ணன் நகர்
87. சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.	உடுமலைப்பேட்டை
88 சாந்தகுமாரி, டாக்டர் த.	தாராபுரம் (செ.வ.)
89. சாமிநாதன், திரு. ஆர்.	திருமங்கலம்
90. சிங்காரம், திரு. ஆர்.	பேராவூரணி
91. சிவசுப்பிரமணியன், திரு. சா.	ஆண்டிமடம்
92. சிவலிங்கம், திரு, எஸ். ஆர்.	பனைமரத்துப்பட்டி

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)

ச—தொடர்ச்சி.

93. சின்னக்குழந்தை, திரு. மு.	பெரணமல்லூர்
94. சிவலோகம், திரு. எஸ்	புவனகிரி
95. சின்னசாமி, திரு கே.	சேந்தமங்கலம் (ஆ.வா.)
96. சின்னசாமி, திரு. ரா.	தர்மபுரி
97. சின்னசாமி, திரு. வி. கே.	பவானிசாகர்
98. சீரங்கன், திரு .எம்.	மேட்டூர்
99. சீனிவாசன், திரு. பெ.	சிவகாசி
100. சுந்தர், திரு. கே.	உத்திரமேரூர்
101. சுந்தரதாஸ், திரு. மா.	விளவன்கோடு
102. சுந்தரம், திரு. க.	பொன்னேரி (செ.வ.)
103. சுந்தரம், திரு. கே. ஆர்.	குடியாத்தம்
104. சுந்தரம், திரு.ப.	திருப்பத்தூர்
105. சுந்தரராஜ், டாக்டர் எஸ்.	பரமக்குடி (செ.வ.)
106. சுப்பிரமணிய பிள்ளை திரு. கே.	கன்னியாகுமரி
107. சுப்பிரமணியம், திரு. தூ.க.	சத்தியமங்கலம்
108. சுப்பிரமணியன், திரு. அ. லெ.	திருநெல்வேலி
109. சுப்பிரமணியன், திரு. வே. நா.	பெருந்துறை
110. சுப்பு, திரு. ஏ.	ராசிபுரம்
111. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி.	ஈரோடு

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)

ச—தொடர்ச்சி.

112. சுப்பையா, திரு. ஆலவயல்	திருமயம்
113. செங்குட்டுவன், திரு. ஏ.	மயிலாடுதுறை
114. செங்கைசிவம், திரு.	பெரம்பூர் (செ.வ.)
115. செங்கோட்டையன், திரு. கே.ஏ.	கோபிச்செட்டிபாளையம்
116. சேட்டு, திரு. எம்.	செங்கம் (செ.வ.)
117. சொக்கர், திரு. ரா.	விருதுநகர்
118. சௌந்திரபாண்டியன், திரு. ந.	சமயநல்லூர் (செ.வ.)

ட

119. டேனியல்ராஜ், திரு. எஸ்.	ஸ்ரீவைகுண்டம்

த

120. தங்கபாண்டியன், திரு. வே.	அருப்புக்கோட்டை
121. தங்கம், திரு. அ.	ஸ்ரீவில்லிபுத்தூர்
122. தங்கராஜன், திரு. எஸ்.ஏ.	திண்டுக்கல்
123. தங்கராஜு, திரு. ஏ.	காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
124. தங்கவேல், திரு. எம்.	முசிறி
125. தங்கவேல், திரு. என்.	குன்னூர் (செ.வ.)
126. தங்கவேலு, திரு. ச.	சங்கரநாயனார்கோவில் (செ.வ.)
127. தம்புசாமி, திரு. வி.	திருவாரூர் (செ.வ.)
128. தமிழ்க்குடிமகன் முனைவர், மு.	இளையான்குடி

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
த—தொடர்ச்சி	
129. தமிழ்மணி, திரு. வீ.	செங்கல்பட்டு
130. தயாளன், திரு. ஏ.சி.	ஆரணி
131. தனபாலன், திரு. கே. ஆர். ஜி.	சேலம்-1
132. தனராஜ், திரு. வி.	வந்தவாசி (செ.வ.)
133. திருநாவுக்கரசு, திரு. எஸ்.	அறந்தாங்கி
134. திருமூர்த்தி, டாக்டர் து.	திருப்போரூர் (செ.வ.)
135. திருவேங்கடம், திரு. பெ.சு.	கலசப்பாக்கம்
136. துரை சந்திரசேகரன், திரு.	திருவையாறு
137. துரைசாமி, திரு. வீ. பெ.	நாமக்கல் (செ.வ.)
138. துரைபாண்டி, திரு. பெ.	மானாமதுரை (செ.வ.)
139. துரைமுருகன், திரு.	காட்பாடி
140. துரை ராமசாமி, திரு.	வெள்ளக்கோவில்
141. தென்னரசு, திரு. எஸ்.எஸ்.	திருப்பத்தூர்
142. தேவராஜ், திரு. வீ.எம்.	வேலூர்
ந.	
143. நஞ்சப்பன் திரு. ந.	பெண்ணாகரம்,
144. நடராசன், திரு. ஆ.	பேரூர்
145. நடராசன், திரு. பொ.	திருத்தணி
146. நடேசன், திரு. எகால் மு.	ரிஷிவந்தியம்
147. நடேசன். திரு. ஆர்.	திருவட்டாறு
148. நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ.	பண்ருட்டி

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
ந—தொடர்ச்சி	
149. நாராயணன், திரு. ராம.	காரைக்குடி
150. நூர்முகமது, திரு. செ.	பத்மநாபபுரம்
151. நேரு, திரு. கே. என்	லால்குடி
ப	
152. பஞ்சாட்சரம், திரு. ஆர்.	மேல்மலையனூர்
153. பழனிச்சாமி, திரு. டி. கே.	திருவொற்றியூர்
154. பழனிச்சாமி, திரு. ஜி.	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
155. பழனிசுவாமி, திரு. க.	எடப்பாடி
156. பழனிவேல், திரு. என்.	பழனி (செ.வ.)
157. பன்னீர்செல்வம், திரு. மா.	சீர்காழி (செ.வ.)
158. பாண்டியன், திரு. பி. எச்.	சேரன்மாதேவி
159. பாப்பா உமாநாத், திருமதி	திருவரம்பூர்
160. பாப்பா சுந்தரம், திரு. அ.	குளித்தலை
161. பால்ராஜ், திரு. சோ.	மதுரை-மத்திய
162. பாலசுப்பிரமணியன், திரு. அ. வே.	திருநாவலூர்
163. பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர்.	பொங்கலூர்
164. பாலையா, திரு. ஆ.	கொளச்சல்
165. பிச்சாண்டி, திரு. கே.	திருவண்ணாமலை
166. பிச்சைமுத்து, திரு. ரெ.	பெரம்பலூர் (செ.வ.)
167. பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா.	தென்காசி
168. புகழேந்தி, திரு. இ.	கடலூர்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)

ப—தொடர்ச்சி

169. பூவராகன், திரு. கோ.	விருத்தாசலம்
170. பெரியசாமி, திரு. என்.	தூத்துக்குடி
171. பெரியசாமி, திரு. ஐ.	ஆத்தூர்
172. பெரியசாமி, திரு. வே.	அந்தியூர் (செ.வ.)
173. பெரியண்ணன், திரு. அ.	புதுக்கோட்டை
174. பெருமாள், திரு. செ.	ஏற்காடு (ஆ.வா.)
175. பொன்முடி, திரு. டி.	தண்டராம்பட்டு
176. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி டாக்டர், க.	விழுப்புரம்
177. பொன். முத்துராமலிங்கம், திரு.	மதுரை மேற்கு
178. பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ்.	நிலக்கோட்டை(செ.வ.)
179. பொன்னுசாமி, பேராசிரியர், க.	மருங்காபுரி
180. பொன்னுபிள்ளை, திரு. ஜி.	தேனி

ம

181. மகேந்திரன், திரு. ஆர்.	நாட்ராம்பள்ளி
182. மணி, திரு. ஆச்சியூர் எம்.	நாங்குநேரி
183. மணி, திரு. கே. ஏ.	கபிலர்மலை
184. மணி, திரு. கோ.சி.	கும்பகோணம்
185. மணிமாறன், திரு. மா.	நன்னிலம் (செ.வ.)
186. மதிவாணன், திரு. இரா.	இராயபுரம்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்	தொகுதியின் பெயர்
(1)	(2)

ம—தொடர்ச்சி

187. மலர்மன்னன், திரு. அ.	திருச்சிராப்பள்ளி-1.
188. மனோகரன், திரு. நாஞ்சில் கி.	திருவல்லிக்கேணி
189. மனோகரன், திரு. பா.	சிவகங்கை
190. மாசிலாமணி, டாக்டர் சி.ரா.	திண்டிவனம்
191. மாசிலாமணி, திரு. தி. ரா.	பூந்தமல்லி
192. மாதப்பன், திரு. கொ.	பாலக்கோடு
193. மார்ப்பன், திரு. பி.	காங்கேயம்
194. மாரிமுத்து, திரு. அ.	வானூர் (செ.வ.)
195. முகமது சித்திக், திரு. எம்.	பூம்புகார்
196. முத்துசாமி, திரு. ப.	வேடசந்தூர்
197. முத்தையன், திரு. எம்.	சங்கராபுரம்
198. முத்தையா, திரு. எம்.	ஒட்டபிடாரம் (செ.வ.)
199. முருகேசன், திரு. பொ.	காஞ்சிபுரம்
200. முல்லைவேந்தன், திரு. வ.	மொரப்பூர்
201. முனிரத்தினம், திரு. ஆ.மு.	சோளிங்கர்
202. முனிரத்தினம், திரு. எஸ். ஆர்.	திருவள்ளூர்
203. மூக்கன், திரு. ஆர்.	உப்பிலியாபுரம் (ஆ.வா.)
204. மூக்கையா, திரு. எல்.	பெரியகுளம்
205. மோகன், திரு. இரா.	சிங்காநல்லூர்
206. மோசஸ், திரு. எம்.	நாகர்கோவில்

ய

207. யசோதா செல்லப்பா, திருமதி.	வலங்கைமான் (செ.வ.)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
ர	
208. ரமணி, திரு. கே.	கோவை (கிழக்கு)
209. ரமணி நல்லதம்பி, திருமதி	ராதாபுரம்
210. ரவி அருணன், திரு.	அம்பாசமுத்திரம்
211. ராமச்சந்திர ரெட்டி, திரு. ந.	ஓசூர்
212. ராமச்சந்திரன், திரு. கே.	மன்னார்குடி
213. ராமச்சந்திரன், திரு. சி.	திருப்பரங்குன்றம்
214. ராமசாமி, திரு. மொஞ்சனூர் ப.	அரவக்குறிச்சி
215. ராமசுப்பு, திரு. எஸ். எஸ்.	ஆலங்குளம்
216. ராஜு, திரு. எச்.எம்.	உதகமண்டலம்
217. ராஜேந்திரன், திரு. எம். எஸ். கே.	இராமநாதபுரம்
ல	
218. லட்சுமி, திருமதி. பி.	வால்பாறை (செ.வ.)
வ	
219. வரதராஜன், திரு. ஆர்.	சங்கரி (செ.வ.)
220. வரதராஜன், திரு. உ.ரா.	வில்லிவாக்கம்
221. வல்லரசு, திரு. பி.என்.	உசிலம்பட்டி
222. விஜயராகவன், திரு. பொன்.	கிள்ளியூர்
223. விஜயேந்திரையா, திரு. டி.சி.	தளி
224. வீராசாமி, திரு. ஆற்காடு நா.	புரசைவாக்கம்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
வ—தொடர்ச்சி	
225. வீரையன், திரு. கோ.	நாகப்பட்டினம்
226. வெங்கடாசலம், திரு. பெ.	வீரபாண்டி
227. வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய்.	ஸ்ரீரங்கம்
228. வெள்ளிங்கிரி, திரு. யூ.கே.	தொண்டாமுத்தூர்
229. வேணு, திரு. கி.	கும்மிடிப்பூண்டி
230. வைத்தியலிங்கம், திரு. மீ.அ.	தாம்பரம்
ஸ	
231. ஸ்டாலின், திரு. மு.க.	ஆயிரம்விளக்கு
ஜ	
232. ஜெயலலிதா, செல்வி ஜெ.	போடிநாயக்கனூர்
ஹ	
233. ஹமீது இப்ராகிம், திரு. அ. மு.	கடலாடி
ஸ்ரீ	
234. ஸ்ரீதர், திரு. ஆர். எஸ்.	சைதாப்பேட்டை
235. ஆஸ்கார், சி. நிக்லி, திரு.	நியமன உறுப்பினர்

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

திரு. கு. அழகிரிசாமி ... தலைமை வழக்கறிஞர்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 7, சுக்ல, திருவள்ளுவர் ஆண்டு-2021.

1990, மார்ச் 21, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்)

'' வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.''

மற்றெவர்க்கும் ஒரு சிறிதும் தீமை பயக்காத சொற்களைச் சொல்வதே வாய்மை எனப்படும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மதுவிலக்கு சம்பந்தமான வழக்குமீது வசூலிக்கப்படும் தொகை.

*902. திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுவிலக்கு சம்பந்தமான வழக்கு மீது வசூலிக்கப்படும் தொகையை நீதிமன்றங்கள் பெற்றுக் கொள்ளாததால் அந்தத் தொகை மதுவிலக்குப் பிரிவு காவல் துறையிடமே இருப்பது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தொகை எவ்வளவு?

(இ) அந்தத் தொகையை அரசு பெற்றுக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகள்மீது நீதிமன்றத்தால் விதிக்கப்படும் தண்டத் தொகையை, நீதிமன்றங்களே பெற்றுக் கொள்கின்றன. ஆனால், கள்ளச் சாராயம் விற்பவர்களைக் கைது செய்யும்போது, அவர்களிடம் கைப்பற்றப்பட்ட தொகைகளை நீதிமன்றத்தில், நீதிமன்றம் வேண்டும்போது, ''அந்தத் தொகை இருந்தபடியே'' சமர்ப்பிக்க வேண்டுமென் நீதிமன்றங்கள் வலியுறுத்துகின்றன. இத்தொகையை காவல் துறையினர்கள் பாதுகாப்பாக வைத்து வருகிறார்கள்.

(ஆ) ரூபாய் 5,84,325.56.

(இ) அரசுக் கருவூலங்களில் இத்தொகை வைக்க முடியுமா என ஆராயப்பட்டு வருகிறது.

திரு. செ. நூர் முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற பொழுது, கள்ளச் சாராயப் பேர்வழிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகையை, மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகள் மீது வசூலிக்கப்படுகின்ற தொகை பற்றியும் குறிப்பிட்டார்கள். இப்படிக் கிடைக்கின்ற தொகைகளைக் குடியினால் வருகின்ற கேடு குறித்து மக்கள் மத்தியிலே பிரச்சார இயக்கம் நடத்துவதற்கு அரசு பயன்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனை, ஏற்கனவே இதுபோன்ற ஒரு கருத்து, மதுவிலக்கு தளர்த்தப்பட்டாலும்கூட, பிரச்சாரம் மூலமாக மதுவின் தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற கருத்து முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களாலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராய வழக்குகள் சம்பந்தமாக இதுவரை அரசுக்குக் கிடைத்துள்ள தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக குற்றங்களின் காரணமாக நடைபெற்ற வழக்குகளில் கடந்த காலத்தில் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 1-6-1989 முதல் 1-2-1990 வரையில் சில நேர்வுகளில் கம்பவுண்ட் செய்யலாம். அதாவது குற்றவாளிகள், அவர்களே குற்றத்தை ஒத்துக்கொண்டு அபராதம் கட்டுவது என்கின்ற முறையில் 64,388 வழக்குகளில் 3,58,93,815 ரூபாயும்; நீதிமன்றங்களில் நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் 3,81,179; அதன் மூலமாக அபராதத் தொகை 6,07,04,040 ரூபாயும் சேர்த்து, மொத்த வருவாய் 9,65,97,855 ரூபாய் அபராதமாகக் கிடைத்திருக்கிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு சம்பந்தப்பட்ட துறைக்கென்று ஒரு போலீஸ் இலாக்காவும், லா அண்டு ஆர்டர்-க்கு என்று ஒரு போலீஸ் இலாக்காவும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இவர்கள் இருவருமே இந்தக் கள்ளச் சாராய வழக்குகள் மற்ற மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகளைப் பிடித்து,

1990 மார்ச் 21]

அவரவர்கள் இஷ்டத்திற்கு, எங்கோ ஓர் இடத்தில் போய் வைத்துக்கொண்டு அவர்களிடத்திலே அபராதம் என்ற பெயரால் சில தொகைகளைப் பெற்றுக் கொண்டு விட்டு விடுகிறார்கள். இது சம்பந்தமாக, எங்களைப் போன்றவர்களிடத்திலே அவர்கள் வந்து சொன்னால், நாங்கள் போய் கேட்கும்போது, அது எங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று ஸ்தலத்திலே இருக்கிறவர்கள் சொல்லிவிடுகிறார்கள். இப்படித் தெரியாமலேயே ஒரு தவறு நடந்து கொண்டிருக்கிறது. இதை அரசே ஒருமுகப்படுத்தி இப்படித் தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு ஏதாவது வழிவகை காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகளையெல்லாம் தீர்த்திட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே மதுவிலக்கு குறித்த ஒரு கொள்கை மாற்றம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மதுவிலக்குக் குற்றங்களால் ஏற்படுகிற சங்கடங்கள் போன்றவற்றிற்காக அபராதம் விதிக்கிறார்கள். அதை கோர்ட்டில் செலுத்தி வந்தார்கள் முன்பெல்லாம். இப்போது மதுவிலக்கு போலீஸ்காரர்களிடம் அந்தத் தொகை இருப்பதால், அதுபோன்ற இலட்சக்கணக்கான ரூபாய்க்கு வட்டி யார் தருவது? தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் அந்தப் பணத்தைப் போட்டால் வட்டி வரும். வேறு யாரிடமாவது கொடுத்திருந்தாலோ அல்லது பாங்கில் பிக்சட்டில் போட்டாலோ வட்டி வரும், அதைப்பற்றி கவனிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது குறித்துத்தான் அரசுக் கருவூலங்களில் அந்தத் தொகையை வைக்க முடியுமா என்று ஆராயப்பட்டு வருகிறது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன்.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு சம்பந்தமாக நமது தமிழ்நாட்டில் எத்தனை வழக்குகள் பெண்டிங் ஆக இருக்கின்றன என்பதை அரசு வெளியிடுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கம்பவுண்ட் செய்யப்பட்ட வழக்குகள் 64,358. நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்ட வழக்குகள் 3,81,179 என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எஞ்சியுள்ள வழக்குகள் எத்தனை என்ற விபரம் என்னிடத்திலே இல்லை.

1990 மார்ச் 21]

அவரவர்கள் இஷ்டத்திற்கு, எங்கோ ஓர் இடத்தில் போய் வைத்துக்கொண்டு அவர்களிடத்திலே அபராதம் என்ற பெயரால் சில தொகைகளைப் பெற்றுக் கொண்டு விட்டு விடுகிறார்கள். இது சம்பந்தமாக, எங்களைப் போன்றவர்களிடத்திலே அவர்கள் வந்து சொன்னால், நாங்கள் போய் கேட்கும்போது, அது எங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று ஸ்தலத்திலே இருக்கிறவர்கள் சொல்லிவிடுகிறார்கள். இப்படித் தெரியாமலேயே ஒரு தவறு நடந்து கொண்டிருக்கிறது. இதை அரசே ஒருமுகப்படுத்தி இப்படித் தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு ஏதாவது வழிவகை காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகளையெல்லாம் தீர்த்திட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே மதுவிலக்கு குறித்த ஒரு கொள்கை மாற்றம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மதுவிலக்குக் குற்றங்களால் ஏற்படுகிற சங்கடங்கள் போன்றவற்றிற்காக அபராதம் விதிக்கிறார்கள். அதை கோர்ட்டில் செலுத்தி வந்தார்கள் முன்பெல்லாம். இப்போது மதுவிலக்கு போலீஸ்காரர்களிடம் அந்தத் தொகை இருப்பதால், அதுபோன்ற இலட்சக்கணக்கான ரூபாய்க்கு வட்டி யார் தருவது? தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் அந்தப் பணத்தைப் போட்டால் வட்டி வரும். வேறு யாரிடமாவது கொடுத்திருந்தாலோ அல்லது பாங்கில் பிக்சட்டில் போட்டாலோ வட்டி வரும், அதைப்பற்றி கவனிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது குறித்துத்தான் அரசுக் கருவூலங்களில் அந்தத் தொகையை வைக்க முடியுமா என்று ஆராயப்பட்டு வருகிறது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன்.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு சம்பந்தமாக நமது தமிழ்நாட்டில் எத்தனை வழக்குகள் பெண்டிங் ஆக இருக்கின்றன என்பதை அரசு வெளியிடுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கம்பவுண்ட் செய்யப்பட்ட வழக்குகள் 64,358. நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்ட வழக்குகள் 3,81,179 என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எஞ்சியுள்ள வழக்குகள் எத்தனை என்ற விபரம் என்னிடத்திலே இல்லை.

[1990 மார்ச் 21

சிறு சேமிப்பு மூலம் அதிக நிதி திரட்டுதல்.

*428— திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசு 1989–90 ஆம் ஆண்டுக்குச் சிறு சேமிப்பு மூலம் அதிக நிதி திரட்ட திட்டம் வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1989–90 ஆம் ஆண்டுக்கு சிறு சேமிப்பு மூலம் ரூ. 400 கோடி நிகர வசூல் செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பு வசூல் நமது அரசுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கக்கூடிய ஒரு தொகையாக இருக்கிறது. இதில் நம்முடைய அரசு பிரத்தியேகமான முறையில் பல பரிசுத் திட்டங்களை அறிவித்து மக்களை ஊக்கப்படுத்துகிற செயல்கள் செய்கின்றன. அரசு இன்னும் அதிகமான அளவில் மாவட்ட அளவில் மாவட்டத்திற்குப் பரிசு என்ற வகையில் இந்தத் திட்டத்தை ஊக்கப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலும் ஊக்கப்படுத்துகின்ற திட்டம் அரசிடம் உள்ளது.

கல்வெட்டு ஆய்வுப் பயிற்சி.

*4146. திரு. மு. இராமநாதன் ;

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) கல்வெட்டு ஆய்வுப் பயிற்சியை, பல்கலைக் கழகப் பாடங்களில் ஒன்றாக ஏற்றுக் கொண்டு இளங்கலை மற்றும் முதுகலைச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

1990 மார்ச் 21]

திரு. மு. இராமநாதன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வெட்டு ஆராயச்சியைப் பொறுத்தவரையில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, டாக்டர் மா. இராசமாணிக்கனார் போன்றவர்கள் தங்களுக்கிருக்கிற தனித் தமிழ் ஆர்வம் காரணமாக, கல்வெட்டுக்களை அவர்களே ஆய்ந்து தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்த்திருக்கிறார்கள். உதாரணமாக, ''நீர் பிழை பொறிவது ஊர் பிழை கற்றால் நெடுமுடி மன்னன் கடுஞ்சினம் கொள்ளும்'' என்று கல்வெட்டு ஆராய்ச்சி குறிப்பிட்டு, பொலுஷன கண்ட்ரோல் என்று இப்போது சொல்கிறோமே மாசு கட்டுப்பாடு—அது சோழ மன்னன் காலத்தில் எப்படி பேணப்பட்டது என்ற அளவில் அந்தக் கல்வெட்டு ஆராய்ச்சி முக்கியத்துவம் அடைந்திருப்பதால், இனியாவது பல்கலைக் கழகப் பாடத்தில் இளங்கலை, முதுகலைப் பாடத்திட்டங்களில் அதை இணைக்க முயற்சியை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்களில் இளங்கலை, முதுகலை பட்டப் படிப்புகளில் அதைப் பாடமாக வைக்கிற அளவுக்கு பலபேர் அதில் பயிலக்கூடிய இன்றியமையாத தேவை இருப்பதாகக் கருதப்படவில்லை. பல்கலைக் கழகப் படிப்பு என்பது இப்போது பொதுத் தன்மை வாய்ந்ததாகத்தான் மிகுதியாக அமைகிறது. ஆனால், தொல்பொருள் ஆய்வுத் துறையால் ஆண்டுதோறும் இதற்கான பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. இளங்கலை, முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் ஏறத்தாழ 40 பேர் அந்த வகுப்பில் சேர்ந்து மூன்று வார பயிற்சி பெற்று, அதற்காக வழங்கப்படுகிற சிறப்புச் சான்றிதழையும் பெறுகிறார்கள். இது மூன்று வார காலப் பயிற்சி என்றாலும் அதில் ஆர்வம் உடையவர்கள் தெளிவடைவதற்கும் தங்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும் தகுந்த பயன் அளிக்கிறது. அது தவிர, இத்துறையில் டிப்ளமோ வகுப்பு ஒன்று அதாவது, பட்டயப் படிப்பு ஒன்று நடத்தப்படுகிறது இது ஓராண்டுக் காலப் பயிற்சியாகும். இதிலே முதுகலைப் பட்டம் பெற்ற மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். ஆண்டுதோறும் 8 பேர் இதிலே சேர்க்கப்படுகிறார்கள். இப்போது 6 பேர் பயின்று வருகின்றனர். எனவே, அந்தத் துறைக்குத் தேவையான பயிற்சி வழங்கும் பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

9–10 மணி

திரு. மு. இராமநாதன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவ்வாறு பல்கலைக் கழகப் பாடத்திட்டங்களில் இணைக்க முடியாவிட்டாலும் கூட தமிழ்நாட்டின் கோயில்களிலும் மற்ற பகுதிகளிலும் இருக்கும் கல்வெட்டுக்களைக் கண்டறியவும், கண்டறிந்த கல்வெட்டுக்களைப் பாதுகாக்

கவும், அதிலே உள்ள செய்திகளைத் தொகுத்து புத்தகங்களாக வெளியிடவும் குறிப்பாக, அழிந்துவிட்ட தமிழர்களுடைய நாகரீகம், பண்பாடு போன்றவை எல்லாம் கல்வெட்டுக்களில் புதையுண்டு இருப்பதை மனதில் கொண்டும் கல்வெட்டு மற்றும் தொல்பொருள் இயல் துறை வல்லுநர்கள் குழு ஒன்று அமைத்தாவது அவற்றைப் பெறுவதற்கான வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய தொல்பொருள் ஆய்வுத்துறை இப்படிப்பட்ட கல்வெட்டுக்களை எல்லாம் சேகரிப்பது, அச்சிட்டு நூலாக வெளியிடுவது என்ற கடமைகளைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு நிறைவேற்றி வருகிறது. மத்திய அரசின் சார்பிலே உள்ள தொல்பொருள் ஆய்வுத்துறையாலும் தமிழ் நாட்டைச் சேர்ந்த பலப்பல கல்வெட்டுக்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் எடுத்து ஆராய்வதற்குத் தகுந்த ஆர்வம் உள்ளவர்கள் முன் வந்து சில ஆய்வுகள் நடத்துகிறார்கள். அவற்றைப் பற்றிய விவரம் வேண்டுமானால், அந்தத் துறையின் அறிக்கையைப் பெற்றுத்தான் முழு விவரமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க முடியும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. இதிலே, தனியார் துறையிலே உள்ளவர்களின் ஆர்வம் என்று சொல்கிற நேரத்தில் எனக்குத் தெரிந்த கும்பகோணத்தில் ஒரு பேருந்துக் கம்பெனியின் முதலாளி திரு. சேதுராமன் என்பவர் இந்தத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் மிகுந்த அக்கறை கொண்டு தன்னுடைய முழு நேரத்தையும் செலவிட்டு அதிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்குப் பெரிய ஆர்வம் இருக்கிறது. அப்படிப்பட்டவர்களை ஊக்கப்படுத்துகிற வகையில் அவர்களை அரசாங்கத்தோடு தொடர்புடையவர்களாக ஆக்கினால் நிச்சயமாக இப்படிப்பட்ட தொன்மையான நம்முடைய பழம்பெரும் சுவடிகளில், கல்வெட்டுக்களில் இருக்கின்ற பல்வேறு உண்மைகள் நமக்குத் தெரிவதற்கு உதவியாக இருக்கும். எனவே, அந்த வகையில், ஒரு குழு அமைத்தாவது அவர்களுக்கு ஊக்கம் தர அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடந்தையிலே உள்ள திரு. சேதுராமன் என்பவர் இந்த கல்வெட்டு ஆய்விலே கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஈடுபட்டு ஏற்கெனவே நடைபெற்றக் கல்வெட்டு ஆய்வில் வெளியானவற்றில் உள்ள சில கருத்து மாறுபாடுகளைக்கூட வெளியிட்டு இருக்கிறார்கள். அவர்களோடு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடர்பு வைத்துக்கொண்டு அவர்களுடைய பணியை, அவர்களுடைய ஆலோசனைகளைப்

1990 மார்ச் 21]

பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று துணை வேந்தர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இங்கேயுள்ள கல்வெட்டு ஆய்வுத்துறையிலுள்ள அந்தத் துறையினைச் சேர்ந்தவர்களும் அவர்களுடைய ஆலோசனைகளைப் பரிசீலிக்க வேண்டும் என்று அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

எஸ். எஸ். எல். சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்தல்.

***5114**—திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. பிச்சாண்டி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. வரையில் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிற காரணத்தால் இனிவரும் ஆண்டுகளிலாவது தேர்வுக் கட்டணம் ரத்து செயயப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; துணைத் தலைவர் அவர்களே, இதிலும் இப்போது தேர்வு நடத்துவது என்பது மிகப்பெரிய செலவுக்குரிய ஒரு இனமாக இருக்கிறது. ஆசிரியர்கள், அதிலே பங்குபெறுகிற பணியாளர்கள் போன்றவர்களின் ஊதியத்தை எல்லாம் அவ்வப்போது உயர்த்த வேண்டிய கட்டாயமான நிலைமை இருக்கிறது. மேலும், தேர்வு எழுதுகிறோம் என்ற உணர்வு கூட மாணவர்களுக்குக் கட்டணம் கட்டினால்தான் வருகிறது. இல்லை என்றால், தேர்வு நடைபெறுவதைக் கூட அவர்கள் மறந்து விடுவார்கள். எனவே, இவை இன்றியமையாத தேவையாக இருப்பதால் இந்தக் கட்டணத்தை நீக்குவதற்கான ஆலோசனை இல்லை.

திரு. கே. பிச்சாண்டி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய மாணவர்களுக்காவது, இன்றைக்குப் பெண்களுக்குப் பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிற காரணத்தால் அவர்களுக்கும் வரும் ஆண்டிலேயிருந்தாவது இந்தத் தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய அரசு முயற்சிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 21]

பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று துணை வேந்தர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இங்கேயுள்ள கல்வெட்டு ஆய்வுத்துறையிலுள்ள அந்தத் துறையினைச் சேர்ந்தவர்களும் அவர்களுடைய ஆலோசனைகளைப் பரிசீலிக்க வேண்டும் என்று அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

எஸ். எஸ். எல். சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்தல்.

***5114**—திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. பிச்சாண்டி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. வரையில் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிற காரணத்தால் இனிவரும் ஆண்டுகளிலாவது தேர்வுக் கட்டணம் ரத்து செயயப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; துணைத் தலைவர் அவர்களே, இதிலும் இப்போது தேர்வு நடத்துவது என்பது மிகப்பெரிய செலவுக்குரிய ஒரு இனமாக இருக்கிறது. ஆசிரியர்கள், அதிலே பங்குபெறுகிற பணியாளர்கள் போன்றவர்களின் ஊதியத்தை எல்லாம் அவ்வப்போது உயர்த்த வேண்டிய கட்டாயமான நிலைமை இருக்கிறது. மேலும், தேர்வு எழுதுகிறோம் என்ற உணர்வு கூட மாணவர்களுக்குக் கட்டணம் கட்டினால்தான் வருகிறது. இல்லை என்றால், தேர்வு நடைபெறுவதைக் கூட அவர்கள் மறந்து விடுவார்கள். எனவே, இவை இன்றியமையாத தேவையாக இருப்பதால் இந்தக் கட்டணத்தை நீக்குவதற்கான ஆலோசனை இல்லை.

திரு. கே. பிச்சாண்டி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய மாணவர்களுக்காவது, இன்றைக்குப் பெண்களுக்குப் பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிற காரணத்தால் அவர்களுக்கும் வரும் ஆண்டிலேயிருந்தாவது இந்தத் தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய அரசு முயற்சிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகை மிகக் குறைவான தொகை. இதைக்கூட கட்ட முடியாத நிலைமையில் யாராவது இருந்து விண்ணப்பிப்பார்களேயானால், அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு சலுகைகளை அளித்து வருகின்ற இந்த அரசினிடத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள மாணவர்களுக்காவது இதில் சலுகை அளிக்கும் செயற்குறிப்பு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9–15 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் வறுமைக்கோடு என்ற இலக்கணத்தை வைத்துப் பார்ப்பதாக இருந்தால், எந்த ஒரு காரியத்தையும் அரசாங்கம் முறையாகச் செய்ய முடியாது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறுமைப்பட்டவர்கள், முடியாதவர்கள் யாரேனும் விண்ணப்பம் செய்தால் அது பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு இந்தக் கட்டணத்திலிருந்து அறவே விலக்கு அளிக்கின்ற முடிவை மேற்கொள்ள வேண்டுமென்று அரசை வலியுறுத்தி அதற்காக பரிசீலனை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக ஆகக்கூடியச் செலவு இப்போது வளர்ந்துகொண்டு வருகிறது. இருந்தாலும், ஆதிதிராவிடர் சமூகத்திற்கு இந்த 15 ரூபாயினால்தான் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால், தக்க காலத்தில் பரிசீலிக்கலாம்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஐக்கிய நாடுகள் சபை எழுத்தறிவு ஆண்டு என அறிவித்திருக்கிறது. இன்று ''சார்க்'' நாடுகள் பெண் குழந்தைகள் ஆண்டாக அறிவித்திருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் இந்த எஸ்.எஸ்.எல்.சி. கட்டணம் குறைந்த பட்சம் பெண்களுக்காவது ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 21]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் உரிமையைப் பாதுகாக்கின்றபோது, பெண்களுடைய கடமையும் வளரும். உரிமை மட்டுமல்ல, கடமையும் இருக்கின்ற காரணத்தினால், இந்தத் தொகையைச் செலுத்தத் தயங்கமாட்டார்கள் என நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வினா எண். 45 மற்றும் வினா எண். 46 தள்ளிவைக்கப்படுகின்றன.

மேயர் முத்து மேம்பாலத்தின் கீழ் உள்ள கடைகள்.

*3198 திரு. இரா. சாமிநாதன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் மேயர் முத்து மேம்பாலத்தின் கீழ் உள்ள கடைகளை நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து பெற்று மாநகராட்சி ஏலத்தின் மூலம் வாடகை வசூலிக்கும் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இத்திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுரை மாநகராட்சி, திருப்பரங்குன்றம் சாலையில் மேயர் முத்து மேம்பாலத்தின் (தற்போது பெரியார் மேம்பாலம்) கீழ் உள்ள கடைகளை நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து 10–11–1978-ல் பொறுப்பினை எடுத்தது. அதன் பின்னர், முத்து மேம்பாலத்தின் கீழுள்ள இடைவெளிகண்களில் (Spans) கடைகள் அமைக்க 25–1–1980-ம் தேதியில் பொது ஏலம் நடத்தப்பட்டு, கடைகள் அமைக்க அனுமதியும் வழங்கப்பட்டது. ஏலம் விடப்பட்டு பொறுப்பு ஒப்படைத்த நாளிலிருந்து மதுரை மாநகராட்சியால் மாமன்றம் அவ்வப்போது தீர்மானிக்கும் வாடகை உயர்வுகளுடன் லைசென்ஸ்தாரரிடமிருந்து வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே போல் அதற்கு அடுத்தாற்போல் இருக்கின்ற பசும்பொன் தேவர் மேம்பலத்திற்குக் கீழே உள்ள கடைகளுக்கும் மாநகராட்சி இதே மாதிரி நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்

1990 மார்ச் 21]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் உரிமையைப் பாதுகாக்கின்றபோது, பெண்களுடைய கடமையும் வளரும். உரிமை மட்டுமல்ல, கடமையும் இருக்கின்ற காரணத்தினால், இந்தத் தொகையைச் செலுத்தத் தயங்கமாட்டார்கள் என நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வினா எண். 45 மற்றும் வினா எண். 46 தள்ளிவைக்கப்படுகின்றன.

மேயர் முத்து மேம்பாலத்தின் கீழ் உள்ள கடைகள்.

***3198 திரு. இரா. சாமிநாதன் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் மேயர் முத்து மேம்பாலத்தின் கீழ் உள்ள கடைகளை நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து பெற்று மாநகராட்சி ஏலத்தின் மூலம் வாடகை வசூலிக்கும் திட்டம் செயல் படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இத்திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுரை மாநகராட்சி, திருப்பரங்குன்றம் சாலையில் மேயர் முத்து மேம்பாலத்தின் (தற்போது பெரியார் மேம்பாலம்) கீழ் உள்ள கடைகளை நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து 10–11–1978-ல் பொறுப்பினை எடுத்தது. அதன் பின்னர், முத்து மேம்பாலத்தின் கீழுள்ள இடைவெளி கண்களில் (Spans) கடைகள் அமைக்க 25–1–1980-ம் தேதியில் பொது ஏலம் நடத்தப்பட்டு, கடைகள் அமைக்க அனுமதியும் வழங்கப்பட்டது. ஏலம் விடப்பட்டு பொறுப்பு ஒப்படைத்த நாளிலிருந்து மதுரை மாநகராட்சியால் மாமன்றம் அவ்வப்போது தீர்மானிக்கும் வாடகை உயர்வுகளுடன் லைசென்ஸ்தாரரிடமிருந்து வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே போல் அதற்கு அடுத்தாற்போல் இருக்கின்ற பசும்பொன் தேவர் மேம்பலத்திற்குக் கீழே உள்ள கடைகளுக்கும் மாநகராட்சி இதே மாதிரி நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி முத்து மேம் பாலத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. அதற்கான தகவல் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் தெரிவிக்கப்படும்.

மேல சங்கரன்குழி பேரூராட்சிப் பகுதிகளில் தெரு விளக்குகள்.

*3246 திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேல சங்கரன்குழி பேரூராட்சி பகுதிகளில் தெரு விளக்குகள் போடுவதில் ஏற்படும் காலதாமதத்தை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இப்பேரூராட்சியில் புதியதாக 91 விளக்குகள் அமைப்பதில் காலதாமதமாகியுள்ளதென தெரியவருகிறது.

(ஆ) உடனடியாக விளக்குகள் அமைக்குமாறு நாகர்கோவி லில் உள்ள தமிழ்நாடு மின்வாரிய செயற்பொறியாளரை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல சங்கரன்குழி பேரூராட்சியில் தெரு விளக்குகள் போடுவதற்கு மின்சார இலாகாவுக்குப் பணம் கட்டி இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. அதிகாரிகள் அந்தத் தெரு விளக்குகளைப் போடுவதற்கு காலதாமதத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலதாமதம் எதனால் ஏற்படுகின்றன. அது தெரு விளக்குகள் அமைப்பதற் கான பொருட்கள் இல்லாத காரணத்தினாலா அல்லது வேறு காரணங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சியில் மொத் தம் 283 விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை இதுவரை சரிவர இயங்கிக்கொண்டு வருகின்றன. மேலும் 91 விளக்குகள் அமைக்கப்படவேண்டுமென்று பேரூராட்சியில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 11—4—1989-ல்

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி முத்து மேம் பாலத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. அதற்கான தகவல் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் தெரிவிக்கப்படும்.

மேல சங்கரன்குழி பேரூராட்சிப் பகுதிகளில் தெரு விளக்குகள்.

*3246 திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேல சங்கரன்குழி பேரூராட்சி பகுதிகளில் தெரு விளக்குகள் போடுவதில் ஏற்படும் காலதாமதத்தை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இப்பேரூராட்சியில் புதியதாக 91 விளக்குகள் அமைப்பதில் காலதாமதமாகியுள்ளதென தெரியவருகிறது.

(ஆ) உடனடியாக விளக்குகள் அமைக்குமாறு நாகர்கோவிலில் உள்ள தமிழ்நாடு மின்வாரிய செயற்பொறியாளரை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல சங்கரன்குழி பேரூராட்சியில் தெரு விளக்குகள் போடுவதற்கு மின்சார இலாகாவுக்குப் பணம் கட்டி இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. அதிகாரிகள் அந்தத் தெரு விளக்குகளைப் போடுவதற்கு காலதாமதத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலதாமதம் எதனால் ஏற்படுகின்றன. அது தெரு விளக்குகள் அமைப்பதற்கான பொருட்கள் இல்லாத காரணத்தினாலா அல்லது வேறு காரணங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சியில் மொத்தம் 283 விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை இதுவரை சரிவர இயங்கிக்கொண்டு வருகின்றன. மேலும் 91 விளக்குகள் அமைக்கப்படவேண்டுமென்று பேரூராட்சியில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 11–4–1989-ல்

1990 மார்ச் 21]

9 தெருவிளக்குகள் அமைப்பதற்கு மட்டுமே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மின்வாரியத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது. மதிப்பீட்டுத் தொகை ரூ. 262.50 பைசா என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் இதுவரை மேற்கண்ட 8 விளக்குகள் இன்னும் வைக்கப்படவில்லை. அதை மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் மூலம் துரிதப்படுத்தச் சொல்லயிருக்கிறோம். காரணம் மெட்டீரியல்ஸ் இல்லை என்று சொல்லிக்கொண் டிருக்கின்றார்கள். உடனடியாக அவைகள் பொருத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள 82 தெரு விளக்குகள் மதிப்பீடு பற்றி இன்னும் துரிதமாக அனுப்பு வதற்கான ஏற்பாடுகள், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

9–20 மணி.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப் போல குளச்சல் சட்டமன்ற தொகுதியில் ராஜாக்கமங்கலம் பேரூராட்சி, அதுபோல கணபதிபுரம் பேரூராட்சி போன்ற பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க அந்தப் பேரூராட்சிகள் பணம் கட்டி பல வருடங்கள் ஆகியும் இன்னும் அவை போடப்படவில்லை. இத்தகைய காலதாமதங்களை அரசு உடனடியாகக் கவனித்து, அதைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை நாடு பூரா விலும் இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நம்முடைய தேவைக்கு ஏற்ப மின்சார வாரியத்திடம் உபகர ணங்கள் இல்லாமல் கஷ்டப்படும் நிலை இருக்கிறது. ஓரளவு நிதிநிலைமை கஷ்டம் இருந்தாலும்கூட உபகரணங்களும் இல் லாத காரணத்தால் பல இடங்களில் இப்பணி நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. அதைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை களை இரண்டு இலாகாக்களும் சேர்ந்து எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலம் பூராவிலும் பேரூ ராட்சிகளில் அமைச்சர் சொன்ன அடிப்படையில் பணம் கட்டி னாலும்கூட மின்சாரத் துறையில் போதுமான அளவுக்குச் சாதனங்கள் கொடுக்கப்படாததால் எல்லா கிராமங்களிலும் தெரு விளக்குகள் எரியாத நிலைமை இருக்கிறது. சில கிராமங் களில் பஞ்சாயத்துக்களில் மின்சாரத்துக்குரிய பணத்தைக் கட்டி, மின்சார சாதனத்தை வாங்கிக் கொடுத்தாலும்கூட போட முடியாத சூழ்நிலையும் பல பேரூராட்சிகளில் காணப் படுகிறது. இவ்வாறு இருக்கின்ற பேரூராட்சிகளில் உடனடி

யாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஆணையிட்டு, இந்தப் பொருள்களை வாங்கிக் கொடுக்க பஞ்சாயத்துக்களுக்கு ஆணையிடுவது குறித்து அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக பொருள்கள் என்பதில் எல்லாவற்றையும் சேர்க்க இயலாது. பொதுவாக மரம் நட்டு, அந்த மரத்தில் விளக்கு பொருந்துகிற சூழ்நிலை வருகிறபோது அதை அந்த வாரியத்திடம் இருந்துதான் பெற வேண்டியிருக்கிறது. வேறுபொருள் என்றால் கூட வெளியிலேயிருந்து வாங்க முடியும். இதை வாங்க முடியாது. வாங்கியும் அவர்களே அதைச் செய்ய வேண்டியிருக்கிற காரணத்தால் இதற்குரிய கான்ட்ராக்ட் உரிய இடத்தில் கொடுத்தும்கூட அது இதுவரையில் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. தனிப்பட்ட முறையில் அப்படி எல்லா சாமான்களும் இருந்து, கால தாமதம் ஏற்பட்டு, அது உடனடியாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் நிச்சயமாக நடவடிக்கை எடுத்து உரிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக பேரூராட்சிகளில் அல்லது ஊராட்சிகளில் தெரு விளக்கு போட வேண்டுமென்று மின்சார இலாகாவிற்கு விண்ணப்பித்து, அவர்களும் மதிப்பீடு தயாரித்து, அதற்காக சம்பந்தப்பட்ட தலைவர்கள் பணம் கட்டினாலும் கூட வருடக் கணக்கில் நடவடிக்கை எடுக்காத நிலைமை இருந்து வருகிறது. இதைப் போக்குகின்ற விதத்தில் அரசாங்கம் ஒரு கால நிர்ணயம் செய்து, பணம் கட்டிவிட்ட ஒரு குறிப்பிட்ட நாளுக்குள் அல்லது குறிப்பிட்ட மாதத்திற்குள் அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்று கால வரம்பை நிர்ணயித்து விதிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு இலாகா மட்டும் செய்வதல்ல. இரண்டு இலாகாக்களும் சேர்ந்து முடிவெடுத்து, இதற்கான உபகரணங்களை உருவாக்கி, அதுபோல செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரு விளக்கு அமைப்பதற்கு மின் வாரியத்திலே அதற்குரிய சாதனங்கள் இல்லையென்று சொன்னார்கள். ஆனால் எந்த இடத்திலேயும் தெரு விளக்கு அமைக்க வேண்டாமென்று மின்சார வாரியத்திற்கு

1990 மார்ச் 21]

அரசிடமிருந்து ஆணை வந்திருப்பதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அதை நீக்கி, உடனடியாக தெரு விளக்கு அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, அப்படி எனக்குத தெரிந்து எந்த ஒரு ஆணையும் இருப்பதாக தெரியவில்லை.

போத்தனூர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை

*905 திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், போத்தனூரில் உள்ள சிசி 2336 போத்தனூர் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை நிர்வாக முறைகேடு காரணமாக கலைக்கப்பட்டு இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : போத்தனூர் கூட்டுறவு நுகர் பொருள் பண்டகசாலையின் நிர்வாகத்தை சில குற்றச்சாட்டுகளுக்காக மண்டல இணைப் பதிவாளர் அவர்கள் கலைத்து விடுகிறார்கள். பின்னால் மேல் முறையீடு செய்யப்பட்டு 5–4–1989 அன்று நிர்வாகம் மீண்டும் பழைய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அதற்குப் பின்னால் 3–7–1989 அன்று அரசினுடைய அவசரச் சட்டத்தின் பிரகடனம் காரணமாக மீண்டும் அந்தப் பண்டகசாலை கலைக்கப்பட்டு தனி அதிகாரியிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9.25 மணி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலேகூட 5–4–1989 அன்று மீண்டும் பழைய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்தக் கேள்வியை குறுகிய கால வினாவாக, அமைச்சர் அவர்களுடைய

1990 மார்ச் 21]

அரசிடமிருந்து ஆணை வந்திருப்பதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அதை நீக்கி, உடனடியாக தெரு விளக்கு அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, அப்படி எனக்குத தெரிந்து எந்த ஒரு ஆணையும் இருப்பதாக தெரியவில்லை.

போத்தனூர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை

*905 திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், போத்தனூரில் உள்ள சிசி 2336 போத்தனூர் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை நிர்வாக முறைகேடு காரணமாக கலைக்கப்பட்டு இருப்பது அரசின் கவனத் திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : போத்தனூர் கூட்டுறவு நுகர் பொருள் பண்டகசாலையின் நிர்வாகத்தை சில குற்றச்சாட்டுகளுக்காக மண்டல இணைப் பதிவாளர் அவர்கள் கலைத்து விடுகிறார்கள். பின்னால் மேல் முறையீடு செய்யப்பட்டு 5–4–1989 அன்று நிர்வாகம் மீண்டும் பழைய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்படு கிறது. அதற்குப் பின்னால் 3–7–1989 அன்று அரசினுடைய அவசரச் சட்டத்தின் பிரகடனம் காரணமாக மீண்டும் அந்தப் பண்டகசாலை கலைக்கப்பட்டு தனி அதிகாரியிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

9.25 மணி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர், அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலேகூட 5–4–1989 அன்று மீண்டும் பழைய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்தக் கேள்வியை குறுகிய கால வினாவாக, அமைச்சர் அவர்களுடைய

ஒப்புதலோடு சென்ற ஆண்டு கொடுத்திருந்தேன். 13 மாதங்கள் ஆகியிருக்கின்றன. குறுகிய கால வினாவிற்கு இவ்வளவு காலம் கடந்து பதில் வர வேண்டிய அவசியமென்ன? குறுகிய கால வினா என்றால் என்ன? (Starred Question) உடுக்குறியிட்ட வினா என்றால் என்ன? இவ்வளவு காலம் கடந்து பதில் தர வேண்டிய அவசியம் என்ன? இதை (Point of Order) ஆக எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா நேரத்தில் 'Point of Order' இல்லை.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறுகிய கால வினா என்பதற்கான குறிப்பு இந்தக் கோப்பில் இல்லை. அவர்கள் 3–7–1989 ஆம் தேதிக்கு முன்னால் கேள்வி கேட்ட காரணத்தாலேதான், அப்படிப் பதில் தரப்பட்டுள்ளது. இப்போது நிலைமைகள் வேறு மாதிரி இருக்கின்றன என்பதால், அப்போது அவர் என்ன எதிர் பார்த்தாரோ அந்த நிலைமைதான் இப்போது அந்தச் சங்கத்திலே இருக்கிறது. அது கலைக்கப்பட்டு, தனி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதை விட்டு விடுகிறேன். நோய்க்குத்தான் சிகிச்சை. நோய் இல்லாவிட்டால் சிகிச்சைக்கு அவசியமில்லை. எந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாகிகள் தவறு செய்கிறார்களோ, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்படுவதைப் பற்றி யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. ஆனால் நல்ல நிர்வாகங்களின் கீழ் இயங்கிக் கொண்டிருந்த சங்கங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி கலைக்கப்பட்ட சங்கங்கள் மீண்டும் பழைய நிர்வாகத்திடமே ஒப்படைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எந்த நல்ல சங்கங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். நான் ஏற்கெனவே தெரிவித்தபடி 3–7–1989 ஆம் தேதியன்று அரசினுடைய அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் ஒரு அவசரச் சட்டத்தை அரசாங்கம் பிறப்பித்து எல்லா சங்கங்களும் தனி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. தேர்தல்கள் நடத்து

வதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் தான் சங்கங்கள் கலைக்கப்பட்டு தனி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, வேறு நோக்கத்தின் அடிப்படையில் சங்கங்கள் கலைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் ஏராளமான ஊழல்கள் நடந்து வருகின்றன என்பதைப் பல உறுப்பினர்கள் ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எடைக் குறைவு, வரக்கூடிய பொருள்களைப் பதுக்கி கள்ள மார்க்கெட்டில் விற்பதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. எனவே நிர்வாகத்தைக் கலைத்தால் மட்டும் போதாது. அப்படிப்பட்ட பண்டகசாலைகளின் நிலைமைகளை நானே சோதனை செய்து மேலதிகாரிக்கு விண்ணப்பித்தும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேறு இடத்திற்கு மாற்றுகிறார்களே, தவிர அடிப்படையில் எந்தவித மாற்றமும் இல்லை. எனவே, இதைக் கண்காணிக்க அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு போட்டால், இதற்கு உடனடியாகப் பரிகாரம் காணலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விழிப்புக் குழுக்கள் ஆங்காங்கே கிராம அளவிலே போடப்பட்டிருக்கின்றன. இப்போது அதையும் மீறி, மாவட்ட அளவில் அனைத்துக் கட்சிகளுடைய சட்டப் பேரவை உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு மாவட்டக் குழுவும் அமைக்கப்பட்டு, அது 2 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும் ; அதில் அத்தியாவசியப் பண்டங்கள் வினியோகம் பற்றிய முறைகள், முறைகேடுகளைப் பற்றி எல்லாப் பிரச்சினைகளும் விவாதிக்கப்பட வேண்டுமென்று சொல்லி, அந்த நோக்கத்தின் அடிப்படையில் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் கவனத்திற்கு, எந்த ஒரு கடையிலாவது எடைக் குறைவு இருக்கிறதென்ற தகவல் வந்திருக்குமானால், அதை உரிய அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லியும், உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்குமானால், மாவட்ட அளவில் உள்ள கூட்டத்தில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது, நடவடிக்கை எடுக்கவும் வாய்ப்பு இருக்கிறது. அதை அவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்திருப்பதால் கைத்தறி நெசவாளர்

களுக்கு வேண்டிய நூல் கிடைக்கவில்லை. மேலும் அவர் நெய்த நூலை விற்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. (மணி யடிக்கப்பெற்றது).

9-30 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதுதானா ?

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது கூட்டுறவுச் சட்ட விதிகளின்படி தேர்தல் நடத்துவதற்காகக் கலைக்கப்பட்டு தனி அதிகாரியிடம் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அப்படித் தேர்தல் நடத்துவதற்காக கலைக்கப்பட்டு, பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அந்தக் கூட்டுறவு அமைப்புகளில் நியமன டைரக்டர்ஸ் போர்டு நியமிக்கப்படக் கூடிய நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. அதை நிறுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எந்தச் சங்கத்தில் நியமனம் நடந்து கொண்டிருக்கிறது என்று உறுப்பினர் விளக்கினால் நலமாக இருக்கும். மேலும், தேர்தலை நடத்துவதற்கும், முறைப் படுத்துவதற்கும், உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் அந்தந்தச் சங்கங்களினுடைய பிரத்தியேக நிலைமையைக் கருதி ஆங்காங்கு நியமனங்கள் ஏற்பட்டு இருக்கலாம். எனவே, விளக்கிச் சொன்னால் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு துணைத் தலை வர் அவர்களே, நிர்வாக முறைகேடு காரணமாகக் கடந்த ஆண் டில் எந்தெந்தப் பண்டகசாலைகள் கலைக்கப்பட்டு இருக்கிறது என்ற தகவலை அமைச்சர் அவர்கள் சபைக்கு அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 3–7–1989 ஆம் தேதிய அரசின் அவசரச் சட்டத்தின் அடிப்படையில் அனைத்துச் சங்கங்களும் கலைக்கப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, போத்தனூர் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை நிர்வாக முறைகேடு காரணமாக, அமைச்சர் அவர்கள் சொன்னது போல, ஒரு முறை கலைக்கப்பட்டு மீண்டும் ஜாயின்ட் ரிஜிஸ்டிரார் அவர்கள் அதை விசாரித்து,மறுபடியும் பழைய நிர்வாகத்திடத்தில்

1990 மார்ச் 21]

ஒப்படைத்து, இப்போதைய தமிழக அரசின் உத்திரவின்படி கலைக்கப்பட்டு இருக்கின்றது. அது தனி அதிகாரியினுடைய நிர்வாகப் பொறுப்பிலே ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நான் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது, இது போன்ற தவறான நிர்வாக முறைகேடு காரணமாக நடவடிக்கை எடுக்கின்றபோது சம்பந்தப்பட்டவர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதைத் தவிர வேறு நடவடிக்கை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் கூட குறிப்பிட்டார்கள். என்ன குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்டவர்கள் மீது சுமத்தப்பட்டது, அந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஜாயிண்ட் ரிஜிஸ்டிரார் போன்ற அதிகாரிகள் விசாரணை செய்து அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கினார்கள் என்கின்ற வகையில் இனி கடுமையான நடவடிக்கைகள் மூலம் தான் இந்த நிர்வாகச் சீர்கேட்டைச் செம்மைப்படுத்த முடியும் என்கின்ற அளவிலே அரசு அதற்கான நடவடிக்கைகளில் இறங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலேயே, நீண்ட கேள்வியிலேயே விளக்கமான பதிலும் அடங்கி இருப்பதாகக் கருதுகின்றேன். குற்றச்சாட்டுகள் பற்றிய விவரங்களை இப்போது வெளியிடத் தேவையில்லை. ஏனென்றால் அதற்கு நிவாரணம் தேடப்பட்டுவிட்ட காரணத்தால்.

நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்கல்

*2273 பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகள் வேளாண்மைக் கிணறுகளை ஆழப்படுத்த நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு விவசாயிக்கும் அதிகபட்ச கடன் தொகை எவ்வளவு வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பிரதம நிலவள வங்கிகள் மூலமாக கிணற்றை ஆழப்படுத்துவதற்கு கடன் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. ''நாபார்டு'' வங்கியினுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதிகபட்சமாக ரூ. 12,300 கிணற்றை ஆழப்படுத்துவதற்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 மார்ச் 21]

ஒப்படைத்து, இப்போதைய தமிழக அரசின் உத்திரவின்படி கலைக்கப்பட்டு இருக்கின்றது. அது தனி அதிகாரியினுடைய நிர்வாகப் பொறுப்பிலே ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நான் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது, இது போன்ற தவறான நிர்வாக முறைகேடு காரணமாக நடவடிக்கை எடுக்கின்றபோது சம்பந்தப்பட்டவர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதைத் தவிர வேறு நடவடிக்கை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் கூட குறிப்பிட்டார்கள். என்ன குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்டவர்கள் மீது சுமத்தப்பட்டது, அந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஜாயின்ட் ரிஜிஸ்டிரார் போன்ற அதிகாரிகள் விசாரணை செய்து அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கினார்கள் என்கின்ற வகையில் இனி கடுமையான நடவடிக்கைகள் மூலம் தான் இந்த நிர்வாகச் சீர்கேட்டைச் செம்மைப்படுத்த முடியும் என்கின்ற அளவிலே அரசு அதற்கான நடவடிக்கைகளில் இறங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலேயே, நீண்ட கேள்வியிலேயே விளக்கமான பதிலும் அடங்கி இருப்பதாகக் கருதுகின்றேன். குற்றச்சாட்டுகள் பற்றிய விவரங்களை இப்போது வெளியிடத் தேவையில்லை. ஏனென்றால் அதற்கு நிவாரணம் தேடப்பட்டுவிட்ட காரணத்தால்.

நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்கல்

*2273 பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகள் வேளாண்மைக் கிணறுகளை ஆழப்படுத்த நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு விவசாயிக்கும் அதிகபட்ச கடன் தொகை எவ்வளவு வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பிரதம நிலவள வங்கிகள் மூலமாக கிணற்றை ஆழப்படுத்துவதற்கு கடன் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. ''நாபார்டு'' வங்கியினுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதிகபட்சமாக ரூ. 12,300 கிணற்றை ஆழப்படுத்துவதற்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு கிணறுகளை ஆழப் படுத்துவதற்குத் தரப்படுகின்ற கடன் தொகைகள் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தக் கடன்களை வழங்குவதில் ஒரு கிணறுக்கும் மற்றொரு கிணறுக்கும் இடையிலே இருக்கிற தூரம் கணக்கிடப்படுகிறது. அது "நாபார்டு" வங்கியினுடைய பரிந்துரை என்று அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லி விடலாம். ஆனால் அதைத் தளர்த்தி சிறு விவசாயிகளுக்கு அதிக அளவிலே கடன் தருவதற்கு ஏற்பாடுகள் செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு விவசாயிகள்மீது நிறைந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. "நாபார்டு" வங்கி விதித்து இருக்கிற நிபந்தனைகளை அவர்கள் எளிதில் மாற்றிக் கொள்வதில்லை. அவர்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் கடன் வழங்க வேண்டிய சூழ்நிலையில் நிலவள வங்கிகள் இருக்கிறது. முடிந்த அளவுக்கு இந்த அரசு விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகள் செய்ய முடியுமோ அந்த சலுகைகளைக் கேட்டுப் பெறுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-35 மணி

பேராசிரியர் க. பொன்னுசாமி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக் கடன்களைப் பெற முடியாத நிலையிலே இருக்கின்ற சிறு விவசாயிகளுக்கு அவர்கள் சுய வேலை வாய்ப்பைப் பெறும் வகையில் மாற்றுத் திட்டம் ஏதேனும் கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டங்கள் இப்பொழுது இல்லை.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாயிகள் வேளாண்மைக் கிணறுகளை ஆழப்படுத்த நில வங்கிகள் மூலம் இதுவரை வழங்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் ; பேரவைத் துணைத் தலைவரவர்களே, மணப்பாறை தொடர்பாகத்தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. மணப்பாறை பிரதம நிலவள வங்கியைப் பொறுத்தமட்டில் 1988–89 ஆம் ஆண்டுக்கு 15 பேர்களுக்கு 88,600 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் அத்தகைய விவரங்கள் வேண்டுமேயானால் உறுப்பினர் தனிக் கேள்வி போடவும்.

1990 மார்ச் 21]

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே முன்பு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலேயும் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் கூட்டுறவு அமைச்சராக இருந்த பொழுதும்தான் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று இப்படி ஏராளமான கிணறுகள் ஆழப்படுத்துவதற்காக கடன்கள் வழங்கப்பட்டன. பிறகு பல்லாண்டுக் காலமாக கொடுத்த கடனை வசூலிப்பதிலேயே அந்த வங்கிகள் கவனம் செலுத்தினவே தவிர, புதிதாகக் கடன்கள் வழங்கப்படவில்லை. எனவே புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் மீண்டும் தாராளமாக இப்படிப்பட்ட ஏழை விவசாயிகளுக்குப் புதுக் கிணறுகளை வெட்டுவதற்கும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் அதிகத் தொகையை ஒதுக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அரசாங்கத்தை, பொறுத்தமட்டில் விவசாயிகளுக்குத் தாராளமாகக் கடன் வழங்குகின்ற எண்ணம் இருக்கிறது. இருந்தாலும் நாபார்டு வங்கி ஒவ்வொரு பிரதம நிலவள வங்கியும் கொடுத்த கடன்களை எந்த அளவிற்கு வசூல் செய்கிறது என்பதைப் பார்த்து அடுத்த ஆண்டு சில நிபந்தனைகளை விதிக்கிறது. வசூல் செய்யப்பட்ட தொகையை மையமாகக் கொண்டு இவ்வளவு தொகைதான் இன்னின்ன வகைகளுக்கு கடனாக வழங்கப்பட வேண்டுமென்று நாபார்டு நிபந்தனை விதிக்கிறது. நிபந்தனைகளையொட்டித்தான் பிரதம நிலவள வங்கிகள் செய்ல்பட வேண்டியிருக்கிறது. எனவே, அந்த நிபந்தனைக்கு உட்பட்டு, நிலவள வங்கி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், நாபார்ட் வங்கியைப் பொறுத்தமட்டில் விவசாயிகளுக்கு மேலும் சலுகைகள் தர வேண்டுமென்று சொல்லி இந்த அரசு கோரிக்கை விடுப்பதற்குத் தயாராக இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியபொழுது, அதாவது ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் உள்ள டிஸ்டன்ஸை வைத்து, 400, 450 அடி என்று நினைக்கிறேன் 750 அடி என்று நினைக்கிறேன். பல ஆண்டுக் காலத்திற்கு முன்பு, 100 ஆண்டுகளுக்கு முன்பு, 10, 20 ஏக்கர் இருந்தது என்றால், அமைச்சரவர்கள் ஒரு கிணற்றை வெட்டியிருப்பார்கள், என்னைப்போன்ற சாதாரண ஏழைகள் ஒரு கிணறு வெட்டியிருப்போம். (சிரிப்பு) அந்த ஏழை கிணறு வெட்டுவதற்கு முடியாமல், பேங்கிலே கடன் வாங்க முடியாமல் தவிக்கிறார்களே, அதைத் தவிர்ப்பதற்கு நாபார்டுக்கு எழுதி, மத்திய அரசுக்கு எழுதி, இந்தச் சட்டத்தைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம். தலைவர் அவர்களே, அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

திருமயம் தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள்

*1689 திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருமயம் தொகுதியில், சிறுதொழில் மானியக்கடன், அரசு நிலங்களைக் கையகப்படுத்தி ஆழ்குழாய்க் கிணறுகள் ஆகியவற்றின் மூலம் விவசாயத்தைப்பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் இலவசமாக அமைக்கத் திட்டம் ஏதுமில்லை. மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமும், சிறு தொழில் மானியத்துடன் அரசு நிலங்களை கையகப்படுத்தி ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டமும் எதுவுமில்லை. இருப்பினும் விவசாயிகள் சங்கம் அமைத்து, நிதி வசதி பெற்று வேளாண்மைப் பொறியியல் துறையை அணுகினால், விசைத்துளைக்கருவி குறைந்த வாடகைக்கு வழங்கிப் பணியை செய்து கொடுக்க இயலும்.

திரு. ஆலவயல் சுப்பையா ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் டி. பி. ஏ. பி. திட்டத்தின் கீழ் கடந்த காலத்தில் நிறைய ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டன. ஆனால், தற்சமயம் சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகள் போடுவதை மத்திய அரசு தடை செய்வதாகச் சொல்கிறார்கள். சாதாரண கிணறுகள் மட்டுமே அமைக்கப்படுகின்றன. நிலத்தடி நீர் மிகவும் ஆழத்திற்குப் போய் விட்டமையாலும், கிணறு வெட்டிப் பயன் இல்லை என்பதாலும், மீண்டும் சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகள் போடும் திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி

*6499 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது, எங்கு தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம். தலைவர் அவர்களே, அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

திருமயம் தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள்

*1689 திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருமயம் தொகுதியில், சிறுதொழில் மானியக்கடன், அரசு நிலங்களைக் கையகப்படுத்தி ஆழ்குழாய்க் கிணறுகள் ஆகியவற்றின் மூலம் விவசாயத்தைப்பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் இலவசமாக அமைக்கத் திட்டம் ஏதுமில்லை. மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமும், சிறு தொழில் மானியத்துடன் அரசு நிலங்களை கையகப்படுத்தி ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டமும் எதுவுமில்லை. இருப்பினும் விவசாயிகள் சங்கம் அமைத்து, நிதி வசதி பெற்று வேளாண்மைப் பொறியியல் துறையை அணுகினால், விசைத்துளைக்கருவி குறைந்த வாடகைக்கு வழங்கிப் பணியை செய்து கொடுக்க இயலும்.

திரு. ஆலவயல் சுப்பையா ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் டி. பி. ஏ. பி. திட்டத்தின் கீழ் கடந்த காலத்தில் நிறைய ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டன. ஆனால், தற்சமயம் சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகள் போடுவதை மத்திய அரசு தடை செய்வதாகச் சொல்கிறார்கள். சாதாரண கிணறுகள் மட்டுமே அமைக்கப்படுகின்றன. நிலத்தடி நீர் மிகவும் ஆழத்திற்குப் போய் விட்டமையாலும், கிணறு வெட்டிப் பயன் இல்லை என்பதாலும், மீண்டும் சமுதாய ஆழ் குழாய்க் கிணறுகள் போடும் திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி

*6499 திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது, எங்கு தொடங்கப்படும் ?

1990 மார்ச் 21]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

9-40 மணி

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைவதற்கு முன்பு கேரளாவின் நெற்களஞ்சிய மாகக் கருதப்பட்டு, நாஞ்சில்நாடு என்ற பெருமையோடு அழைக் கப்பட்டு விவசாயத்தையே நம்பியிருக்கின்ற எங்கள் மாவட்டத் தில் அரசுக் கல்லூரி இல்லாத குறையினைப் போக்கவும், பொரு ளாதாரத் துறையில் பெருமைத் தேடித் தந்த ஆராயச்சிப் பண் ணையான திருப்புவிசாலப் பண்ணையை 'டி.பி.எஸ். 1, டி.பி. எஸ். 2' போன்ற உயர் ரக விதைகளை உருவாக்குகின்ற இடத் தில் போதிய தண்ணீர் வசதியிருந்தும் போதிய இடவசதியிருந்தும் நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி யில் எங்கள் மாவட்டத்தை புறக்கணிக்காமல், இந்த நிதி ஆண்டிலேயே, ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகத்தின் கீழ் தற்போது கோயம்புத்தூரில், மதுரை, கிள்ளிக்குளம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மூன்று இடங் களிலும், 1989 ஆம் ஆண்டில், திருச்சி மாவட்டத்தில் குமலூர் கிராமத்திலும், புதிதாகத் துவங்கப்பட்ட வேளாண்மைக் கல்லூரி யையும் சேர்த்து மொத்தம் நான்கு வேளாண்மைக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அதற்குமேல் இந்த ஆண்டு ஆரம்பிப்ப தற்கு அரசாங்கத்திடம் உத்தேசம் இல்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி ஆரம்பிப்பதற் குச் சில ஆண்டுகளுக்கு முன்பு இடமே பார்க்கப்பட்டது. தடிக் காரன் கோணம் என்ற இடத்தையும், புளியூர்குறிச்சிக் கோட் டைக்குள் இருக்கின்ற 90 ஏக்கர் நிலத்தையும் அரசின் சார்பிலே வந்து பார்த்துச் சென்றதாக எனக்கு நல்ல நினைவு இருக்கிறது. எனவே, திருப்பதிசாரத்திலே ஆய்வில் கிடக்கின்ற அந்தப் பலன் களையெல்லாம், முடிவுகளையெல்லாம், நல்லமுறையிலே பயன் படுத்தி, நல்ல விளைவுகளைக் காணவேண்டும் என்று சொன் னால், அரசு கன்னியாகுமரி மாவட்டத்திலே, இந்த விவசாயக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையிலே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக நான்கு வேளாண்மைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கீழும், வேளாண்மைக் கல்லூரி ஒன்று செயல்பட்டு வருகிறது. ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கவேண்டுமானால், ஐந்து ஆண்டுக்கு மொத்தச் செலவு 27 கோடி ரூபாய் தேவைப்படும். அதுவும், இப்பொழுது உள்ள சூழ்நிலையில் வேளாண்மைப் பட்டம் படித்த பட்டதாரிகள் 1,300-க்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரி கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிக்க இயலுமா என்பதை வருங்காலத்தில் யோசிக்கலாம்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு, தற்போது நடந்து வரும் மதுரை வேளாண்மைக் கல்லூரியில் ஆராய்ச்சி நிலையம், நல்ல மண் வளம், பல்கலைக் கழகம் அமைக்க கட்டிடம், போதுமான இடம் உள்ள காரணத்தினால், அதோடு இக்கல்லூரி வெள்ளி விழாக் காணும் மகிழ்ச்சிகரமான இவ்வாண்டில், மதுரை வேளாண்மை பல்கலைக் கழகம் அமைக்க கழக அரசு நடவடிக்கை எடுக்குமா என அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை அரசாங்கம் பரிசீலிக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

குந்தா அணைத் தண்ணீர்

*2033 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அவினாசி, பல்லடம் தொகுதி விவசாயிகளுக்கு குந்தா அணையில் இருந்து தண்ணீர் கொண்டுவர அரசு திட்டம் வகுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இல்லை.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையிலே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக நான்கு வேளாண்மைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அதுமட்டுமல்லாமல், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கீழும், வேளாண்மைக் கல்லூரி ஒன்று செயல்பட்டு வருகிறது. ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கவேண்டுமானால், ஐந்து ஆண்டுக்கு மொத்தச் செலவு 27 கோடி ரூபாய் தேவைப்படும். அதுவும், இப்பொழுது உள்ள சூழ்நிலையில் வேளாண்மைப் பட்டம் படித்த பட்டதாரிகள் 1,300–க்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் மேலும் ஒரு வேளாண்மைக் கல்லூரி கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிக்க இயலுமா என்பதை வருங்காலத்தில் யோசிக்கலாம்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு, தற்போது நடந்து வரும் மதுரை வேளாண்மைக் கல்லூரியில் ஆராய்ச்சி நிலையம், நல்ல மண் வளம், பல்கலைக் கழகம் அமைக்க கட்டிடம், போதுமான இடம் உள்ள காரணத்தினால், அதோடு இக்கல்லூரி வெள்ளி விழாக் காணும் மகிழ்ச்சிகரமான இவ்வாண்டில், மதுரை வேளாண்மை பல்கலைக் கழகம் அமைக்க கழக அரசு நடவடிக்கை எடுக்குமா என அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை அரசாங்கம் பரிசீலிக்கும்.

குந்தா அணைத் தண்ணீர்

*2033 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அவினாசி, பல்லடம் தொகுதி விவசாயிகளுக்கு குந்தா அணையில் இருந்து தண்ணீர் கொண்டுவர அரசு திட்டம் வகுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இல்லை.

1990 மார்ச் 21]

9-45 மணி

திரு. கே. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கேள்வி ஒரு முக்கியமான கேள்வியாகும். 1967 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா அவர்கள் தலைமையில் இங்கே அரசாங்கம் அமைத்தபோது, பாராளுமன்றத்தில் நான் உறுப்பினராக இருந்து அன்று இருந்த மத்திய அரசாங்கத்தினுடைய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களிடத்தில் பேசி, குந்தா கழிவுநீர்த் திட்டம் கோவை மாவட்டத்தில் வேறு எந்த நதி நீர் பாசனத் திட்டத்திற்கும் வழியில்லாத நிலையில், பல்லடம் அவிநாசி ஆகிய இரண்டு தாலுக்காக்களுக்குத் தண்ணீர் கொடுக்க குறைந்தபட்சம் குளம், குட்டைகளை நிரப்புவதற்கு தண்ணீர் கொடுக்க இந்த குந்தா நீர்த் திட்டத்தை, 'with sizeable inflow' தண்ணீர் கொடுக்க முடியும் என்று அவர் சொன்னதன்பேரில் அண்ணா அவர்களுக்கு நானே ஒரு மெமோரண்டம் கொடுத்தேன். அதன்பேரில் காரமடையில் ஒரு ஆபிஸ் கூட துவங்கி வேலை ஆரம்பித்தார்கள். பிறகு அது கைவிடப்பட்டது. அதற்குஎன்ன காரணமென்று தெரியவில்லை. அந்தத் திட்டத்தை அமலாக்குவதற்கு இந்த அரசு முன் வர வேண்டும். கொஞ்சம் செலவு ஜாஸ்தியானாலும், இதன்மூலம் இரண்டு தாலுக்காக்கள் காப்பாற்றப் படும். அதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, முதலில் மேல் பவானித் திட்டம், கீழ் பவானித் திட்டம் என்று இரண்டு திட்டங்களாக இதனை அமல்படுத்தலாமா என்று 1947ஆம் ஆண்டிற்கு முன்னால் யோசிக்கப்பட்டது. பின்னர் கீழ் பவானித் திட்டம் மட்டும் போதுமென்று நினைத்து 1952ஆம் ஆண்டு அந்தத் திட்டம் முடிக்கப்பட்டு இன்றையதினம் அந்தப் பகுதியில் பாசன வசதியை கீழ் பவானி திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கிடையில் அவிநாசி, பல்லடம் வட்டங்களில் தண்ணீர் வரவேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. உடுமலைப் பேட்டையில் ஒரு பகுதியும் அதிலே சேருகிறது. உடுமலைப்பேட்டைக்கு பி.ஏ.பி. தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். அந்தச் செய்தியை அரசு கவனத்தில் கொள்ளும்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, அவிநாசி, பல்லடம் பகுதி விவசாயிகளுக்கு குந்தாவிலிருந்து தண்ணீர் கொண்டு வரக்கூடிய திட்டம் 1947ஆம் ஆண்டிற்கு முன்னாலும் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்திலும், அதற்கு முன்பும் பரிசீலனை செய்யப்பட்டு வழித்தடங்களில் எல்லாம் இந்த வழியாகத்தான் குந்தா நீர் வருகிறது என்று போர்டுகள்

எல்லாம் கூட போடப்பட்டன. பின்னால் ஆய்வு செய்த அதிகாரிகள் மேட்டுப்பாங்கான பகுதியாக இருப்பதால் தண்ணீர் கொண்டு வர வாய்ப்பில்லை என்கிற முறையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல சொல்லி, பாண்டியாறு புன்னம்புழாத் திட்டம் இதற்கு வசதியானது என்று பின்னால் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆகவே, குந்தா கழிவுநீர் கொண்டு வர வாய்ப்பில்லை என்றாலும் பாண்டியாறு புன்னம்புழாத் திட்டம் அவிநாசி, பல்லடம், கோயம்புத்தூர் தாலுக்காக்களுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம் என்ற முறையில், அதையாவது இந்த அரசு விரைந்து செயல்படுத்த முனையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் அரசுக்கு மாறுபட்ட கருத்தில்லை. எனவே தான், கேரளா மாநிலத்தின் நீர்ப் பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு பேபி ஜான் அவர்களுடன் பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் குறித்து பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, குந்தா அணையிலிருந்து வருகிற தண்ணீர் பவானிசாகர் அணை மூலம் கீழ்பவானி திட்டத்தில் வருகிறது. இன்றைக்கு இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒருமுறைதான் தண்ணீர் விடப்படுகிறது. இந்த நிலையில் தண்ணீர் வந்துகொண்டிருக்கிற நேரத்தில் மேலே அணைகளை உருவாக்கித் தண்ணீர் வழங்குவதன் வாயிலாக ஏறத்தாழ $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் பாசனம் செய்கிற கீழ்பவானி பாசனத்தில் இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படுவார்களா என்பதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, கீழ் பவானித் திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேல் பவானித் திட்டம் வரக்கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்களா ? அது வராது. (சிரிப்பு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேராப்பாறை அணைக்கட்டுத் திட்டம்

* 2075 திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், சாப்டூர் மலைப்பகுதியில் பேராப்பாறை அணைக்கட்டுத் திட்டத்திற்காக சாப்டூரில் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அணைக்கட்டும் பணி எப்போது தொடங்கப்படும் ?

எல்லாம் கூட போடப்பட்டன. பின்னால் ஆய்வு செய்த அதிகாரிகள் மேட்டுப்பாங்கான பகுதியாக இருப்பதால் தண்ணீர் கொண்டு வர வாய்ப்பில்லை என்கிற முறையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல சொல்லி, பாண்டியாறு புன்னம்புழாத் திட்டம் இதற்கு வசதியானது என்று பின்னால் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆகவே, குந்தா கழிவுநீர் கொண்டு வர வாய்ப்பில்லை என்றாலும் பாண்டியாறு புன்னம்புழாத் திட்டம் அவிநாசி, பல்லடம், கோயம்புத்தூர் தாலுக்காக்களுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம் என்ற முறையில், அதையாவது இந்த அரசு விரைந்து செயல்படுத்த முனையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் அரசுக்கு மாறுபட்ட கருத்தில்லை. எனவே தான், கேரளா மாநிலத்தின் நீர்ப் பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு பேபி ஜான் அவர்களுடன் பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் குறித்து பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, குந்தா அணையிலிருந்து வருகிற தண்ணீர் பவானிசாகர் அணை மூலம் கீழ்பவானி திட்டத்தில் வருகிறது. இன்றைக்கு இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒருமுறைதான் தண்ணீர் விடப் படுகிறது. இந்த நிலையில் தண்ணீர் வந்துகொண்டிருக்கிற நேரத்தில் மேலே அணைகளை உருவாக்கித் தண்ணீர் வழங்குவதன் வாயிலாக ஏறத்தாழ $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் பாசனம் செய்கிற கீழ்பவானி பாசனத்தில் இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படுவார்களா என்பதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, கீழ் பவானித் திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேல் பவானித் திட்டம் வரக்கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்களா ? அது வராது. (சிரிப்பு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேராப்பாறை அணைக்கட்டுத் திட்டம்

* 2075 திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், சாப்டூர் மலைப்பகுதியில் பேராப்பாறை அணைக்கட்டுத் திட்டத்திற்காக சாப்டூரில் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அணைக்கட்டும் பணி எப்போது தொடங்கப்படும் ?

1990 மார்ச் 21]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ. 933 இலட்சங்கள் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. தேவையான வனத்துறை நிலங்களைக் கையகப்படுத்த வனத் துறையின் ஒத்திசைவும் விரிவான திட்ட அறிக்கைக்கு அரசின் ஒப்புதலும் வழங்கியபின் அணை கட்டும் பணி தொடங்கப்படும்.

மின் இணைப்பில் முன்னுரிமை.

*2704 திரு. நா. இராமகிருஷ்ணன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நீர்ப்பாசனத்தை நம்பியுள்ள விவசாயி களுக்கு காவிரி நீர் வறண்ட காலங்களில் நன்செய் நிலங் களில் ஆழ்துளை கிணறு போட்டவுடன் மின் இணைப்பில் வழங்கும் முன்னுரிமை கம்பம் பகுதி விவசாயிகளுக்கும் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

9-50 மணி

திரு. நா. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் பெரியார் அணையை நம்பி வாழ்கிறார்கள். மழையே பொழியாத காலங்களில், பெரியார் அணையிலிருந்து தண்ணீர் விவசாயி களுக்குக் கிடைக்காத காரணத்தினால், வயல்களில் ஆழ் துளை கிணறுகள் போட்டு, அதன் மூலமாக அரிசி உற்பத்தி யைப் பெருக்குகின்ற அந்த நிலைக்கு, அரசு பம்ப்-செட் மோட்டாரை வைக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, விவசாயிகள் ஆற்றை நம்பி வாழ்கிறார்களா, அணையை நம்பி வாழ்கிறார்களா; என்பதல்ல இங்கு பிரச்சினை. Compulsory Monopoly Procurement— ஏகபோகக் கொள்முதல் செய்கிற பகுதிகளுக்குத்தான், மின் இணைப்புத் தருவதிலே முன்னுரிமை

1990 மார்ச் 21]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ. 933 இலட்சங்கள் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. தேவையான வனத்துறை நிலங்களைக் கையகப்படுத்த வனத் துறையின் ஒத்திசைவும் விரிவான திட்ட அறிக்கைக்கு அரசின் ஒப்புதலும் வழங்கியபின் அணை கட்டும் பணி தொடங்கப்படும்.

மின் இணைப்பில் முன்னுரிமை.

*2704 **திரு. நா. இராமகிருஷ்ணன் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நீர்ப்பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளுக்கு காவிரி நீர் வறண்ட காலங்களில் நன்செய் நிலங்களில் ஆழ்துளை கிணறு போட்டவுடன் மின் இணைப்பில் வழங்கும் முன்னுரிமை கம்பம் பகுதி விவசாயிகளுக்கும் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

9-50 மணி

திரு. நா. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் பெரியார் அணையை நம்பி வாழ்கிறார்கள். மழையே பொழியாத காலங்களில், பெரியார் அணையிலிருந்து தண்ணீர் விவசாயிகளுக்குக் கிடைக்காத காரணத்தினால், வயல்களில் ஆழ்துளை கிணறுகள் போட்டு, அதன் மூலமாக அரிசி உற்பத்தியைப் பெருக்குகின்ற அந்த நிலைக்கு, அரசு பம்ப்-செட் மோட்டாரை வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, விவசாயிகள் ஆற்றை நம்பி வாழ்கிறார்களா, அணையை நம்பி வாழ்கிறார்களா; என்பதல்ல இங்கு பிரச்சினை. Compulsory Monopoly Procurement— ஏகபோகக் கொள்முதல் செய்கிற பகுதிகளுக்குத்தான், மின் இணைப்புத் தருவதிலே முன்னுரிமை

தரவேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. அதன் அடிப்படையிலே கீழைத் தஞ்சை முழுவதும், திருச்சி மாவட்டத்திலே குளித்தலை, முசிறி, திருச்சி, கரூர், லால்குடி மற்றும் உடையார்பாளையம், தென்னாற்காடு மாவட்டத்திலே காட்டுமன்னார் கோயில், சிதம்பரம், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆவுடையார்கோயில் ஆகிய வட்டங்கள் இத்தகைய சலுகையைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, Compulsory Monopoly Procurement எங்கு இருக்கிறதோ, அங்கு இந்த முன்னுரிமை தரப்படும். கமீபத்தில் அத்தகைய Procurement இல்லை. ஆகவே, முன்னுரிமை இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, மின் இணைப்புக் கொடுப்பதிலே, முன்னுரிமையைப் பற்றி எங்கெங்கு அரசு, நெல்லைக் கொள்முதல் செய்கிறதோ, அங்கு மட்டும்தான் என்று சொன்னார்கள். தமிழகத்திலே—இன்று பல பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. தமிழகத்தில்—அரிசி உற்பத்தி குறைந்து கொண்டு வருகிறது என்று. 66 லட்சம் டன் தேவைக்கு, 55 லட்சம் டன்தான் விளைகிறது. 11 லட்சத்தை, ஆந்திராவிலிருந்துதான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆந்திராவிலிருந்து வரவில்லையென்றால், இன்னும் விலை உயர்ந்து ரூ. 20 ஆனாலும் ஆகலாம் ஆகவே, இன்றைக்கு மத்திய சர்க்காரிலே, எல்லோருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய, விவசாயிகளுக்கும் சந்தோஷம் தரக்கூடிய, விவசாய கிராமப் பகுதிகளுக்கு, மொத்தத் திட்டத்திலே 49 சதவீதத்தைச் செலவழிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கிராமத்தை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால். விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும். விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும். கிணற்றிலேயிருந்து தண்ணீர் எடுப்பதற்கு அதிலே முன்னுரிமை வழங்குவதற்கு, தொழில்களுக்கு எப்படி தொழிற்சாலை கட்டிய உடனே மின்சாரத்தை வழங்குகிறீர்களோ, அதேமாதிரி மின்சாரம் கேட்டவுடனேயே வழங்குவதற்கு இந்த அரசு சால்ஜாப்பு சொல்லாமல் வழங்க அமைச்சா அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, சால்ஜாப்பு அல்ல. (சிரிப்பு) சட்டப்படி இருக்கிற நிலைமையைச் சொல்கிறோம். விவசாயிகளுக்கு — கிணறுகளுக்கு மின் இணைப்பு இல்லையென்று இந்த அரசு சொல்லவில்லை. ஆனால் 100 சதவீதம் லெவி வாங்குகிற இடத்திலேதான் முன்னுரிமை தருகிறோம். அரிசி குறைகிறது என்றால் குறையாமல் விளைந்தது அத்தனையும் கொள்முதல் தருகிற அவர்களுக்கு முன்னுரிமை தருகிறோம், அவ்வளவுதான்.

1990 மார்ச் 21]

கொல்லிமலையிலிருந்து வரும் நீரைக்கொண்டு பாசன நீர்த்தேக்கம் அமைத்தல்.

*6732 திரு. வீ. பெ. துரைசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொல்லிமலையிலிருந்து வரும் நீர் பல இடங்களில் பரவலாக செல்வதைத் தடுத்து ஒரு பாசன நீர்த்தேக்கத் திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டத்திற்கான விரிவான ஆய்வு தல அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணிகள் முடிந்து திட்ட அறிக்கை அரசுக்கு வரப்பெற்ற பின் பரிசீலித்து திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து முடிவு மேற்கொள்ளப் படும்.

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், கொல்லிமலைப் பகுதி மற்றும் நாமக்கல் பகுதியில் சற்றொப்ப 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசனம் பெறும். அந்த வகையிலே, ஒரு கால வரையறை ஏற்பாடு செய்து, விரைவிலே இந்தத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆய்வுசெய்த திட்ட அறிக்கை இன்னும் அரசுக்கு வரவில்லை வந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து நினைவில் கொள்ளப்படும்.

போயர் மக்களை பழங்குடி மக்களாக அறிவித்தல்

*3547 திரு. ந. நஞ்சப்பன் :

மாண்புமிகு ஆதி திராவிடர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் வாழும் போயர் மக்களை பழங்குடி மக்களாக அறிவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழும் போயர் இனத்தவர்களைத் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் பட்டியலில்

1990 மார்ச் 21]

கொல்லிமலையிலிருந்து வரும் நீரைக்கொண்டு பாசன நீர்த்தேக்கம் அமைத்தல்.

*6732 திரு. வீ. பெ. துரைசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொல்லிமலையிலிருந்து வரும் நீர் பல இடங்களில் பரவலாக செல்வதைத் தடுத்து ஒரு பாசன நீர்த்தேக்கத் திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டத்திற்கான விரிவான ஆய்வு தல அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணிகள் முடிந்து திட்ட அறிக்கை அரசுக்கு வரப்பெற்ற பின் பரிசீலித்து திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து முடிவு மேற்கொள்ளப் படும்.

மாண்புமிகு திரு. வி. பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், கொல்லிமலைப் பகுதி மற்றும் நாமக்கல் பகுதியில் சற்றொப்ப 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசனம் பெறும். அந்த வகையிலே, ஒரு கால வரையறை ஏற்பாடு செய்து, விரைவிலே இந்தத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆய்வுசெய்த திட்ட அறிக்கை இன்னும் அரசுக்கு வரவில்லை வந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து நினைவில் கொள்ளப்படும்.

போயர் மக்களை பழங்குடி மக்களாக அறிவித்தல்

*3547 திரு. ந. நஞ்சப்பன் :

மாண்புமிகு ஆதி திராவிடர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் வாழும் போயர் மக்களை பழங்குடி மக்களாக அறிவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழும் போயர் இனத்தவர்களைத் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் பட்டியலில்

சேர்ப்பதற்கு அரசு ஏற்கனவே ஆய்வு செய்து, அவ்விதம் சேர்க்கத் தேவையில்லை என முடிவு செய்து, 10–11–1988-ல் ஆணை வெளியிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9–55 மணி

திரு. ந. நஞ்சப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் பழங்குடி மக்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த போயர் மக்கள் தமிழகத்தில் அத்தகைய நிலையில் அறிவிக்கப்படவில்லை. அரசுக்குப் பரிந்துரை செய்ய இருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கும் அந்தச் சமுதாய மக்கள் பன்றி மேய்ப்பதும், கல் உடைப்பதுமான சாதாரண தொழிலில் ஈடுபட்டு வளர்ச்சியின்றி இருக்கிறார்கள். அவர்களை அங்கீகரிக்கின்ற வரையில், ஏதேனும் சிறப்புத் திட்டங்களை வகுத்து, அவர்களுடைய வளர்ச்சிக்கு வழிகோலப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவிடைமருதூர் அரசு மருத்துவமனை.

*3141 திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவிடைமருதூர் பேரூராட்சி அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, ஆய்வுக்கூடம், கூடுதல் படுக்கைகள், அறுவை சிகிச்சைக்கூடம் ஆகியவை ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) இதற்கான திட்டச் செலவு எவ்வளவு ?

(இ) தாலுகா மருத்துவமனை என்பதால் இப்பணிகள் இவ்வாண்டிலேயே தொடங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒரு ஆய்வுக்கூடம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. ஆனால் எக்ஸ்ரே பிரிவு, அறுவை சிகிச்சைக் கூடம், கூடுதல் படுக்கைகள் ஆகிய வசதிகள் தற்பொழுது எடுத்துக் கொள்ளத் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

(இ) இல்லை.

சேர்ப்பதற்கு அரசு ஏற்கனவே ஆய்வு செய்து, அவ்விதம் சேர்க்கத் தேவையில்லை என முடிவு செய்து, 10—11—1988-ல் ஆணை வெளியிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9—55 மணி

திரு. ந. நஞ்சப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் பழங்குடி மக்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த போயர் மக்கள் தமிழகத்தில் அத்தகைய நிலையில் அறிவிக்கப்படவில்லை. அரசுக்குப் பரிந்துரை செய்ய இருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கும் அந்தச் சமுதாய மக்கள் பன்றி மேய்ப்பதும், கல் உடைப்பதுமான சாதாரண தொழிலில் ஈடுபட்டு வளர்ச்சியின்றி இருக்கிறார்கள். அவர்களை அங்கீகரிக்கின்ற வரையில், ஏதேனும் சிறப்புத் திட்டங்களை வகுத்து, அவர்களுடைய வளர்ச்சிக்கு வழிகோலப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவிடைமருதூர் அரசு மருத்துவமனை.

*3141 திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவிடைமருதூர் பேரூராட்சி அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, ஆய்வுக்கூடம், கூடுதல் படுக்கைகள், அறுவை சிகிச்சைக்கூடம் ஆகியவை ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) இதற்கான திட்டச் செலவு எவ்வளவு ?

(இ) தாலுகா மருத்துவமனை என்பதால் இப்பணிகள் இவ்வாண்டிலேயே தொடங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒரு ஆய்வுக்கூடம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. ஆனால் எக்ஸ்ரே பிரிவு, அறுவை சிகிச்சைக் கூடம், கூடுதல் படுக்கைகள் ஆகிய வசதிகள் தற்பொழுது எடுத்துக் கொள்ளத் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

(இ) இல்லை.

1990 மார்ச் 21]

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மருத்துவமனைக்கு நாள்தோறும் சுமார் 500 புறநோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர். அவர்களில் பலரை எக்ஸ்ரே படம் எடுப்பதற்காக தஞ்சை, குடந்தை போன்ற தொலைதூர மருத்துவமனைக்கு அனுப்புகிறார்கள். அதனால் ஏழை நோயாளிகள் பலரும் பல்வேறு அவதிக்கு உள்ளா யிருக்கிறார்கள். எனவே உடனடியாக இந்த அவல நிலையைக் கணக்கில் கொண்டு இந்த ஆண்டு எக்ஸ்ரே பிரிவை ஆரம்பிக்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைமைக்கேற்ப அதற்கான ஏற்பாடுகள் படிப்படியாக செய்யப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இம்மருத்துவமனையில் அமைந்துள்ள மகப்பேறு மருத்துவமனைக் கட்டிடம் போதிய வசதி உள்ளதாக இல்லை. எனவே புதிய மகப்பேறு பிரிவுக் கட்டிடமும், அதைப்போன்று ஸ்பெசலிஸ்டுகள், கண் சிகிச்சை நிபுணர், பல் சிகிச்சை நிபுணர், எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர், குழந்தைகள் சிகிச்சை நிபுணர் போன்ற நிபுணர்களைத் தொலை தூர நகரங்களில் அமைந் திருக்கின்ற மருத்துவமனைகளுக்கு நியமிக்க அரசு ஆணை யிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலிலே இதற்கான பதிலும் அடங்கியிருக்கிறது.

குடிநீர்த் திட்டம்

*5507 திரு. அ. லெ. சுப்பிரமணியன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லைத் தொகுதியில் நாரணம்மாள்புரம் பேரு ராட்சி, இராஜவல்லிபுரம் ஊராட்சி, சங்கர் நகர் நகரியம் ஆகிய பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த பாதுகாக்கப்பட்ட ஆற்றுக் குடிநீர் வழங்குகின்ற திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அழகநேரி கரையிருப்பு ஆகிய பஞ்சா யத்துப் பகுதிகளையும் இத்திட்டத்தோடு இணைத்து நிறை வேற்றிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அனுமதி வழங்கி உள்ளது.

(ஆ) இல்லை. தற்போது இயலாது.

1990 மார்ச் 21]

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மருத்துவமனைக்கு நாள்தோறும் சுமார் 500 புறநோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர். அவர்களில் பலரை எக்ஸ்ரே படம் எடுப்பதற்காக தஞ்சை, குடந்தை போன்ற தொலைதூர மருத்துவமனைக்கு அனுப்புகிறார்கள். அதனால் ஏழை நோயாளிகள் பலரும் பல்வேறு அவதிக்கு உள்ளா யிருக்கிறார்கள். எனவே உடனடியாக இந்த அவல நிலையைக் கணக்கில் கொண்டு இந்த ஆண்டு எக்ஸ்ரே பிரிவை ஆரம்பிக்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைமைக்கேற்ப அதற்கான ஏற்பாடுகள் படிப்படியாக செய்யப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இம்மருத்துவமனையில் அமைந்துள்ள மகப்பேறு மருத்துவமனைக் கட்டிடம் போதிய வசதி உள்ளதாக இல்லை. எனவே புதிய மகப்பேறு பிரிவுக் கட்டிடமும், அதைப்போன்று ஸ்பெசலிஸ்டுகள், கண் சிகிச்சை நிபுணர், பல் சிகிச்சை நிபுணர், எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர், குழந்தைகள் சிகிச்சை நிபுணர் போன்ற நிபுணர்களைத் தொலை தூர நகரங்களில் அமைந் திருக்கின்ற மருத்துவமனைகளுக்கு நியமிக்க அரசு ஆணை யிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலிலே இதற்கான பதிலும் அடங்கியிருக்கிறது.

குடிநீர்த் திட்டம்

*5507 திரு. அ. லெ. சுப்பிரமணியன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லைத் தொகுதியில் நாரணம்மாள்புரம் பேரூ ராட்சி, இராஜவல்லிபுரம் ஊராட்சி, சங்கர் நகர் நகரியம் ஆகிய பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த பாதுகாக்கப்பட்ட ஆற்றுக் குடிநீர் வழங்குகின்ற திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அழகநேரி கரையிருப்பு ஆகிய பஞ்சா யத்துப் பகுதிகளையும் இத்திட்டத்தோடு இணைத்து நிறை வேற்றிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அனுமதி வழங்கி உள்ளது.

(ஆ) இல்லை. தற்போது இயலாது.

[1990 மார்ச் 21

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊர்களையொட்டித்தான் இந்த அழகநேரி கரை இருப்பு போன்ற கிராமங்கள் இருக்கின்றன. இந்த அழகநேரி தச்சநல்லூர் பகுதியிலே குடிநீர் இருக்கிறது. இந்த இரண்டு கிராமங்களிலே மட்டும் இல்லை. இந்தத் திட்டத்தோடு அதையும் சேர்த்து அந்தக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க முன்னுரிமை வழங்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சங்கர் நகருக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள அழகநேரி, கரையிருப்பு ஆகிய கிராமங்கள், $2\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்திலும், $4\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்திலும் இருக்கின்றன. அவற்றிற்கு 'பார்சியலி கவர்ட்' என்று சொல்லப்படுகிற, ஓரளவிற்குக் குடிநீர் கிடைக்கின்ற வாய்ப்பு இப்போது இருக்கிறது. முழுதும் குடிநீர் இல்லாதவர்களுக்கு மட்டுமே அரசு இப்போது முன்னுரிமை வழங்கி அதற்கான பணிகளைச் செய்து வருகிறது. அந்தப் பணி முடிவு அடைந்தவுடன் உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம், சங்கரன்கோவில் போன்ற நெடும் தொலைவில் உள்ள பகுதிகளுக்குக் கூட குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் தாமிரபரணி ஆற்றையொட்டி இருக்கிற இந்த அழகநேரி கரையிருப்பு கிராமங்களுக்குத் தண்ணீர் தருவதில் தாமதம் ஏற்படுவது நேச்சுரல் ஜஸ்டிஸ் என்று சொல்கிற இயற்கை நியதிக்கு முரண்பட்டது என்ற காரணத்தால், விரைவில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, கரையிருப்பு கிராமத்தில் 13 கையிறைப்பான்களும், 3 ஆழ் குழாய்க் கிணறுகளும் இப்போது உள்ளன. அது போல், அழகநேரி கிராமத்தில் 10 கையிறைப்பான்களும், 3 ஆழ் குழாய்க் கிணறுகளும் இப்போது செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. முழுமையாக நீர் ஆதாரம் இல்லாத காரணத்தால்தான், உறுப்பினர் அவர்கள் தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வர வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். முழுவதுமாக குடிநீர் வசதி இல்லாத கிராமங்களுக்குக் கொடுத்ததற்குப் பிறகு, நிச்சயமாக இது போன்ற கிராமங்களை எடுத்துக் கொண்டு, அவற்றிற்குக் குடிநீரை வழங்குவதற்காக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 மார்ச் 21]

மாவட்டந்தோறும் அரசு அச்சகம் அமைத்தல்

*5807—திரு. எஸ். என். எம். உபயதுல்லா :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு அலுவலகங்களில் அச்சிட்ட படிவங்கள், பதிவேடுகள் கிடைப்பதில் உள்ள இடர்ப்பாடுகளைக் களைந்திட மாவட்டந் தோறும் அரசு அச்சகம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக் குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களில் அச்சிட்ட படி வங்கள், பதிவேடுகள் கிடைப்பதில் இடர்ப்பாடுகள் எதுவும் இல்லை. எனவே மாவட்டந்தோறும் அரசு அச்சகம் அமைத் திடும் தேவை தற்பொழுது இல்லை.

திரு. எஸ். என். எம். உபயதுல்லா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பொது மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுத் திட்டங்களுக்கான படிவங்கள் எல்லாம் தனியாரிடத்திலே கூடுதலான காசுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதைத் தவிர்த்திடும் வகையில், நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களைப் போன்று அச்சு வேலைகளை ஏற்றுச் செய்வதாலே தொழிலாளர்களுக்கு அதிக வேலை கிடைப்பதற்கான வழி வகைகளைச் செய்யவும், பாடப் புத்த கங்கள் காலம் தாழ்ந்து கிடைப்பதைத் தவிர்த்திடும் வகையிலே இத்தகைய அரசு அச்சகங்களை மாவட்ட தலை நகரங் களிலே ஏற்படுத்திட அரசு முன் வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுது பொருள் அச்சு துறையிலே இப்போது 8 அச்சகங்கள் உள்ளன. அதிலே 3 சென்னையிலே இருக்கின்றன. மற்றவை பல்வேறு மாவட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரை யில் பாட நூல் நிறுவனத்திடமிருந்து இந்த வருடம் நமது அரசு அச்சகத் துறையிலேயே நாங்கள் அச்சிட்டுத் தருகிறோம் என்று அவர்களிடம் கேட்டிருக்கிறோம். அதையெல்லாம் அடிக்கக் கூடிய அளவுக்கு, அரசாங்கத்திற்குத் தேவையான படிவங்கள் அத்தனையும் அடிக்கக் கூடிய அளவுக்கு வசதி வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தால் எதிலும் இடர்ப்பாடுகள் இல்லாமல் அத்தனை படிவங்களும் கிடைக்கச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புத லோடு வினாக்கள்—விடைகள் நேரம் சற்று நீடிக்கப்படுகிறது.

[1990 மார்ச் 21

கொற்கையை சுற்றுலா மையமாக்கும் திட்டம்

10.00 மணி

*2262 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஸ்ரீவைகுண்டம் தாலுகா, கொற்கையை சுற்றுலா மைய மாக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் இருக்கும் கொற்கையை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்ன தாக கொற்கையிலே பாண்டிய மன்னர்கள் வாழ்ந்ததாகவும், கொற்கையிலே துறைமுகம் இருந்ததாகவும், பாண்டிய மன்னர்கள் வாழ்ந்த காலத்திலிருந்த சிற்பங்கள் அதே போன்று அவர் காலத்து செம்பு நாணயங்கள் தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று ரோமானியர் கூட கொற்கை துறைமுகத்திற்கு வந்து முத்துக்கள் வாங்கியதாக எல்லாம் வரலாற்றுச் சான்றுகள் கூறிக் கொண் டிருக்கின்றன. அப்படி வரலாற்று சான்று மிக்க அந்தக் கொற்கைத் துறைமுகத்தைச் சுற்றுலா மையமாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, பாண்டிய மன்னர்கள் காலத்திலே அது துறை முகமாக இருந்தது என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இல்லை. ஆனால் இன்றைக்கு அந்தக் கொற்கை என்ற ஊர் கடற்கரை ஓரத்திலிருந்து சற்று தள்ளி இருக்கிறது. கடற்கரைக்கும் அதற்கும் சற்றும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும் கூட ஒரு காலத்திலே கடற்பகுதியாக இருந்தது இன்றைக்கு ஏறத்தாழ 250 ஏக்கர் பரப்பளவிலே ஒரு குளமாக இருப்பதாக அறி கிறேன். நான் இன்னும் அதைப் பார்க்கவில்லை. அந்த இடத்தை நிச்சயமாக சுற்றுலாத் தலமாக்கும் முயற்சியில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொற் கையிலே குளம் இருப்பதாகச் சொன்னார்கள். தாமிரபரணி பாசனத்தோடு இணைக்கப்பட்ட ஒரு பெரிய குளம் இருக்கிறது.

1990 மார்ச் 21]

ஆகவே அந்தக் குளத்திலே போட்டிங் விடுவதற்கு வசதியாக இருக்கும். அதே நேரத்திலே கொற்கையிலே பாண்டிய மன்னர்கள் காலத்திலே அமைக்கப்பட்டிருக்கிற விநாயகர் கோவிலில் 1981 ஆம் வருடம் அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அங்கே அரசு விழா ஒன்று அமைச்சர்களால் கொண்டாடப்பட்டது. அதற்கு சுற்றுலாத் துறை மூலமாக 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவி கூட வழங்கப்பட்டது. ஆகவே வருடா வருடம் கொற்கையிலே அந்த விநாயகர் கோவிலிலே விழா கொண்டாடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல் ராஜ் அவர்களே, பிள்ளையார் கோவில் கொற்கையிலே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக நிறுவப்பட்டதாகத் தாங்கள் கருதுகிறீர்களா ?

திரு. எஸ். டேனியல்ராஜ் : அதற்கான கல்வெட்டுகள் அந்தக் கோவிலிலே இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பிள்ளையார் வந்ததே பல்லவர் காலத்திலேதான், பாண்டியர் காலத்திலே அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தான் வாதாபியிலிருந்து பிள்ளையார் வந்தார் என்பது வரலாறு. மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் டேனியல் ராஜ் தந்த தகவல்களை நான் குறித்துக் கொள்கிறேன். அந்தத் தொகுதியிலே நல்லதொரு விழாவினை ஏற்பாடு செய்ய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலூர் பகுதியைச் சுற்றுலா மையமாக்கல்.

***3521—திரு. இ. புகழேந்தி :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூர் பகுதியை சுற்றுலா மையமாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, எந்த நகரையும் ''சுற்றுலா'' மையம் என்று இவ்வரசு அறிவிப்பதில்லை. ஆனால் மத்திய அரசின் உதவியுடன் கடலூர் தேவனாம்பட்டினம் கடற்கரையில் சுற்றுலா வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1990 மார்ச் 21]

ஆகவே அந்தக் குளத்திலே போட்டிங் விடுவதற்கு வசதியாக இருக்கும். அதே நேரத்திலே கொற்கையிலே பாண்டிய மன்னர்கள் காலத்திலே அமைக்கப்பட்டிருக்கிற விநாயகர் கோவிலில் 1981 ஆம் வருடம் அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அங்கே அரசு விழா ஒன்று அமைச்சர்களால் கொண்டாடப்பட்டது. அதற்கு சுற்றுலாத் துறை மூலமாக 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவி கூட வழங்கப்பட்டது. ஆகவே வருடா வருடம் கொற்கையிலே அந்த விநாயகர் கோவிலிலே விழா கொண்டாடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல் ராஜ் அவர்களே, பிள்ளையார் கோவில் கொற்கையிலே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக நிறுவப்பட்டதாகத் தாங்கள் கருதுகிறீர்களா ?

திரு. எஸ். டேனியல்ராஜ் : அதற்கான கல்வெட்டுகள் அந்தக் கோவிலிலே இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பிள்ளையார் வந்ததே பல்லவர் காலத்திலேதான், பாண்டியர் காலத்திலே அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தான் வாதாபியிலிருந்து பிள்ளையார் வந்தார் என்பது வரலாறு. மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் டேனியல் ராஜ் தந்த தகவல்களை நான் குறித்துக் கொள்கிறேன். அந்தத் தொகுதியிலே நல்லதொரு விழாவினை ஏற்பாடு செய்ய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலூர் பகுதியைச் சுற்றுலா மையமாக்கல்.

*3521—திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூர் பகுதியை சுற்றுலா மையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, எந்த நகரையும் ''சுற்றுலா'' மையம் என்று இவ்வரசு அறிவிப்பதில்லை. ஆனால் மத்திய அரசின் உதவியுடன் கடலூர் தேவனாம்பட்டினம் கடற்கரையில் சுற்றுலா வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1990 மார்ச் 21

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நகரமாக உருவாகும் கடலூர், எழிலார்ந்த கடற்கரையைக் கொண்ட கடலூர், பெர்ரி சர்வீஸ் என்ற படகு துவக்கப்பட்டுள்ள கடலூர், சுற்றுலா மையமாக மைய அரசினுடைய திட்டக் கூறுகளோடு இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே விரைவாக கட்டுமானப் பணிகளை நடப்பாண்டிற்குள் துவக்குவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

10.05 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, அந்தத் தேவனாம்பட்டினத்தினுடைய கடற்கரை ஓரத்தில் சற்றொப்ப 25 இலட்சம் ரூபாய் செலவில் தங்கும் விடுதியொன்று கட்டுவதற்கு அனுமதி தரப்பட்டிருக்கின்றது. அதற்கான கால்கோள் விழா இந்த மாத இறுதிக்குள் நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்டத்தினுடைய எல்லாத் தலைநகரங்களிலும் சுற்றுலா விடுதி அமைக்க வேண்டுமென்று பழைய தீர்மானம் ஒன்றிருக்கிறது. அந்த வகையில் கடலூரிலே அமைப்பதைப் போல, எல்லாத் தலை நகரங்களிலும் அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிகிற அதே நேரத்தில் இன்றைக்கு உலக வன நாள், அந்த வகையில் மரம் நடுகின்ற பணியில் இன்றைக்கு அமைச்சரவர்கள் கொஞ்சம் தாமதமாக வந்து இருந்தாலும், எல்லா சுற்றுலா மையங்களிலும் மரம் நடுவதற்கு இன்றைக்கு ஒரு ஆணையிடுவாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் சுற்றுலா விடுதிகள், ஒய்வு விடுதிகள் கட்டுவதற்குத் திட்டமிட்டுக் கொண்டு இருக்கின்றோம். எங்கெங்கே இன்னும் இல்லையோ— குறிப்பாக, புதுக்கோட்டை நகரிலே அப்படிப்பட்ட விடுதி இல்லை. அங்கேயும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். தூத்துக்குடியிலே, அது போல நெல்லையிலே, வேலூரிலே சேலத்திலே இப்படிப் பல மாவட்டத் தலைநகரங்களிலே அந்த விடுதியைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். விடுதி மட்டுமல்ல ; சென்னை, கோவை, திருச்சி, மதுரை போன்ற முக்கியமான நகரங்களில், ''அம்யூஸ்மென்ட் பார்க்'' ஏறத்தாழ 5 கோடி, 10 கோடி செலவிலே, சிறுவர்களும், பெற்றோர்களும், இளைஞர்களும் அங்கே பொழுது போக்கிற்காக சென்று, நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதற்காக 'அம்யூஸ்மென்ட் பார்க்'' அங்கே அமைப்பதற்கும் ஏற்பாடு நடைபெற்று வருகின்றது. இன்றைக்கு உலகம் முழுவதிலும் வன நாள் கொண்டாடப்படுகிறது. இங்கே சுற்றுலாத் துறையின் மூலமாக மட்டுமல்ல, ஒவ்வொரு தனியார் நிறுவனங்

1990 மார்ச் 21]

களிலும், அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் கூட அப்படிப்பட்ட மரம் நடு விழாக்களை நடத்த வேண்டும் என்பது இந்த அரசினுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓா உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்.

(அ) இலங்கையிலிருந்து வந்து ஒரிசா மாநிலத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல்வேறு தின இதழ்களில் இலங்கையிலிருந்து வருகை தந்திருக்கின்ற தமிழ் அகதிகள் ஒரிஸ்ஸாவிலே கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டு அவர்கள் அங்கே இருப்பது ஒரு பிரச்சினையாக ஆக்கப்பட்டு அதன் காரணமாக பாதிக்கப்பட்ட அந்தத் தமிழர்களை லாரிகளிலே ஏற்றி அவர்களை வெளியேற்றுகின்ற முயற்சி நடைபெறுவதாக இன்றைக்குப் பத்திரிகைகளில் செய்தி வந்து இருக்கிறது. இந்திய அரசாங்கத்தினுடைய துணையோடு இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்த கப்பலில் அங்கேயிருந்து அழைத்து வரப்பட்ட அந்தத் தமிழ் அகதிகள் என்ன காரணத்தாலோ ஒரிஸ்ஸாவிற்குப் போய் விட்டார்கள் : ஏன் போனார்கள் எதற்காகப் போனார்கள் எப்படி அனுப்பினார்கள் என்கின்ற விவாதத்தை எல்லாம் வேறு ஒரு நேரத்திலே, விவாதிக்கின்ற நேரத்திலே நான் பேசுகிறேன். ஆனால் ஒன்றை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புவது, பாதிக்கப்பட்ட தமிழர்கள், போராளிகளா, இல்லையா என்பதைவிட பாதிக்கப்பட்டு அகதிகளாக வாழ்வு தேடி வந்து கொண்டிருக்கின்ற அந்தத் தமிழர்களை, காப்பாற்றுவதை நம்முடைய கடமையாக நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் ஒரிஸ்ஸாவிற்கு அனுப்பப்பட்டிருக்கின்ற அந்தத் தமிழர்களை தமிழ்ப் பகுதிகளிலே இங்கே தமிழகத்திலே அவர்களைக் குடியேற்றி அவர்களை வாழ வைக்கின்ற அளவிற்கு நீங்கள் முன்வரவேண்டுமென்று நான் பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்வேன். அவர்கள் போராளிகள் அல்ல என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே தாய்மார்கள் இருக்கிறார்கள். குழந்தைகள் இருக்கிறார்கள். போராளிகள் இல்லை என்று வேறு, மத்திய அரசாங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, எப்படியோ கப்பலிலே அவர்களை

1990 மார்ச் 21]

களிலும், அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் கூட அப்படிப்பட்ட மரம் நடு விழாக்களை நடத்த வேண்டும் என்பது இந்த அரசினுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓா உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்.

(அ) இலங்கையிலிருந்து வந்து ஒரிசா மாநிலத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா ; மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல்வேறு தின இதழ்களில் இலங்கையிலிருந்து வருகை தந்திருக்கின்ற தமிழ் அகதிகள் ஒரிஸ்ஸாவிலே கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டு அவர்கள் அங்கே இருப்பது ஒரு பிரச்சினையாக ஆக்கப்பட்டு அதன் காரணமாக பாதிக்கப்பட்ட அந்தத் தமிழர்களை லாரிகளிலே ஏற்றி அவர்களை வெளியேற்றுகின்ற முயற்சி நடைபெறுவதாக இன்றைக்குப் பத்திரிகைகளில் செய்தி வந்து இருக்கிறது. இந்திய அரசாங்கத்தினுடைய துணையோடு இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்த கப்பலில் அங்கேயிருந்து அழைத்து வரப்பட்ட அந்தத் தமிழ் அகதிகள் என்ன காரணத்தாலோ ஒரிஸ்ஸாவிற்குப் போய் விட்டார்கள் : ஏன் போனார்கள் எதற்காகப் போனார்கள் எப்படி அனுப்பினார்கள் என்கின்ற விவாதத்தை எல்லாம் வேறு ஒரு நேரத்திலே, விவாதிக்கின்ற நேரத்திலே நான் பேசுகிறேன். ஆனால் ஒன்றை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புவது, பாதிக்கப்பட்ட தமிழர்கள், போராளிகளா, இல்லையா என்பதைவிட பாதிக்கப்பட்டு அகதிகளாக வாழ்வு தேடி வந்து கொண்டிருக்கின்ற அந்தத் தமிழர்களை, காப்பாற்றுவதை நம்முடைய கடமையாக நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் ஒரிஸ்ஸாவிற்கு அனுப்பப்பட்டிருக்கின்ற அந்தத் தமிழர்களை தமிழ்ப் பகுதிகளிலே இங்கே தமிழகத்திலே அவர்களைக் குடியேற்றி அவர்களை வாழ வைக்கின்ற அளவிற்கு நீங்கள் முன்வரவேண்டுமென்று நான் பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்வேன். அவர்கள் போராளிகள அல்ல என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே தாய்மார்கள் இருக்கிறார்கள். குழந்தைகள் இருக்கிறார்கள். போராளிகள் இல்லை என்று வேறு, மத்திய அரசாங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, எப்படியோ கப்பலிலே அவர்களை

நீங்கள் அனுப்பி விட்டீர்கள். நீங்கள் இங்கே ஏற்றுக் கொள்ள வில்லை என்றாலும் இப்போது இருக்கிற சூழ்நிலை, வேறு ஒரு மாநிலத்திலே நம்முடைய தமிழர்கள் தொல்லைக்கும், வேதனைக்கும் ஆளாகாத வகையில் அவர்களைத் தமிழகம் அரவணைத்தது என்ற ஒரு பெரிய வரலாற்றை உருவாக்குகின்ற பணியை நீங்கள் மேற்கொண்டு, அங்கே அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்தத் தமிழர்களை தமிழகத்திலே ஏற்று அவர்களைக் காக்கின்ற அந்தப் பொறுப்பை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

10-10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கூறியுள்ள இந்தப் பிரச்சினை சில ஏடுகளிலே வெளி வந்துள்ள ஒரு செய்தியைப் பற்றியது ஆகும். ஒரிசா மாநிலத்தில் தண்டகாரண்ய பகுதிக்கு அருகாமையிலே வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சார்ந்த அகதிகள் என்ற பெயரால் வந்துள்ள பெரும்பாலான போராளிகள்—அந்தக் குழுவினர்—அங்கே இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற வகையில் அந்த மாநிலத்திலேச் சில இயக்கங்கள் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டு இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தி எந்த அளவு உண்மையானது என்பதை ஒரிசா மாநில அரசுதான் அறிவிக்கவேண்டும் அல்லது இந்தியப் பேரரசு இது குறித்து அறிவிக்க வேண்டும். பத்திரிகையில் வந்த செய்தியை மாத்திரம் வைத்துக்கொண்டு, இந்த மாநில அரசு எந்தக் கருத்தினையும் எடுத்துக் கூற இயலாத நிலையிலே உள்ளது. பொதுவாக வந்த கப்பல்களிலுள்ளவர்கள் பெரும்பாலானவர்கள் போராளிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால்தான் அந்தக் கப்பல்களை மாநில அரசே இங்கே வரவேண்டாம்,இங்கே அனுப்ப வேண்டாம் என்ற வேண்டுகோளை மத்திய அரசுக்குத் தெரிவித்தது. மத்திய அரசும் அதை ஏற்றுக்கொண்டது. தமிழர்களை, இலங்கையிலிருந்து வருகின்றவர்களைக் காப்பாற்றுகின்ற, ஆதரிக்கின்ற பொறுப்பு தமிழ் நாட்டு மக்களுக்கு உண்டு என்பதற்கு அடையாளமாகத்தான் 1983-ஆம் ஆண்டிலே இருந்து அங்கே நடைபெற்ற இனப் படுகொலையைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த இலங்கைத் தமிழ் ஈழ மக்கள் இதுவரையிலே இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் தமிழ்நாட்டிலே பல பகுதிகளிலே பரவி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இலட்சத்திற்கு மேற்பட்ட அந்த இலங்கைத் தமிழ் மக்களில் 17 ஆயிரம் பேர் அல்லது 18 ஆயிரம் பேர்தான் தங்களை அகதிகளாகவே பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் இங்குள்ள தமிழர்களோடு ஓரளவுக்குக் கலந்தே விட்டார்கள் என்று சொல்லலாம். அண்மையிலே கூட இந்த 2, 3 மாதங்களிலே ஏறத்தாழ 3 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களை அகதிகளாக வந்தவர்களைத் தமிழக அரசு ஆதரித்து அந்தத் துறையினுடைய அமைச்சர், அதிகாரிகள் இவர்கள் எல்லாம்

1990 மார்ச் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

அந்தப் பகுதிகளுக்குச் சென்று அவர்களுடைய தேவைகளை அறிந்து அந்தத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, அகதிகளாக வருகின்றவர்களைப் பற்றி பிரச்சினை இல்லை. ஆனால் அமைதியைக் குலைக்கக்கூடிய அளவுக்கு எந்த நிலைமை ஏற்படுவதையும் தமிழ்நாடு அரசு ஏற்காது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்ட பிறகு இவர்களை ஏன் அனுமதித்தீர்கள் என்று அரசைப் பார்த்து நிச்சயமாகக் கேட்பீர்கள். எனவேதான் ஒரு போராளிக் குழு இங்கே வர, அதைத் தொடர்ந்து இன்னொரு போராளிக் குழு அவர்களைத் தாக்க வர தமிழ்நாடு ஒரு அமளிக் கூடமாக ஆவதை இந்த அரசு விரும்பவில்லை.

மத்திய அரசிலே ஒரு அதிகாரி, வந்தவர்கள் அத்தனை பேரும் அகதிகள்தான்; போராளிகள் அல்ல என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். அந்தக் காலத்திலேயிருந்து எனக்குத் தெரியும், ராஜீவ் காந்தி ஆட்சிக் காலத்திலும் சரி, இன்று பிரதமர் மாண்புமிகு வி. பி. சிங் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, சில அதிகாரிகள் இந்த இலங்கைப் பிரச்சினையில் சடுகுடு விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

(ஆ) சட்ட விரோதமான ஆயுதப் பயிற்சி தமிழ் நாட்டில் சில இடங்களில் அளிக்கப்படுவதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாலைப் பத்திரிகையில் வெளி வந்திருக்கக்கூடிய ஒரு முக்கியமான செய்தியைப் பற்றி தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விழைகிறேன். தமிழ்நாட்டில் சட்டவிரோதமாக ஆயுதப் பயிற்சி தரப்படுகிறது என்ற ஒரு குற்றச்சாட்டை பாரதீய ஜனதா கட்சி சார்பில் அவர்கள் தலைவர் ஒருவர் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் சட்ட விரோதமாக ஆயுதப் பயிற்சி முகாம்கள் இயங்கி வருகின்றன. அரசியல் கட்சிகள் உதவியோடு சில அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இந்த ஆயுதப் பயிற்சிக்கு உதவி செய்கிறார்கள். தமிழ் நாட்டில் குழப்பம் ஏற்படுத்துவதற்காக இங்குள்ள இளைஞர்களுக்கு ஆயுதங்கள் கடத்திக்கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று எல்லாம் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது சொன்னது போல், இலங்கையில் இருக்கக்கூடிய போராளிக் குழுக்கள், அங்கே அவர்கள் நடத்துகின்ற சகோதரச் சண்டை அதனுடைய எதிரொலி இங்கே எழுவதற்கும் இங்கேயும் அந்தச் சண்டைகள் தொடர்வதற்கான ஒரு நிலைமை இங்கே இன்றைக்கு ஏற்பட்டு இருக்கின்றது.

1990 மார்ச் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

அந்தப் பகுதிகளுக்குச் சென்று அவர்களுடைய தேவைகளை அறிந்து அந்தத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, அகதிகளாக வருகின்றவர்களைப் பற்றி பிரச்சினை இல்லை. ஆனால் அமைதியைக் குலைக்கக்கூடிய அளவுக்கு எந்த நிலைமை ஏற்படுவதையும் தமிழ்நாடு அரசு ஏற்காது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்ட பிறகு இவர்களை ஏன் அனுமதித்தீர்கள் என்று அரசைப் பார்த்து நிச்சயமாகக் கேட்பீர்கள். எனவேதான் ஒரு போராளிக் குழு இங்கே வர, அதைத் தொடர்ந்து இன்னொரு போராளிக் குழு அவர்களைத் தாக்க வர தமிழ்நாடு ஒரு அமளிக் கூடமாக ஆவதை இந்த அரசு விரும்பவில்லை.

மத்திய அரசிலே ஒரு அதிகாரி, வந்தவர்கள் அத்தனை பேரும் அகதிகள்தான்; போராளிகள் அல்ல என்று குறிப்பிட்ட தாகச் சொன்னார்கள். அந்தக் காலத்திலேயிருந்து எனக்குத் தெரியும், ராஜீவ் காந்தி ஆட்சிக் காலத்திலும் சரி, இன்று பிரதமர் மாண்புமிகு வி. பி. சிங் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, சில அதிகாரிகள் இந்த இலங்கைப் பிரச்சினையில் சடுகுடு விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது எனக்கு நன் றாகத் தெரியும்.

(ஆ) சட்ட விரோதமான ஆயுதப் பயிற்சி தமிழ் நாட்டில் சில இடங் களில் அளிக்கப்படுவதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாலைப் பத்திரிகையில் வெளி வந்திருக்கக்கூடிய ஒரு முக்கியமான செய்தியைப் பற்றி தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விழைகிறேன். தமிழ்நாட்டில் சட்டவிரோதமாக ஆயுதப் பயிற்சி தரப்படுகிறது என்ற ஒரு குற்றச்சாட்டை பாரதீய ஜனதா கட்சி சார்பில் அவர்கள் தலைவர் ஒருவர் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் சட்ட விரோதமாக ஆயுதப் பயிற்சி முகாம்கள் இயங்கி வருகின்றன. அரசியல் கட்சிகள் உதவியோடு சில அமைப்புக்களைச் சேர்ந்த வர்கள் இந்த ஆயுதப் பயிற்சிக்கு உதவி செய்கிறார்கள். தமிழ் நாட்டில் குழப்பம் ஏற்படுத்துவதற்காக இங்குள்ள இளைஞர் களுக்கு ஆயுதங்கள் கடத்திக்கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று எல்லாம் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கி றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது சொன்னது போல், இலங்கையில் இருக்கக்கூடிய போராளிக் குழுக்கள், அங்கே அவர்கள் நடந்துகின்ற சகோதரச் சண்டை அதனுடைய எதிரொலி இங்கே எழுவதற்கும் இங்கேயும் அந்தச் சண்டைகள் தொடர்வதற்கான ஒரு நிலைமை இங்கே இன்றைக்கு ஏற்பட்டு இருக்கின்றது.

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 மார்ச் 21

10-15 மணி

இராமநாதபுரம் சோதனைச் சாவடியிலே நடந்த நிகழ்ச்சிகளெல்லாம்கூட நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, தமிழ்நாட்டிலே சட்ட விரோதமான ஆயுதங்களைக் கொண்டு வருவது, சட்ட விரோதமான ஆயுதப் பயிற்சிகள் நடத்துவது இவற்றையெல்லாம் தடை செய்வதற்கும், போராளிக் குழுக்கள் எந்தப் போராளிக் குழுவாக இருந்தாலும்கூட, தமிழ்நாட்டிலே அவர்கள் ஆயுதம் தாங்கி உலவுவதற்கு இல்லாத வகையிலே அவர்களிடமிருந்து ஆயுதத்தைப் பறிமுதல் செய்வதும் தமிழக மக்களுடைய அமைதிக்கு மிக மிக அவசியமானது என்பதைக் குறிப்பிட்டு, இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், கவலையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எழுப்பிய அந்தப் பிரச்சினைக்குப் பதிலாக நம்முடைய நண்பர் வரதராசன் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை அமைகிறது என்றே நான் கருதுகின்றேன். இவ்வளவு கட்டுப்பாடாக, கப்பல்களிலே கூட வந்து இறங்கக் கூடாது என்று அரசு கண்டிப்பாக இருந்தும் கூட இது போன்ற செய்திகள், நிகழ்ச்சிகள் நடைபெறுவதாகப் பத்திரிகைகள் அறிவிக்கின்றன. அது போல, எந்த அரசியல் கட்சியும் அத்தகைய போராளிக் குழுக்கள் இங்கே நடமாடவோ அல்லது அவர்கள் பாசறைகளை அமைத்துப் பயிற்சி பெறவோ துணை புரிவதாகத் தெரியவில்லை. பத்திரிகையிலே வந்த செய்தி உண்மையா என்று அறிய நம்முடைய காவல் துறையினுடைய ஒற்றர்கள் விரைந்து செயல்படுவார்கள் என்று நம்புகின்றேன். எந்த ஒரு பயிற்சி முகாமும், வெளிநாடுகளிலே உள்ளவர்களுக்காக இங்கே நடைபெறுவதை இப்போதுள்ள சூழ்நிலையிலே இந்த அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) விடுதலைப் போராட்ட வீரர் ஆச்சாரிய நரேந்திர தேவ் அவர்களுக்கு ஈரோட்டில் திருவுருவச் சிலையும் நினைவுச் சின்னமும் நிறுவுவது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சுதந்திரப் போராட்ட காலத்திலே, நாமெல்லாம் இந்த மாதிரி ஒரு சபையை நடத்துவதற்கு பாக்கியம் கிடைப்பதற்காக, ஆச்சாரிய நரேந்திர தேவ் எத்தனையோ போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அவர் புரட்சிகரமான போராட்டத்தை நடத்தியவர். போராட்டங்களிலே பலவிதமான போராட்டங்கள் உண்டு. மைல்டா, அதாவது மிதவாதம், அபிதமிதவாதம் என்று சொல்வார்கள். இப்படிப்

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 மார்ச் 21

10-15 மணி

இராமநாதபுரம் சோதனைச் சாவடியிலே நடந்த நிகழ்ச்சிகளெல்லாம்கூட நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, தமிழ்நாட்டிலே சட்ட விரோதமான ஆயுதங்களைக் கொண்டு வருவது, சட்ட விரோதமான ஆயுதப் பயிற்சிகள் நடத்துவது இவற்றையெல்லாம் தடை செய்வதற்கும், போராளிக் குழுக்கள் எந்தப் போராளிக் குழுவாக இருந்தாலும்கூட, தமிழ்நாட்டிலே அவர்கள் ஆயுதம் தாங்கி உலவுவதற்கு இல்லாத வகையிலே அவர்களிடமிருந்து ஆயுதத்தைப் பறிமுதல் செய்வதும் தமிழக மக்களுடைய அமைதிக்கு மிக மிக அவசியமானது என்பதைக் குறிப்பிட்டு, இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், கவலையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எழுப்பிய அந்தப் பிரச்சினைக்குப் பதிலாக நம்முடைய நண்பர் வரதராசன் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை அமைகிறது என்றே நான் கருதுகின்றேன். இவ்வளவு கட்டுப்பாடாக, கப்பல்களிலே கூட வந்து இறங்கக் கூடாது என்று அரசு கண்டிப்பாக இருந்தும் கூட இது போன்ற செய்திகள், நிகழ்ச்சிகள் நடைபெறுவதாகப் பத்திரிகைகள் அறிவிக்கின்றன. அது போல, எந்த அரசியல் கட்சியும் அத்தகைய போராளிக் குழுக்கள் இங்கே நடமாடவோ அல்லது அவர்கள் பாசறைகளை அமைத்துப் பயிற்சி பெறவோ துணை புரிவதாகத் தெரியவில்லை. பத்திரிகையிலே வந்த செய்தி உண்மையா என்று அறிய நம்முடைய காவல் துறையினுடைய ஒற்றர்கள் விரைந்து செயல்படுவார்கள் என்று நம்புகின்றேன். எந்த ஒரு பயிற்சி முகாமும், வெளிநாடுகளிலே உள்ளவர்களுக்காக இங்கே நடைபெறுவதை இப்போதுள்ள சூழ்நிலையிலே இந்த அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) விடுதலைப் போராட்ட வீரர் ஆச்சாரிய நரேந்திர தேவ் அவர்களுக்கு ஈரோட்டில் திருவுருவச் சிலையும் நினைவுச் சின்னமும் நிறுவுவது குறித்து.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சுதந்திரப் போராட்ட காலத்திலே, நாமெல்லாம் இந்த மாதிரி ஒரு சபையை நடத்துவதற்கு பாக்கியம் கிடைப்பதற்காக, ஆச்சாரிய நரேந்திர தேவ் எத்தனையோ போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அவர் புரட்சிகரமான போராட்டத்தை நடத்தியவர். போராட்டங்களிலே பலவிதமான போராட்டங்கள் உண்டு. மைல்டா, அதாவது மிதவாதம், அபிதமிதவாதம் என்று சொல்வார்கள். இப்படிப்

பட்ட போராட்டங்களிலே, ரொம்ப வேகமாக போராட்டம் நடத்தி நாம் சுதந்திரம் பெற வேண்டுமென்று ஆசைப் பட்டவர் ஆச்சாரிய நரேந்திர தேவ். அச்சுதபட்டவர்த்தன், ராம் மனோகர் லோகியா, யூசுப் மெகர் அலி இவர்களைப் போன்ற, ஒரு காலக் கட்டத்திலே இருந்த, ஆச்சாரிய நரேந்திர தேவ் ஒரு சமதர்மவாதியும் கூட. வெள்ளைக் காரனுடைய கடுமையான ஆட்சியிலே கைது செய்யப்பட்டு, சிறையிலே பல நாட்கள் அடைக்கப்பட்டதன் காரணமாக நோய்வாய்ப்பட்டு, சுதந்திரப் போராட்ட வீரர்கள் அவதிப் பட்டார்கள். அந்தக் காலச் சிறை எப்படி இருந்தது என்பது உங்களுக்குத் தெரியாது. இந்தக் காலச் சிறையைப் பற்றி நான் சொல்ல வரவில்லை. அந்தக் காலச் சிறையிலே அடைக் கப்பட்ட பல சுதந்திர வீரர்கள் பலவிதமான நோய்வாய்ப் பட்டு, குஷ்டரோகம், ஷயரோகம்—அதாவது மகாரோகம்— என்று சொல்வார்கள், அவதிக்குள்ளாகி இறந்திருக்கிறார்கள். அந்த மாதிரி நோய் சீக்கிரம் குணமாகாது. இப்போதெல்லாம் நிறைய வைத்தியம் இருக்கிறது. ஆச்சாரிய நரேந்திர தேவ் ஷயரோகத்திலே அவதிப்பட்டிருக்கிற காலத்தில் (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு தீட்சிதர் அவர்களே, தாங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள். இன்னும் தாங்கள் அந்த இடத்திற்கு வர வில்லை.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : ஒன்று சொல்வதாக இருந்தால், அதற்கு கை கால் எல்லம் வைக்க வேண்டும் அல்லவா ? முண்டத்தை மட்டும் சொன்னால் அது சரியாக வராது (சிரிப்பு). சொல்லும்போது, அது குறித்து எல்லா வற்றையும் சொல்லிவிட்டுத்தானே சொல்ல வேண்டும். கர்ப் பத்திற்குக் கூட, 10 மாதத்திலே தான் கை, கால் அங்கங் களெல்லாம் முளைக்கிறது. (சிரிப்பு) இப்போது ஷயரோகத்திற்கு பல ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அவரை பெருந்துறை சான டோரியத்திலே சேர்த்து சிகிச்சை அளித்தார்கள். சிகிச்சை பலன் இல்லாமல் அவர் உயிர் பிரிந்தது. ஆனால் அவருடைய ஆயுள் எங்கே முடிந்தது என்றால் ஈரோட்டிலே உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான மாளிகையிலேதான். அந்த இடத்திலே கடைசியாக அவரைக் கொண்டு வந்து வைக்கும் போது அங்கே தான் அவருடைய ஆயுள் முடிந்தது. எத்தனை யோ பேருக்கு நூற்றாண்டு விழா எடுக்கிறோம். அந்த மாதிரி நமக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுக்க போராடிய தலைவர்களில் புரட்சிகரமான தலைவர், சமதர்ம வாதியான ஆச்சாரிய நரேந் திர தேவ் பற்றி கேள்விப் பட்டவர்கள் இங்கே இருக்க மாட் டார்கள். அப்படிப்பட்ட ஆச்சாரிய நரேந்திர தேவ் இறந்த அந்தப் பொதுப்பணித் துறை மாளிகையை நினைவுச் சின்னமாக ஆக்குவதற்கு சர்க்கார், நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1990 மார்ச் 21

10-20 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. தீட்சிதர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மிகப் பெரிய சோஷலிச சிந்தனையாளரும் விடுதலைப் போராட்ட வீரரும், கல்விமானும், அரசியல் வாதியுமான, ஆச்சாரிய நரேந்திர தேவ் அவர்கள் இறுதியாக தமிழ்நாட்டில் 19—2—1956 அன்று ஈரோட்டில் உள்ள பொதுப் பணித்துறை திட்ட மாளிகையிலே இறந்தார்கள். அவர்களுக்கு இப்போது நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நூற்றாண்டு விழாக் குழுவைச் சார்ந்த மதிப்பிற்குரிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னதுரை அவர்களும், தமிழ் நாடு ஜனதா தளக் கட்சியின் தலைவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களும், அந்த இயக்கத்தைச் சார்ந்த மதிப்பிற் குரிய கலிவரதன் அவர்களும், அவர்களுக்கும் மேலாக அகில இந்திய ஜனதா தளத்தின் தலைவர் திரு. சந்திரசேகர் அவர்களும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களை அணுகி, அந்த ஆய்வு மாளிகையை அவர் உயிர் பிரிந்த அந்த இடத்தை நினைவுச் சின்னமாக அறிவிக்க வேண்டும், அந்த அறையில் அவருடைய நினைவாக இருக்கும் வகையில் ஆய்வு மாளிகைக்கு பெயரிடப் பட வேண்டும், அந்த அறையிலும், பக்கத்து அறையிலும் யாரும் தங்கக் கூடாது, அவற்றை தனியாக ஒதுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தார்கள். உடனடியாக முதல மைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு ஆச்சாரிய நரேந்திர தேவ் நினைவு இல்லம் என்ற பெயர் சூட்டப்பட்டு, அதற்கான பெயர்ப் பலகையும் பொறிக்கப்பட்டது. இப்போது அந்த விடுதி அறைகளில் யாரும் தங்குவதற்கு அனுமதிக்கவில்லை. இதற் கிடையில் உத்தர பிரதேச முதல்வர் அவர்களும் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அந்த மாநிலத்தின் தலைமைச் செயலாளரும் நம்முடைய தலைமை செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள், அந்த குறிப்பிட்ட அறையில் தேவா அவர்களுடைய மார்பளவு வெங்கலச் சிலையை வைக்க வேண்டும், அதற்குத் தமிழ்நாடு பொதுப் பணித்துறை ஆவன செய்ய வேண்டும், அந்தச் சிலைக்கு எவ்வளவு செலவாகிறதோ, அந்தச் செலவை உத்தர பிரதேச அரசு ஏற்றுக் கொள்ளும்—வழங்கும் என்று அதிலே குறிப்பிட்டிருந்தார்கள். அதுவும் நம்முடைய முதல்வர் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது. உடனடியாக முதல்வர் அவர்கள், அவ்வளவு பெரிய போராட்ட வீரருக்கு நாம் நம்முடைய அரசின் செலவிலேயே அந்த மார்பளவுச் வெங்கலச் சிலையை வைக்கலாம், எனவே உத்தர பிரதேசத்து அரசிடமிருந்து நிதி பெறத் தேவையில்லை என்று ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே தமிழக அரசு, ஆச்சாரிய நரேந்திர தேவ் அவர்களுக்கு ஈரோடு பொதுப் பணித்துறை மாளிகையில் மார்பளவு வெங்கலச் சிலையை வைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே தனி

1990 மார்ச் 21] [திரு. துரைமுருகன்]

யாக சுற்றுச் சுவர் அமைத்து நினைவுச் சின்னமாகவும், அதை அரசு பாதுகாக்கும் என்ற உறுதி மொழியையும் மாண்புமிகு தீட்சிதர் அவர்களுக்கும் நூற்றாண்டு விழாக் குழுவினருக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. சட்ட முன்வடிவு—(ஆய்வு செய்தல்)

நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 8/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2,3 மற்றும் இணைப்புப் பட்டியல் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 8/1990) நிறைவேற்றப்பெறவேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

யாக சுற்றுச் சுவர் அமைத்து நினைவுச் சின்னமாகவும், அதை அரசு பாதுகாக்கும் என்ற உறுதி மொழியையும் மாண்புமிகு தீட்சிதர் அவர்களுக்கும் நூற்றாண்டு விழாக் குழுவினருக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. சட்ட முன்வடிவு—(ஆய்வு செய்தல்)

நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 8/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2,3 மற்றும் இணைப்புப் பட்டியல் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 8/1990) நிறைவேற்றப்பெறவேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

10.25 மணி

4. வரவு-செலவுத் திட்டம், 1990-91—பொது விவாதம் — தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்தை விட்ட இடத்திலிருந்து தொடங்குபவர் திரு. வி. பி. இராசன். 10 மணித்துளிகள் மட்டும்.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நேற்றைய தினம் வரவு-செலவுத் திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினேன். விட்ட இடத்திலிருந்து தொட்டுப் பேசுகிறேன்.

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி நேற்று கூறுகிறபோது இது பறிக்காமலே விழுந்த பனம் பழம் என்று சொன்னேன். பனம்பழத்தின் ருசி ஏழை எளிய மக்களுக்குத்தான் தெரியும். இது திரு. உகம்சந்த் போன்றவர்களுக்குத் தெரிய நியாயம் இல்லை. கதர் ஆடை தரித்த கன தனவான்களுக்கும் தெரிய நியாயம் இல்லை. இன்னும் சொன்னால் கடைக்கண் பார்வைக்கும் கணநேரப் புன்னகைக்கும் காத்துக் கிடக்கிற கஸ்டமர்களுக்கும் தெரிய நியாயம் இல்லை.

இது ஏழை எளிய மக்களுக்காகவே தீட்டப்பட்டிருக்கிற திட்டம். இங்கே பேசுகிற போது கூட என்னுடைய சகோதரி திருமதி பொன்னம்மாள் அவர்கள் நானும் ஒரு ஏழை என்று சொன்னார்கள். அன்புக்குரிய சகோதரி திருமதி ரமணி நல்ல தம்பி அவர்கள் நான் கூட ரேஷன் கடைகளிலே அரிசி வாங்கித் தான் சாப்பிடுகிறேன் என்று சொன்னார்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் ராசன் அவர்கள் பேசுகிறபோது கதர் ஆடை தரித்த கனதனவான்கள் என்று சொன்னார்கள். கதர் ஆடை தரித்தவர்கள் எல்லாம் கனதனவான்கள் அல்ல என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அப்படிப் பட்ட சொற்றொடரை அதாவது கதர் ஆடை தரித்தவர்களை எல்லாம் நிந்தனை செய்யக்கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனவான்கள் என்றால் பொருளைச் சொல்லவில்லை. உங்களுடைய அறிவாற்றலைத் தான் அவர் சொல்கிறார். (சிரிப்பு).

1990 மார்ச் 21]

திரு. வி. பி. இராசன் : ஆக ஏழை எளிய மக்களுக்காகத் தீட்டப்பட்டிருக்கிற திட்டத்தை ஏழை எளியவர்கள் என்று சொல்லிக் கொண்டே எதிர்ப்பது எந்த வகையில் நியாயம் என்று தான் நான் கேட்கிறேன். * * திரு. நஞ்சப்பரே இந்தத் திட்டத்தை எதிர்ப்பது எந்த வகையில் நியாயம் என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. இராசன் அவர்கள் இங்கே இருக்கின்ற உறுப்பினர்களைப் பற்றி இது போன்ற திறனாய்வுகளைச் செய்வதை முற்றிலும் தவிர்க்கவேண்டும். அவர்கள் திரு. நஞ்சப்பன் அவர்களைப்பற்றிச் சொன்ன தொடர் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

திரு. வி. பி. இராசன் : ஆக ஏழை எளிய மக்களுக்காக இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் பல்வேறு வரவேற்கத்தக்க அம்சங்கள் இருக்கின்றன இன்னும் கூடச் சொன்னால் வாக்களித்தாலும், வாக்களிக்காவிட்டாலும் பல்வேறு திட்டங்களை டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். மரத்தை வெட்டுகிறவன்கூட ஓய்வுக்காக இன்னொரு மரத்தின் நிழலில்தான் அமருகிறான் ; அந்த மரமும் வெட்டப்படும் என்று அதற்குத் தெரிந்தும்கூட அவனுக்கு நிழல் தருகிறது என்று சொன்னார்கள். அதுபோன்று தம்மைத் தாக்கு கிறவர்களுக்கும் நிழல் தரும் மரமாக டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக, குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்காக 42,000 கான்கிரீட் வீடுகள் கட்டித் தருகிற திட்டத்தைத் தந்திருக்கிறார்கள் இந்த பட்ஜெட்டில். அதேபோல் இலைவசமாக கைத்தறி நெசவாளர்களுக்குத் தறிக்கூடத்துடன் கூடிய 2,000 வீடுகள் கட்டித் தரப்படும். 5 கோடி ரூபாய் செலவில் என்று சொல்லியிருக்கிறார்கள். அது போல் இந்த சென்னை மாநகரிலே மட்டும் 12 ஆயிரம் அடுக்கு மாடிகள் கொண்ட வீடுகள் கட்டித் தரப்படும் என்று இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபோல் பல்வேறு திட்டங்கள், வரவேற்கப்படுகிற திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.

அடுத்து, இந்த ஆண்டு உலகச் சிறுமியர் ஆண்டு, ஆனால் இந்தத் தமிழ்த் திருநாட்டில், குறிப்பாகத் தாய்குலத்தைப் போற்றுகிற இந்த நாட்டில் பெண்ணாகப் பிறந்தால் அந்தக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

குழந்தையைக் கழுத்தை நெறித்துக் கொல்வதும், மூக்கிலே நெல் மணியை வைத்துக் கொல்வதும், விஷம் வைத்துக் கொல்வதும் என்ற நிலைமை இந்தத் திருநாட்டில் இருந்தால் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காகச் சட்டப் பாதுகாப்புத் தரவேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். இது திருவள்ளுவர் பிறந்த மண் என்பதாலோ என்னவோ தெரியவில்லை. இங்கே அறத்துப்பால் விலை போகாத காரணத்தால் பொருட்பாலுக்காக காமத்துப்பாலை விநியோகம் செய்யப் புறப்பட்டிருக்கிற கன்னித் தாய்கள் இன்றைக்குத் தாங்கள் பெற்றெடுத்த குழந்தைகளைத் தொட்டிலிலே போடாமல் குப்பைத் தொட்டியிலே போடுகின்ற கொடுமைக்கு முற்றுப்புள்ளி கண்ட தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்னும் கூடச் சொன்னால் தான் பெற்றெடுத்த குழந்தைகளைக் கூட ஏறெடுத்துப் பார்க்க முடியாத தாய்மார்கள் இன்னமும் இந்த உலகத்தில் உலவுகிறார்கள் என்பதால் நான் வருத்தம் அடைகிறேன்.

10.30 மணி

இன்னும்கூடச் சொன்னால், இந்தத் திட்டம் குழந்தைகளைக் கொல்லுகிற திட்டம், கொன்று கொண்டிருக்கின்ற அந்தக் கொடுமை 42 ஆண்டுகளுக்கு முன்னாலே நடைபெற்றிருந்தால் நாம் இன்னமும் வரவேற்று இருக்கலாம். அந்த அளவுக்கு இந்தத் திட்டத்தை தமிழினத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இன்று அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள். அதுபோலத்தான், இன்னும் இந்த நாட்டில் பல்வேறு திட்டங்களை, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 42 வருடங்களுக்கு முன்னாலே ஒரு குழந்தையை கொல்லுவது திராவிட முன்னேற்ற கழகத்திற்கு ஒப்புதலான ஒரு காரியமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். கட்சியின் உறுப்பினர் சொல்வதன் மேல் அப்படி நான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நிறுத்துவது முடியாத காரணத்தால் சகித்துக் கொள்ள வேண்டிய காரியம் என்று கருத்திலேதான் அவர் பேசினார். அவர் சொன்னது, அது நடைபெற்றிருந்தால், அதைப்பற்றி நம்மால் முடியாத காரணத்தினால், அதை வேண்டுமானால் ஏற்றுக்கொள்ளலாம் என்று சொன்னாரே தவிர, இன்றைக்கு அது நடக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுதந்திரத்திற்கு முன்னால் இது முடியாமல் போய்விட்டது. இப்போதும் முடியாமல் போய்விட்டதே என்ற ஆதங்கத்தில்தான் அதைச் சொல்கிறார்.

1990 மார்ச் 21]

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக இன்னும் இந்த பட்ஜெட்டில் கைத்தறி நெசவாளர்களுக்கு அற்புதமான திட்டங்களை நம் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கைத்தறி நெசவாளர்கள் என்பதற்குப் பதிலாக 'நெசவாளர்கள் கையைத் தறி' என்ற அளவிலேதான் அந்த மக்கள் இருந்தார்கள். மிகவும் கஷ்டப்பட்டார்கள். அந்தக் கைத்தறி நெசவாளர்கள் நூல் விலை ஏற்றத்தால் பாதிக்கப்பட்டு வேலையின்றி பரிதவித்தார்கள். குறிப்பாக பெண்கள் காடுகரைக்குச் சென்றார்கள். சிற்றாள் வேலை செய்தார்கள். வீட்டுக்குள்ளே, நிழலிலேயே வேலை பார்த்து பழக்கப்பட்ட அந்தக் கைத்தறி நெசவாளப் பெருங்குடி மக்கள் வேலையின்றி பரிதவித்தார்கள்.

இன்னும்கூட சொல்லப்போனால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கவேலு அவர்கள் அடிக்கடி சொல்லுவது போல, அதுவும் குறிப்பாக எங்கள் பகுதி ராஜபாளையத்தில் எங்காவது திருமணம் நடைபெறாதா, அந்தத் திருமண வீட்டில் போய் ஒருவேளை உணவு கிடைக்காதா என்று ஏங்கி நின்றார்கள். அந்த அவல நிலையை மாற்றிய பெருமை நம் தமிழினத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததிலிருந்து இன்று வரை கைத்தறி நெசவாளர்களுக்கு இருக்கின்ற பல்வேறு கோரிக்கைகளை பல்வேறு குறைகளை நிவர்த்தி செய்தது நம் அரசுதான். இன்று நூல் விலை ஏற்றத்தைக் குறைத்து, அவர்களுக்கு ஓய்வு இன்றி தொழில் கொடுத்து, அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தத் துணிமணிகளைக் கொள்முதல் செய்து, கொள்முதல் செய்யப்பட்ட அந்தத் துணிமணிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்து, பிரச்சினையே இல்லாமல் இன்றைக்கு அந்தக் கைத்தறி நிர்வாகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கைத்தறி நெசவாளர்கள் வாழ்வில் இன்னும் வசந்தம் வீசிக் கொண்டிருக்கின்ற நிலையில் அவர்கள் பல்வேறுத் திட்டங்களை இன்றைக்கு அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படியே பல்வேறு திட்டங்களில் ஒன்றுதான் இன்றைக்கு ஏழையெளிய மக்கள் குறிப்பாக, பெண்கள் அந்தத் தொழிலில் ஈடுபட வேண்டுமென்பதற்காக இப்பெண்களுக்காக கூட்டுறவுத் தொழில் இயல் ஆலைகள் நிறுவவேண்டுமென்பதிலே இந்தச் சர்க்கார் அக்கறை கொண்டு இருக்கிறது.

அதுபோலத்தான் ஜனதா ரகங்களை நெய்பவர்களுக்குக் கூலி உயர்வு தரவேண்டும் என்று சொன்னார்கள். இன்றைக்குக் கூலி உயர்வு தந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 10 ஆண்டுக் காலம் கூலி உயர்வு கேட்டு அலுத்துப் போனவர்களுக்கு, அந்த மக்களுக்கு இந்த அரசு வந்த பிறகுதான் கூலி உயர்வு தந்திருக்கிறது.

நான் இதோடு, மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கவேலு அவர்களிடமும் நம்முடைய தமிழினத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களிடமும் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். பேண்டேஜ்துணி — மருத்துவ துணியை — நெய்கிறவர்கள் இருக்கின்றார்கள். அதுவும் குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நெய்யப்படுகிறது. அந்த பேண்டேஜ் துணி உற்பத்தி செய்கின்ற நெசவாளர்களுக்கு 15 சதவிகிதம் கூலிஉயர்வு தரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதுபோல கைத்தறி நெசவாளர்களுக்குப் பல்வேறு திட்டங்கள் இந்த அரசிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன்.

அதுபோலத்தான் அருமைப் பெரியவர்களே, இங்கே இன்னமும் பல்வேறு திட்டங்கள் இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம். இன்னும் என்னுடைய தொகுதியில் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டிலும் நீண்ட நாள் கோரிக்கைகள் இருக்கின்றன. நகரையாறு திட்டம் என்று சொல்லி, குடிநீர்த் திட்டத்திற்கு என்று ஒரு திட்டம் எங்கள் தொகுதிக்கு வேண்டும். சேத்தூர் செட்டியார்பட்டி, தேவதானம், கோவிலூர், நல்லமங்களம் தளவாய்புரம் என்ற கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்தாலும், அந்தத் தண்ணீரைக் குடிப்பதிலே அங்குள்ள பிரச்சினைகள், அந்தத்தண்ணீரைக் குடித்தால் குடிக்கின்ற குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதம், நோய் வருவதாக அங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, கணபதிசாஸ்தாவின் அருகிலே அங்கே நகரையாறு என்ற ஒரு திட்டம், குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கினால், அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு ஏதுவாக அமையும் என்று கருதுகிறேன். அதுபோலத்தான் திருமங்கலத்திலிருந்து செங்கோட்டை செல்கின்ற பாதையை தேசிய நெடுஞ்சாலையில் சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். அதுபோல ராஜபாளையத்தில்கூட தண்ணீருக்கு என்று கட்டப்பட்ட நீர்த்தேக்கம், அந்த அணை உடைந்து, கிட்டத்தட்ட 6 மாதம் காலம் ஆகிவிட்டது. அந்த அணையை இன்னும் அங்கே திரும்பக் கட்டுவதற்குரிய முயற்சியில் அரசு இன்னும் ஈடுபடவில்லை. அந்த அணையைக் கட்டித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

10-35 மணி

அதைப்போல எங்கள் தொகுதியில் இருக்கின்ற பல்வேறு கோரிக்கைகளை மனுக்களின் மூலமாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு தந்திருக்கிறார்கள். இன்றைக்கு, குறிப்பாக தி.மு.க. அமைச்சர்கள் எங்களுடைய கோரிக்கைகளை எல்லாம்

1990 மார்ச் 21] [திரு. வி. பி. இராசன்]

மனுக்களை எல்லாம் கவனித்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். அதற்காக அமைச்சர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இறுதியாக, தமிழ் இனத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த பட்ஜெட் ஏழையெளிய மக்களுக்காகவே தீட்டப்பட்ட ஒன்று என்பதைச் சொல்லி, நானும் அதிலே ஒருவன் என்பதால் இதை மனமுவந்துப் பாராட்டி, வரவேற்று, சுருக்கமாகச் சொல்வதென்றால் இந்த ஏழைகளின் பட்ஜெட்டானது 'பறிக்காமலேயே விழுந்த பனம்பழம்' என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசன் அவர்கள் பேசுகின்றபோது என்னைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். என்னுடைய பொது வாழ்க்கையைப் பொறுத்தவரையில், என் வாழ்க்கையின் லட்சியமே சேவைகள் செய்வதுதான், குறிப்பாக ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்களுக்காக சேவை செய்து கொண்டு வந்திருக்கிறேன். இதை அங்கு வாழ்கின்ற அனைவரும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதை எல்லாம் மறைத்து அவர்களுடைய உணர்வுகளை மட்டும் பேசுகின்றார்கள் என்று சொல்லி, கடைசியாக 'பழுக்காத பனம் பழம் விழுந்திருக்கிறது' என்று சொன்னார்கள் அது 'சுவைக்காது' என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி ; ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உறுப்பினர் திரு. வி.கே. சின்னசாமி அவர்கள் இப்போது முன்னுரையிலே சொல்லிய வரிகளை நீக்கிவிட்டு, மீண்டும் அதைக் கூறாமல், இப்போது ''பேரவைத் தலைவர் அவர்களே'' என்று தொடங்கக் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. வி. கே. சின்னசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990–91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையானது முற்றிலும் கிராமவாசிகளை ஏமாற்றுகின்ற நிதிநிலை அறிக்கை என்றும், விவசாயிகளைப் புறக்கணிக்கின்ற நிதிநிலை அறிக்கை என்றும், ஏழைகளின் வயிற்றில் அடிக்கின்ற நிதிநிலை அறிக்கை என்றும் நான் முதலில் குற்றம் சாட்டுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்றைக்கு வறட்சியின் கோரப்பிடி தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது. இங்கே 'பழுக்காமல் பனம் பழம் விழுந்தது' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசன் குறிப்பிட்டார். ஆனால் இன்றைக்குள்ள நிலைமை பனம் பழம் மட்டும் விழ வில்லை, எங்கள் பகுதியில் பன மரமே விழுந்துகொண்டிருக் கின்றன. நூறு ஆண்டுகளான பன மரங்கள் மட்டுமல்ல தென்ன மரங்களும் கூட சாய்ந்து இன்றைக்கு பெரியார் மாவட்டத்தில் அவ்வளவு பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கிறது. ஆக, இன்றைக்கு மரம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதால் காயும் இல்லை, பழமும் இல்லை என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி வறட்சி தாண்டவம் ஆடுகின்ற சூழ்நிலையில் ஒரு கிலோ அரிசிக்கு ஒரு ரூபாய் விலையை ஏற்றியிருக்கிறார்கள். இது நியாயம்தானா? படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்த அண்ணாவின் பெயரைக் குறிப்பிடுகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றை பணி வோடு தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக இரண்டரை ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்கிற திட்டத்தை மாற்றி இப்போது மூன்றரை ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்கின்ற அளவிலே ரேசன் கடைகளிலே அரிசியை வழங்குகிறீர்கள். அதுவும் பச்சை யரிசி. நல்ல அரிசி அல்ல. தரம் தாழ்ந்த பச்சை அரிசி. அந்த அரிசியை வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு வயிற்றுப் போக்கு, உடல்வலி ஏற்பட்டு, கூலி வேலைக்குக் கூட அவர்கள் செல்ல முடியாத அவல நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியினுடைய விலையைப் பற்றி உறுப்பினர் விமர்சிப்பதிலே ஆட்சேபணையில்லை. ஆனால் பச்சை அரிசி, பச்சை அரிசி என்று சொல்லி, அதை சாப்பிடுவதாலே வயிற்றுப் போக்கு ஏற்படுகிறது என்று இங்கே சொல்வது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். பச்சை அரிசி சாப்பிட்டு, எங்கே வயிற்றுப் போக்கு, வயிற்றோட்டம் ஆனது என்பதை எல்லாம் இங்கே உறுப்பினர் தெரிவிக்க வேண்டும். அதுமாத்திரமல்லாமல், பச்சை அரிசியும் கிடைக்கிறது, புழுங் கல் அரிசியும் கிடைக்கிறது. யார் எதை வேண்டுமானாலும் விருப்பத்திற்கேற்ப வாங்கிக்கொள்ளலாம். யதார்த்த நிலைமை இப்படி இருக்க, முன்னுக்குப் பின்னாக உறுப்பினர் தகவல் தெரிவிக்க வேண்டாம்.

10-40 மணி

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு அமைச்சரவர்கள் மன்னிக்க வேண்டும். சத்தியமாகச் சொல்கிறேன். புழுங்கல் அரிசியே கிடையாது. பச்சை அரிசிதான் போடுகிறார்கள். அந்த அரிசியை வீட்டிலே வைத்திருக்கிறேன். பொட்டலம் கட்டி வைத்திருக்கிறேன். நான் வரும்போது அதை எடுத்துவர மறந்து விட்டேன். பச்சை அரிசிதான் $3\frac{1}{2}$ ரூபாய்க்குப் போடுகிறார்கள்.

1990 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வயிற்றோட்டம் எத்தனை நாளில் நின்றது என்பதைத் தெரிவித்தால், அதற்குத் தகுந்தாற் போல் ஏற்பாடு செய்யலாம். (சிரிப்பு).

திரு. வி. கே. சின்னசாமி : அவர்கள் டாக்டர்களிடம் சென்றார்கள். எனவே டாக்டர்களைக் கேட்டுத்தான் சொல்ல வேண்டும். நான் குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 ரூபாய்க்குச் சாதாரண அரிசி விற்கப்படுகிறது ; 3 ரூபாய்க்கு சன்ன அரிசி விற்கப்படுகிறது ; $3\frac{1}{2}$ ரூபாய்க்கு மிகச் சன்ன அரிசி விற்கப்படுகிறது. அவர் விலை ஏற்றத்தை வேண்டுமானால் விமர்சிக்கலாமே அல்லாமல், அரிசி இல்லை என்று கூற முடியாது. புழுங்கல் அரிசியும், பச்சை அரிசியும் எல்லாக் கடைகளிலும் கிடைக்கிறது. வாங்கிச் சாப்பிடுகிறவர்களின் விருப்பத்திற்கேற்ப விநியோகம் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலும். திருநெல்வேலி பகுதிகளிலும் கிராமத்தில் இருக்கிற மக்கள் புழுங்கல் அரிசி மட்டுமே சாப்பிடும் பழக்கம் உள்ளவர்கள். நீண்ட காலமாக எங்கள் கோரிக்கையே, புழுங்கல் அரிசி போதுமான அளவுக்கு வேண்டுமென்பதுதான். அது உண்மையிலேயே கிடைக்கவில்லை. அதைத்தான் அவர்கள் சொல்லுகிறார்கள்.

திரு வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆக இந்த அரிசியின் விலையை பழையபடி $2\frac{1}{2}$ ரூபாயாகக் குறைக்க வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வரவர்கள் எடுக்க வேண்டுமென்று ஏழை மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் வயிற்றிலே அடிக்க வேண்டாமென்று வலியுறுத்திக் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, இன்றைக்கு பெற்ற குழந்தைகளைக் காப்பாற்றுகின்ற எங்களுடைய தமிழினத் தலைவர் கலைஞர் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் அவர்கள் பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அந்த 83 இலட்சம் பெற்ற குழந்தைகளுக்கு, பெற்ற தாய் மறந்து விட்டாலும், ஒரு வேளை அரிசி உணவாவது போட்டவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் செய்த திட்டத்தைத்தான் தொடர்ந்து இப்போது கடைப்பிடித்து வருகிறீர்கள் என்பதைப் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் நாடோடி மன்னன் படத்தில் ஒரு இடத்திலே ஒன்றைச் சொல்லுகிறார்கள், வீரனாக வந்து மன்னனைப் பார்த்து "நான் மக்களோடு மக்களாக இருந்து உங்களைப் பார்த்து நான் கேட்கிறேன், ஆனால் நீங்கள் மாளிகையிலே இருந்து கொண்டு மக்களைப் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்" என்று கேட்கின்றார். அவர் மேலும், "பட்டுக் கம்பளம் விரித்த பாதையில் நீங்கள் நடந்து செல்லுகிறீர்கள், ஆனால் பாதையிலே நடக்கும் போது காலிலே முள் குத்தி, பாதி முள்ளை எடுத்து எறிந்துவிட்டு, நடை பாதையிலே நடந்து செல்கிறானே, அவனைப் பற்றி நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லுவார். அந்த ஏழை எளிய லட்சோப லட்சம் குழந்தைகளுக்காகத்தான் இலவசக் காலணித் திட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தத் திட்டத்தை இன்றைக்கு நீங்கள் நிறுத்தி இருக்கிறீர்கள். காரணம், கலைஞர் அவர்கள் மன்னாதி மன்னனுக்கு கதை வசனம் எழுதி இருக்கிறாரே தவிர, அவர் நாடோடி மன்னனுக்கு எழுதவில்லை என்ற காரணத்தாலோ என்னவோ, அவர்கள் அந்தத் திட்டத்தை நிறுத்தி இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த மன்னாதி மன்னன் யார் என்று சொல்ல முடியுமா? திடீரென்று நாடோடி மன்னன் ஏன் மன்னாதி மன்னன் ஆகிறார்?

திரு. பெ. சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் சொன்ன வசனத்தை எம்.ஜி.ஆர். அவர்கள் பேசினாரே தவிர அதை எழுதியவர் அவரல்ல. எழுதியவர்கள் கண்ணதாசன், ரவீந்திரன் என்று 7, 8 பேர்கள். அவர் ஒரு நடிகர், பேசினார். அவ்வளவுதான்.

திரு. வி. கே. சின்னசாமி: நாட்டு மக்கள் எம்.ஜி.ஆர். சொன்னதாகத் தான் கருதுகிறார்கள். நீங்களும் அப்போது அப்படித்தான் சொன்னீர்கள், அதைத்தான் நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் இந்தப் பக்கம் இருக்கும் போது எம்.ஜி.ஆர். தான் சொன்னார் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது தயவு செய்து மாற வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அப்படியே இருக்கட்டும். வசனத்தைப் பின்னால் கவனிக்கலாம். திரு. சின்னசாமி பேசலாம்.

திரு. வி. கே. சின்னசாமி: இலவசக் காலணித் திட்டத்தை மீண்டும் தொடர வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

213427 சென்னை 600 009

1990 மார்ச் 21]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசக் காலணித் திட்டம் இன்னும் தொடர்ந்து நடைமுறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு இதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பள்ளி செல்லுகின்ற குழந்தைகளுக்கு இந்த ஆண்டு கொடுத்து முடிவடைந்து விட்டது. அருள்கூர்ந்து பள்ளிகளுக்குப் போய் விசாரித்துவிட்டு வந்து பேச வேண்டும். வர இருக்கிற ஆண்டுக்காக, நிதி இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

10-45 மணி.

திரு வி. கே. சின்னசாமி : முழுமையாக எங்கள் பகுதிக்கு வரவில்லை என்று சொன்ன காரணத்தால்தான் அமைச்சர் அவர்களுக்கு அதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். உடனடியாக கொடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். பேச்சில் குறுக்கிடுவதாக நினைக்கக் கூடாது. உறுப்பினர் அவர்கள் பேசும்போது காலணித் திட்டத்தை அறவே இந்த அரசு கைவிட்டு விட்டது என்று சொன்னார்கள். அதைத்தான் நினைவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் பேசும்போது தங்கள் பகுதியை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு பேசாமல் நாடு முழுவதும் மொத்தமாகச் சிந்தித்துப் பேசினால் நன்றாக இருக்கும்.

திரு. வி. கே. சின்னசாமி : இன்னொன்று, அமைச்சர் அவர்கள் நெல்லுக்கு குவிண்டாலுக்கு 150 ரூபாயிலிருந்து 25 ரூபாய் உயர்த்தி, மீண்டும் 35 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு உயர்த்தி இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். 60 ரூபாய் உயர்த்தியதாகக் கணக்கிட்டுக் கொடுத்து இருக்கிறார்கள். ஒரு குவிண்டால் நெல்லுக்கு உயர்த்திய விலை 60 ரூபாய் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் ஒரு குவிண்டால் அரிசிக்கு 100 ரூபாய் உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 40 ரூபாய் மக்களினுடைய வயிற்றில் அடிக்கப்படுகிறது. இது விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை. ஏழைகளினுடைய வயிற்றில் அடிக்கப்படுகிறது. ஆகவே நெல்லினுடைய விலையைக் குவிண்டாலுக்கு 35 ரூபாய் உயர்த்திக் கொடுப்பதோடு அது 50 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. வி. கே. சின்னசாமி] [1990 மார்ச் 21

கரும்புக்கு டன்னுக்கு 30 ரூபாய் உயர்த்திக் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இது நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பே மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒன்று. அதைத்தான் இங்கே பட்ஜெட்டில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். எனவே இன்றைக்கு அது புதிதாக அறிவிக்கப் படவில்லை. நேற்றிலிருந்து கூட கரும்பு விவசாயிகள் உண்ணா விரதம் இருந்து கொண்டு வருகிறார்கள். டன்னுக்கு 400 ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்றும், எப்படி அரிசி விலையை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுக் காட்டுகிறீர்களோ அது போல கரும்புக்கு அங்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்படுகிறது என்ற விவரத்தையும் தந்து இருக்கிறார்கள். ஆகவே கரும்பு விவசாயி களுக்கு டன்னுக்கு 400 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும் என் பதையும் நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூறக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

இன்னொன்று, வீதி விளக்குகள் பற்றி. கிராமங்களுக்குச் சென்றால் அங்கு இருண்டு கிடக்கிறது. முகமூடிக் கொள்ளைகள் கிராமந்தோறும், நகரந்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் அங்கு வீதி விளக்கு இல்லாமல் அது இருளில் மூழ்கிக் கிடக்கிறது. கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக பேரூராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பணம் கட்டி, எஸ்டிமேட்டுகளை மின் வாரியத்திற்கு அனுப்பியும், 3 ஆண்டுகள் ஆன பின்னரும் கூட வீதி விளக்குகள் போட முடியாத அவலநிலை இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, கிராமத்தில் இருக்கின்ற தாய்மார்கள் பொழுது இறங்கினால் வெளியே செல்வதற்குக் கூட பயப்படுகின்ற அச்சத்தில் இருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு வீதி விளக்குகள் இல்லாமல் இருண்ட சூழ்நிலையில் கிராமங்கள் கலைஞர் ஆட்சியில் இருந்துகொண்டு இருக்கின்றன. அதை நீக்கி, வீதி விளக்குகள் உடனடியாகப் போடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆதிதிராவிடர்களுக்கு கிராமங்களில் புதிய குடியிருப்புகள் கட்டினால் அவைகளைத் திறக்கும் நேரத்தில் வீதி விளக்குகள் போட்டுத் தரப்படும். அப்படிப்பட்ட வீடுகளுக்கு எல்லாம் ஒரு ஒளி விளக்கு அமல் படுத்தப்படும் திட்டம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். காலத்தில் இருந்தது. மரியாதைக்குரிய நம்முடைய பேராசிரியர் அவர்கள் என்னுடைய தொகுதியில் புஞ்சைப்புளியம் பட்டிக்குப் பக்கத்தில் இருக்கிற இந்திரா அரிசனக் காலனி என்ற குடியிருப்பைத் திறந்தார்கள். அவர்கள் திறக்கும்போதுகூட நான் பெருமையோடு சொன்னேன், எப்படியோ அமைச்சர் வருகிறார்; அவரை வைத்து அங்கு வீதி விளக்கு வந்துவிடும்; ஒரு விளக்குத் திட்டம் வந்துவிடும் என்று பெருமையோடு சொன் னேன். ஆனால் அவர் வந்து திறப்பு விழாச் செய்துவிட்டு வந் தாரே தவிர இன்னும் அங்கு விளக்குகள் போடப்படவில்லை

1990 மார்ச் 21] [திரு. வி. கே. சின்னசாமி]

அந்தக் காலனி இருண்ட சூழ்நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் அனாதைகளாக கரட்டு புறம்போக்கில் வீடு கட்டி இருக்கிறார்கள். தனியார் நிலங்களை ஆர்ஜிதம் செய்து வீடு கட்டி இருக்கிறார்கள். அனாதைகளாக இருக்கின்ற ஆதி திராவிடர்கள் வாழ்கின்ற குடியிருப்புகளுக்கு உடனடியாக— தமிழகத்தில் எத்தனை இடங்கள் இருந்தாலும் அங்கெல்லாம் வீதி விளக்குகள், ஒரு விளக்குத் திட்டத்தை உருவாக்கித் தர வேண்டும்.

இங்கே 40 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் தருவதாக அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் 40 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புத் தருவதாக உறுதியளித்து இருக்கிறார்கள். நான் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை தலைவர் அவர்கள் மூலம் கேட்டுக் கொள்வது, தமிழகத்திலே தேங்கிக் கிடக்கின்ற விண்ணப்பங்கள், விவசாயிகள் விண்ணப்பித்து இருக்கின்ற விண்ணப்பங்கள் 5 இலட்சத்தையும் தாண்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே நீங்கள் வருடத்திற்கு 40 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுப்பதாகச் சொன்னால், இன்னும் 10 ஆண்டுகள் கழித்தால் கூட அவர்களுக்குஎல்லாம் மின் இணைப்பு கிடைக்கின்ற சூழ்நிலை உருவாகுமா என்று எங்களுக்குத் தெரியவில்லை. இன்னும் 10 ஆண்டுகளில் இன்னும் 5 இலட்சம் விண்ணப்பங்கள் பதிவாகக் கூடும். (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 3 மணித் துளிகள் இருக்கின்றன.

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே, நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது இன்னும் ஓராண்டுக் காலத்தில், 1991 முடிவதற்குள்ளாக தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகள் அனைவருக்கும் எத்தனை கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை—நம் நாடு விவசாயத்தை நம்பி இருக்கும் நாடு—அனைத்து விவசாயிகளுக்கும் மின் இணைப்புத் தருவோம் என்ற உத்திரவாதத்தை அவர்கள் தர வேண்டும்.

10.50 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே. மின் இணைப்புத் தர வேண்டுமென்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. சற்றொப்ப, கிட்டத்தட்ட 5 இலட்சம் விண்ணப்பங்கள் தேங்கியிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அவைகளுக்கெல்லாம் இந்த ஆண்டே கொடுத்து விட வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த ஐந்து இலட்சம் விண்ணப்பங்களும் இந்த ஆண்டே போடப்பட்டவைகளா ? அல்லது, எவ்வளவு நாட்களாக இருக்கின்றன என்பதை உறுப்பினர் சொல்வாரா ? அவருடைய ஆட்சியிலேயிருந்து தொக்கி நிற்பவைகள்தான் அவைகள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணர்வாரா ?

திரு. வி. கே. சின்னசாமி : தேங்கிக் கிடக்கின்றன என்று தான் நான் சொன்னேன். இந்த ஆண்டேதான் என்று நான் சொல்லவில்லை. நீங்கள் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். கிராமங்களுக்குப் பல திட்டங்களை நிறைவேற்றுவோம் என்றெல்லாம் சொல்கிறீர்கள். அதனாலேதான் சொல்கிறேன். விவசாயிகள் நலன் கருதி நீங்கள் செய்ய வேண்டும் என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, நான் கடந்த சட்டமன்றத்திலே சொன்னேன். ஒரு விவசாயி, ஒரு மின்சாரக் கிணற்றிலே பம்பு செட்டு வைத்திருக்கிறார். அந்தக் கிணற்றிலே தண்ணீர் இல்லை, காய்ந்து விடுகிறது. அதை வேறொரு இடத்திலே அல்லது வேறு ஊராட்சியிலே அல்லது வேறு டிவிஷனிலே அல்லது வேறு தாலுக்காவிலே பம்பு செட்டை வைக்க வேண்டுமென்றால், அந்த மின்சார இணைப்பை அங்கே ஷிப்டிங் செய்வதாக இருந்தால் கூட இந்த அரசாங்கத்திலே முடியாத ஒரு அவல நிலை விவசாயிகளுக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : எப்பொழுதிலிருந்து கொடுக்காமல் இருக்கிறார்கள்? இதற்கு முன்னே எப்பொழுது கொடுத்து இருந்தார்கள் என்று சொல்ல முடியுமா?

திரு. வி. கே. சின்னசாமி : நான் மாண்புமிகு அமைச்சரவர்கள் மீது குற்றம் சுமத்துவதாக எண்ணிவிடக்கூடாது...

மாண்புமிகு திரு. துரைமுருகன் : குற்றத்தை எங்கள் மீது சொல்கிறீர்கள் என்பதற்காக அல்ல. அதை நான் வரவேற்கிறேன். ஒரு எதிர்கட்சியிலே உட்கார்ந்து கொண்டு எங்களுக்கு லாலி பாடவா போகிறீர்கள்? அது இல்லை. ஆனால் ஒட்டு மொத்தமாக நாங்கள்தான் அதற்குப் பொறுப்பு என்பதைப் போல திணிக்கிறீர்களே, அதற்காகச் சொல்கிறேன்....

திரு. வி. கே. சின்னசாமி : விவசாயிகள் மத்தியிலே இருக்கின்ற கஷ்டங்களை நான் எடுத்துச் சொல்கிறேன். ஆகவே, அதைச் செய்வது, செய்யாதது உங்களுடைய இஷ்டம். ஆனால் நான் சொல்வது விவசாயிகளுக்கு இருக்கின்ற கஷ்டங்களை நீங்கள் உணர்ந்தாக வேண்டும். உணர்ந்து இதை நடைமுறைப் படுத்துவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும். நீங்கள் எவ்வளவோ சுறுசுறுப்பாகப் பணியாற்றக்கூடிய அமைச்சர், (மணியடிக்கப் பட்டது) கொஞ்சம்தான் பேசியிருக்கிறேன். இன்னும் விவசாயத்தைப்பற்றியே பேசி முடியவில்லை. நிறைய இருக்கிறது ஆகவே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நீட்டித்தால் பின்னால் வருகின்ற உங்கள் உறுப்பினர் பாதிக்கப்படுவார், இரண்டு மணித் துளிகளுக்குள்ளாக முடித்துக் கொள்ளுங்கள்.

1990 மார்ச் 21]

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே, இங்கே வந்திருக்கின்ற அனைவருடைய கருத்தும் அப்படித்தான். இங்கே வந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் என் மரியாதைக்குரிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள்கூட அதைத்தான் சொல்லுங்கள் என்று என்னிடத்திலே கை காட்டுகின்ற மாதிரி சொல்கிறார்கள். அவர்களும் அதையே வலியுறுத்துகிறார்கள். ஆகவே, இங்கே வந்திருக்கின்ற அனைவருமே விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் இந்த ஷிப்டிங் செய்வதை யாவது, ஒரு டிவிஷன் விட்டு இன்னொரு டிவிஷன், ஒரு ஊராட்சி மன்றத்திலிருந்து இன்னொரு ஊராட்சி மன்றம் அல்லது ஒரு தாலூக்காவிலேயிருந்து இன்னொரு தாலூக்கா என்ற அளவிலே மாற்றினால் அதற்கு அனுமதி கொடுங்கள். அதில் உங்களுக்கு எந்தச் சிரமும் இல்லை. அதற்குண்டான செலவுகள் அனைத்தையும் விவசாயிகளே ஏற்றுக்கொள்கிறார்கள். அரசாங்கத்திற்கு ஒரு பைசாகூட செலவில்லை. ஆகவே, அதைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பட்டா வழங்குவதைப் பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும். ஏழை எளிய அரிசனங்கள், மற்றவர்கள் வீடு கட்டிக் குடியிருக்கிறார்கள். ஆனால், குடியிருக்கின்ற இடம் நூறாண்டு, இருநூறு ஆண்டுகள், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வருவாய்த் துறை பதிவேட்டிலே அது குட்டைப் புறம்போக்கு என்றும், பள்ளவாரி என்றும் அல்லது கரட்டுப் புறம்போக்கு என்றும் அல்லது வண்டிப்பாதை என்றும் பலவகைகளாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஆனால் குடியிருப்பதற்கு ஏற்ற இடம், தகுதியான இடம், நூறாண்டுக் காலமாகக் குடியிருந்து வருகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட இடங்களையெல்லாம் மாண்புமிகு முதல்வரவர்கள் உத்தரவிட்டு, அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது நம்மைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ அந்த இடம் ஏற்றது, தகுதியுடையது என்று சொன்னால் அதை மாவட்ட ஆட்சித் தலைவரே ஆய்வு செய்து பட்டா கொடுக்கின்ற நிகழ்ச்சிகளை உருவாக்கித் தர வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு ஆதி திராவிட நலத்துறை மூலமாக சப்சிடி லோன்—தள்ளுபடி செய்கின்ற கடன் இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செருப்புத் தொழில் செய்வதாக இருந்தாலும் சரி, பெட்டிக்கடை வைப்பதாக இருந்தாலும் சரி, சைக்கிள் கடை வைப்பதாக இருந்தாலும் சரி—கடன் கொடுக்கிறார்கள். மாவட்டத்திலே இருக்கின்ற ஆதி திராவிட நலத்துறை அதிகாரிகளும் அந்த சப்சிடி லோனை சேங்க்ஷன் செய்து உத்தரவு கொடுத்து விடுகிறார்கள். ஆனால் அவர்கள் வங்கிக்குச் சென்று கொடுக்கச் சொன்னால், அதைக் கொடுப்பதற்கு வங்கி அதிகாரிகள் மறுக்கிறார்கள். காலதாமதப்

படுத்துகிறார்கள். இதற்கு என்ன காரணமென்று கேட்டால், அந்த ஊரிலே வாங்கிய யாரோ ஒருவர் கட்டவில்லை அல்லது அவர் இறந்திருக்கிறார் அல்லது அவர் ஊரை விட்டே வெளியூருக்குச் சென்றிருக்கின்ற காரணத்தால் அந்த லோன்களையெல்லாம்—கடன்களையெல்லாம் அந்தக் கிராமத்திலே இருக்கின்ற ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய உத்தர்வை, மத்திய, மாநில அரசுகளின் உத்தரவை அந்த வங்கி அதிகாரிகள் புறக்கணிக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களை ஆய்வு செய்து, உடனடியாக நீங்கள் ஒரு உத்தரவை அறிவிக்க வேண்டுமென்று—இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்கள் எந்த இடத்திலேயும தங்கு தடையின்றிக் கொடுக்கப்பட வேண்டுமென்ற உத்தரவை உடனடியாக அமல்படுத்த வேண்டும். எனவே, காலதாமதம் ஏற்படுத்தக் கூடாது என்பதையும் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலவள வங்கிகளிலே கடன் பெற்றிருக்கிறார்கள். நிலவள வங்கியிலேயிருந்து கடன் பெற்று, பிறகு கடனையெல்லாம் கட்டிப் பல ஆண்டுகள் ஆகின்றன. இரண்டு மூன்று ஆண்டுகள் ஆனாலும்கூட அந்தக் கடன்களைக் கட்டியவர்களுக்கு அந்தப் பத்திரங்கள் போய்ச் சேருவதில்லை, காலதாமதம் ஏற்படுகிறது.

10.55 மணி.

இன்றைய தினம் எத்தனையோ பினாமி நிலங்களை எல்லாம் எடுத்துத் தருவதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கிற கோவில்களுக்குச் சொந்தமான, அறநிலையத் துறைக்குச் சொந்தமான இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை பல பினாமிகள், வசதி வாய்ப்புள்ளவர்கள் எடுத்துக்கொண்டு ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் பணிவோடு கேட்டுக் கொள்வேன். அந்த நிலங்களை எல்லாம் கோவில்களுக்குச் சொந்தமாக்குங்கள். அதற்குப் பிறகு யார் தகுதியுடையவர்களோ, ஏழையாக இருக்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுத்து, அந்த நிலத்திலிருந்து வருகிற வருவாயை நேரடியாக கோவில்களுக்குச் சேர்க்க வேண்டும். 10 ஏக்கர் நிலத்தை 500 ரூபாய்க்கு விற்கிற அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது). என்னுடைய தொகுதி பற்றி ஒரே ஒரு பிரச்சினை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 19 மணித் துளிகள் ஆகிவிட்டன. எப்போதும் நம்முடைய திரு. சின்னசாமி அவர்கள் தொகுதிக்குக் கடைசியாகத்தான் வருவார். (சிரிப்பு) ஒரு மணித் துளியில் முடித்து விடுங்கள்.

1990 மார்ச் 21]

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, 100 புதிய பாலங்களை 5 கோடி ரூபாய் செலவில் கட்டியிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் சத்திய மங்கலத்திலிருந்து ஈரோடு வரும் வழியில் 56/2 என்ற இடத்தில் பிரிந்து குள்ளம்பாளையம் என்ற கிராமத்திற்கு சாலை செல்கிறது. அதிலே பாலம் கட்ட 3 இலட்சம் சாங்ஷன் செய்தார்கள். பாலம் கட்டுகிற உத்திரவும் பெற்று, டெண்டர் எல்லாம் கூட விட்டார்கள். ஆனால் அங்கே சென்ற டி.ஈ, மற்றும் எஸ்.ஈ, போன்றவர்கள் பாலம் முழுமையாகக் கட்ட வேண்டுமென்றால் 8 இலட்சம் ரூபாய் தேவை என்று கருதி, ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தப் பாலத்திற்கு குழாய்கள் எல்லாம் கொண்டு வந்து போட்டு வேலை இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அது உங்களுடைய ஆட்சியில், கலைஞருடைய ஆட்சியில் நிறுத்தப்பட்டதைப்போல மக்கள் அங்கு பேசிக் கொள்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட்டதை சேர்த்து மொத்தம் 8 இலட்சத்தை ..5 இலட்சம் ரூபாய் ரிவைஸ்ட் எஸ்டிமேட், முதலில் சாங்ஷன் ஆனது 3 இலட்சம் ரூபாய்..அதற்கு ஒதுக்கீடு தந்து அந்த குள்ளம்பாளையம் பாலத்தை 100 பாலங்களில் ஒன்றாகக் கட்ட நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த பட்ஜெட் ஏழைகளுக்கு உதவாத பட்ஜெட் என்று கூறி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பாலம் கட்டினால் உதவுமா ? (சிரிப்பு).

திரு. எஸ். டேனியல்ராஜ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள 1990–91 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். மாண்புமிகு கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் வெறும் வார்த்தை ஜாலங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறதே தவிர இந்த அறிக்கையில் மக்களுக்கு நிலைத்து நிற்கக் கூடிய எந்த ஒரு திட்டமும் அறிவிக்கப்படவில்லை என்பதைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்வதற்குரிய திட்டமோ அல்லது சிறு விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குகிற திட்டமோ இதில் அறிவிக்கப்படவில்லை. அதைப் போல சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரமாக்குவோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டமும் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. ராஜீவ் காந்தி அவர்களின் அரசுதான் தமிழகத்திற்கு

பாமாயிலைத் தர மறுக்கிறது என்றும், தேசிய முன்னணி அரசு மத்தியில் ஆட்சிக்கு வந்து விட்டால் பாமாயிலை டின் டின்னாக வழங்கும் என்றும் கூறினீர்களே, பாமாயில் எங்கே என்று இப்போது மக்கள் கேட்கிறார்கள். ரேஷன் அரிசியின் விலையை உயர்த்தி அதன் மூலமாக ஏழைகளுடைய வயிற்றிலே அடிக்கிறீர்களே, இது தான் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிற முறையா என்று கேட்க விரும்புகிறேன். முதியோர் உதவித் தொகையை 30 ரூபாயிலிருந்து 50 ரூபாயாக உயர்த்தி விட்டு அவர்களுக்கு வாரம் ஒரு முறை ஒரு கிலோ அரிசி, அரை லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கி வந்ததை நிறுத்தி விட்டீர்களே, இது தான் அரசினுடைய சாதனையா என்று கேட்க விரும்புகிறேன். எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தை அறிவித்தார். அந்தத் திட்டம் இன்று நடைமுறைப் படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் மூலமாக எல்லா குழந்தைகளும் பயனடைந்து வருகிறார்கள். நீங்கள்கூட பல கவர்ச்சிகரமான திட்டங்களை இப்போது அறிவித்து இருக்கிறீர்கள். அந்தத் திட்டத்தினுடைய பலனை முழுமையாகப் பெற வேண்டுமென்றால் வருமானச்சான்றிதழை பெற வேண்டியிருக்கிறது.

11—00 மணி

வருமானச் சான்றிதழ்களை நாம் பெறுவதற்கு கிராம நிர்வாக அலுவலர், வருவாய்த் துறையினுடைய ஆய்வாளர், வட்ட ஆட்சியர் ஆகியோரைக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே திட்டத்தினுடைய பலன் முழுமையாக அடித்தளத்திலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு முறையாகப் போய்ச் சேருவதில்லை.

அதே நேரத்தில் இலவச வேட்டி, சேலை, இலவச அரிசி போன்ற திட்டங்கள் ரேஷன் கார்டுகளில் 300 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் ஒரு கிராமத்திலே 300 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ளவர்கள் 500 பேர்கள் இருந்தால், 200 பேர்களுக்கு மட்டும்தான் வழங்கப்படுகிறது. அதுவும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வழங்குவதாகச் சொல்கிறார்கள். ஆகவேதான் இன்று 300 ரூபாய்க்குக்குறைவாக வருமானம் உள்ள அத்தனை பேர்களுக்கும் முறையாக வழங்கப்பட வேண்டும். இல்லை என்றால், இந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி ஆடையை வழங்குகிற திட்டம் ஆலோசிக்கப்பட்டு அந்த ஆடைகளை வழங்குவதற்கான முறைகள் என்ன என்றும், எவ்வளவு ஆடைகள் குறிப்பிட்ட அந்தக்

காலக் கட்டத்திலே கிடைக்கும் என்றும் ஆராய்ந்தபோது, போதுமான அளவிற்கு, 300 ரூபாய் வரையிலே வருமானம் உள்ள அத்தனை பேர்களுக்கும் கொடுப்பதற்கான கைத்தறி ஆடையை, தமிழகத்திலே அந்தக் காலக் கட்டத்திலே உற்பத்தி செய்து தர முடியாத நிலைமை இருந்ததன் காரணமாக, முதல் கட்டமாக 200 ரூபாய் வரையில் வருமானம் உள்ளவர்களுக்கு வழங்குவது என்றும், அடுத்த கட்டத்தில் 300 ரூபாய் வரையில் வருமானம் உள்ளவர்களுக்கு வழங்குவது என்றும், இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டு, முதல் கட்டம் செயல்பட்டபோது 300 ரூபாய் வரையிலும் வருமானம் உள்ளவர்கள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற ஒரு பெரிய குறையைச் சொல்லுகின்ற நிலைமை இருந்தது உண்மைதான் ஆனால் அப்போது கிடைத்த கைத்தறி ஆடை மொத்த எண்ணிக்கை 200 ரூபாய் வரையிலும் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் வழங்கத்தக்கதாக இருந்து, அதற்குப் பின்னர் தான் பிற பகுதியினருக்கும் வழங்குகிற முறை தொடர்ந்தது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் என்னுடைய தொகுதியிலே சிங்கதாக்குறிச்சி ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர் அவர்கள் என்னோடு தொலை பேசியிலே தொடர்பு கொண்டார்கள். நேற்றைய தினம் அந்தப் பஞ்சாயத்தைச் சேர்ந்த 70 பேர்கள் சிதம்பரனார் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு, அதாவது 200ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு இலவச வேட்டி வழங்கப்படவில்லை என்று அவர்களிடத்திலே சொன்ன நேரத்திலே, நீங்கள் உங்களுடைய சட்டமன்ற உறுப்பினரிடத்திலே சொல்லி, சட்டமன்றத்திலே இது சம்பந்தமாக உங்களுடைய குறைகளைச் சொல்லுங்கள் என்று அவர்கள் சொன்னதன் காரணமாகத்தான், இந்த நேரத்திலே அது பற்றி உங்கள் மத்தியிலே நான் குறிப்பிட வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பிடத்தக்க குறைகள் இருக்குமானால், அந்தக் குறைகளை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்புவார்களானால் அது பற்றி கவனிக்க அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இங்கே சட்டமன்றத்திலே இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் யாரிடத்திலேயும் சொன்னதாகவும் .. (குறுக்கீடு). இல்லை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இந்தப் பிரச்சினையை சட்டமன்றத்திலே எழுப்புங்கள் என்று யாரிடத்திலோ சொன்னதாக இங்கே அவர்கள் (குறுக்கீடு).

[1990 மார்ச் 21

திரு. எஸ்.டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், எங்கள் தொகுதியில் உள்ள சிங்கதாக்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களிடத்திலே சொல்லி, உங்களுடைய சட்டமன்ற உறுப்பினரிடத்திலே சொல்லி, சட்டமன்றத்திலே இது சம்பந்தமாக பிரச்சினையை எழுப்புங்கள் என்று சொன்னதன் காரணமாகத்தான் இந்த நேரத்திலே இந்தப் பிரச்சினையை எழுப்புகிறேன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இங்கே அந்தப் பிரச்சினையை உறுப்பினரே எழுப்பலாம். அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரை இழுக்க வேண்டுமா என்பதைத்தான் நான் கேட்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள் என்பதை உறுதி செய்ய முடியுமா என்று நான் கேட்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவருடைய பெயரை ஏன் இங்கே இழுக்க வேண்டும்

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகளிலே குறிக்கப்பட்டுள்ள 300 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களை மறுபடியும் ஆய்வு செய்து, அதைப் பரிசீலனை செய்து புதிய ரேஷன் கார்டுகளை வழங்க வேண்டும். ஏன் என்றால், ஏழை எளியவர்களுக்கு இந்தத் திட்டம் கிடைக்காத காரணத்தால், பணக்காரர்கள் இந்தத் திட்டத்தை அனுபவிப்பதன் காரணத்தால், புதிய ரேஷன் கார்டுகளை வழங்க வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே பல சட்டமன்ற உறுப்பினர்கள் பல நேரத்திலே குரல் கொடுத்தும் கூட, இது வரையிலும் புதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்படவில்லை. ஆகவே புதியரேஷன் கார்டுகளை வழங்கி, வருமானத்தை மறுபடியும் ஆய்வு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கையின்மீது இப்போது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை, குறைகளை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் உட்கார வேண்டிய அந்த வரிசையிலே, முக்கியமாக நிதித் துறையைச் சேர்ந்தவர்கள் யாருமே இல்லை. நேற்றைய தினமும் அப்படித்தான் இருந்தது. இன்றைக்கும் அப்படித்தான் இருக்கிறது. இது அசாதாரணமான நிலை என்று நாங்கள் கருதுகிறோம். நிதித் துறைச் செயலாளர் அவர்கள் யாராவது அந்த வரிசையிலே இருந்தால்தான் நாங்கள் பேச முடியும்....... (குறுக்கீடு).

1990 மார்ச் 21]

(11-05 மணி)

மாண்புமிகு டாக்டர் க. **அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் அந்த இடத்திலே அமருவது என்பது அவர்களுடைய எண்ணத்தைப் பொறுத்து, திட்டத்தைப் பொறுத்து அமைவதே தவிர, சட்ட மன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் அந்த இடத்திலே அமர வேண்டும் என்று வற்புறுத்துவது நியாயமில்லை. அமைச்சர் அவர்கள் இல்லையென்றால்தான் கேட்பதற்கு உரிமையுண்டேதவிர, அதிகாரிகளைக் குறித்து அவ்வாறு கேட்பது நியாயமில்லை. அமைச்சர் அவர்கள் இங்கு பொறுப்பாக இல்லையென்றால், நம்முடைய முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னதைப்போல் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம். இங்கே பேசப்படுகிற அத்தனைக்கும் அமைச்சர்கள் தான் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் அல்லது புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டியவர்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய மரபைச் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய பொறுப்பு. இந்த அவையில் பொதுவாக இந்த மாதிரி எத்தனையோ விவாதங்களிலே கலந்து கொண்டு நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அண்மைக்காலத்திலே அதிகாரிகள் இடத்திலே இருக்கக் கூடிய ஏனோதானோ என்ற போக்கு ஏற்புடையதல்ல. அவர்கள் இங்கே இருந்தால் தான் உடனடியாக என்ன என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குறிப்புகளை அவர்கள் எடுத்துக் கொள்வதற்கு வசதிகள் ஏற்படும். அமைச்சர் அவர்கள் மூலமாகத்தான் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னால், காலதாமதம் ஏற்படும். பொதுவாக இந்த மாதிரியான வாதங்களிலே அவர்கள் அங்கே உட்கார்ந்து குறிப்புகளை எடுப்பது என்பது நான் கண்டு வந்திருக்கிற ஒரு நிலையாகும். அதற்கு முற்றிலும் மாறான ஒரு நிலையிருப்பது ஏற்புடையதல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. **அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு துறையைப் பற்றிய விவாதமாக இருந்தால், அந்த துறையைச் சார்ந்த அலுவலர்கள் இங்கே கட்டாயம் இருக்க வேண்டிய ஒரு தேவை ஏற்படும். அதே போல், இந்த விவாதத்தில் முதல் அமைச்சர் பதில் சொல்லக்கூடிய நிலையிருக்கிறபோது அந்த ஒரு காலக் கட்டத்தில் அவர்கள் கட்டாயம் இருப்பார்கள். ஆனால், அரசு அலுவலர்களுக்கு, இதைவிட மிக முக்கியமானப் பணி, ஒரு வேளை முதல் அமைச்சரிடமே கலந்து பேசி நிறைவேற்ற வேண்டியப் பணி அந்தத் துறை அலுவலர்களுக்கு இருக்குமானால், அந்த நேரத்திலே அவர்கள் சட்ட மன்றத்திலே இங்கே வந்து அமர்ந்துதான் தீர வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு நியாயமில்லை.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நிதித் துறை செயலாளர் வராவிட்டால் அவர்கள் சார்பாக, இணைச் செயலாளர் அல்லது துணைச் செயலாளர் யாராவது அந்தத் துறையின் சார்பாக இருக்க வேண்டும். பொதுவாக பொதுத் துறையின் சார்பாக யாராவது இருக்க வேண்டும். ஒருவரும் இல்லாமல் இருப்பது இந்த அவையினுடைய மரபுக்கு ஏற்புடையதல்ல. எனக்கும் மன நிறைவைத் தரக்கூடியதாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு, பல அலுவலர்கள், இந்த வலப்புறத்தில் இருக்கிற மாடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடக்கின்ற போது மட்டும் தொடர்புடையவர்கள் அனைவரும் இந்தப் பக்கத்தில் அமர்ந்திருப்பார்கள். இப்பொழுது தங்கள் பார்வையை மேலே செலுத்தினால் நல்ல வாய்ப்பாக இருக்கும். எனவே, இது தொடர்பாக மேலும் பிரச்சினைகள் தேவையில்லை.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சபையின் மரபைப் பற்றி மாண்புமிகு லத்தீப் அவர்கள் சொல்கிறார்கள் இங்கே வருகிற அதிகாரிகள் யாராகயிருந்தாலும் உறுப்பினர்கள் அவர்களுடைய கவனத்தைத் திருப்ப வேண்டியதில்லை. அதிகாரிகளோடு பேசவும் கூடாது. அதிகாரிகளுக்கும் நமக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. பேசுவதற்கு பதில் சொல்ல மாண்புமிகு அமைச்சர் இருக்கிறார்கள், அதிகாரிகளுக்கு இவர்கள்தான் ஆணையிடுவார்கள். அதிகாரிகள் இங்கு வந்து அமர வேண்டும் என்று சொல்வது பொருத்தமானதல்ல.

திரு. எம். அப்துல் லத்தீப் : சட்ட மன்றம் நடைபெறும் போது சட்டமன்ற வாதங்களைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தது எதுவுமேயில்லை என்பதுதான் நாம் கட்டிக்காத்து வருகின்ற மரபாகும். எனவே, நான் மேலே உட்கார்ந்து கொண்டிருப்பவர்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். அவர்களிலே ஏதோ சூப்பரிண்டெண்டு அளவிலே இருக்கக்கூடியவர்கள், அந்தத் துறையிலே வேலைச் செய்யக்கூடியவர்கள் தான் இருக்கிறார்களே தவிர, துறையின் சார்பாக யாரும் இல்லை. ஏதாவது இணைச் செயலாளர் என்ற அளவுக்காவது யாராவது இருந்திருக்க வேண்டும். பொதுவாக, பொது விவாதங்கள் நடக்கும்போது தனித்தனி மானியங்கள் நடக்கும்போது வேண்டுமானால் அந்தத் துறையைச் சார்ந்த செயலாளர் இருக்கலாம். ஆனால், இன்றைக்கு பொது விவாதம் நடக்கிறது. பொது விவாதம் நடக்கும் போது நிதித் துறைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர் அல்லது அவர்கள் சார்பாக அவர்களுக்கு அடுத்த நிலையில் இருப்பவர்கள் இருந்து வந்திருப்பது நான் அறிந்த ஒன்று. இன்றைக்கு இருக்கிற நிலை என்றைக்

குமே இருந்ததில்லை. எனவே, என்னுடைய மனக்குறையை சொல்லுகிறேன். இது சரியான முறையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு கருத்தை விளக்க வேண்டிய ஒரு கட்டாயம் காரணமாக நான் சொன்னேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அப்படி ஒரு எண்ணத்திற்கு ஆளாகியிருப்பது, இவ்வளவு நாள், நீண்ட நாட்களாகப் பார்த்துப் பழகிய காரணத்தினால், அவர்கள் எல்லாம் இங்கே இருப்பார்களே, இன்று இல்லையே என்ற காரணத்தால் ஏற்பட்ட ஒரு உணர்வு என்று நான் கருதுகிறேன்.

11-10 மணி

சட்டமன்றத்தில் அமைச்சர்கள் தான் முழுப் பொறுப்பும் ஏற்றவர்கள். அமைச்சரவை தான் பொறுப்பு ஏற்றது. அதிகாரிகளுக்கு நேரிடையான பொறுப்பு சட்ட மன்றத்தைப் பொறுத்து இல்லை. அமைச்சர்களுக்கு உதவுவதற்காகத்தான் அமைச்சர்களுடைய ஐயத்தைத் தீர்ப்பதற்காகத் தான் அவர்கள் இருக்கிறார்களே தவிர, எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு பதில் சொல்வதற்காக கூட அவர்கள் இங்கே வர வேண்டிய அவசியம் கிடையாது. எனவே அமைச்சர்களுக்கு உதவுவதற்காக அதிகாரிகள் இந்த அவையினுடைய ஒரு பக்கத்தில் வந்து அமருவது என்பது அவர்களுடைய தேவையைப் பொறுத்து, சூழ்நிலையைப் பொறுத்து அமைவதே தவிர, இந்த அவையில் அதை ஒரு பிரச்சனையாக எழுப்புவதற்கு கூட இடமில்லை. இங்குள்ள சூழ்நிலை காரணமாக, சட்டமன்றத்தினுடைய தனித் தன்மை காரணமாக அதிகாரிகள் வந்து அமருவது கட்டாயமான கடமையாகக் கருதப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் உணர்வு வேறு, சட்டமன்றத்தின் உரிமை வேறு.

திரு. எம். அப்துல் லத்தீப் : மிக முக்கியமான பிரச்சனை. சட்டமன்றத்திற்குள் அதிகாரிகள் வர முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். சட்டமன்றத்தினுடைய விவாதத்திலே கலந்து கொள்ள முடியாது என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால் அமைச்சரவை தான் முழு பொறுப்பு. அது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அமைச்சர் அவர்களுக்கு உடனடியாக ஒரு பதில் தேவைப்பட்டது. விளக்கம் தேவைப்பட்டது, இங்கே மன்றத்திலே எழுப்பக் கூடிய பிரச்சினைக்கான விளக்கம் உடனடியாகத் தேவைப்பட்டால் அங்கேயிருந்து விளக்கக் குறிப்புகள் அனுப்புவது மரபாக இருந்து வந்திருக்கிறது. இல்லையென்றால், உடனுக்குடன் விளக்கம் தரக்கூடிய வாய்ப்பு அமைச்சர் அவர்களுக்கும் இல்லாமல் போய்விடும். அதே நேரத்தில் மன்றத்திற்கும் இல்லாமல் போய்விடும். எனவே இந்த நிலையில்

நாம் அதற்காக டிஃபன்ஸ் செய்வது என்பது சரியாக இருக்காது என்பது என்னுடைய கருத்து. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் வேறு கருத்துக் கொண்டிருக்கிறார்கள். அவையிலே அந்த இரண்டு செயலாளர்கள் பொது விவாதத்தின் போது இருக்க வேண்டும் என்பது மரபு. எனவே அவர்கள் இருக்க வேண்டும் என்று தான் நான் கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே அவருடைய ஆர்வத்தை விருப்பத்தை மறுப்பது என்னுடைய நோக்கம் அல்ல. ஆனால் அது மரபு என்பது பழகி விட்ட காரணத்தால் மரபு என்ற சொல்லுக்கு ஆளாகிறதே தவிர, அந்த மரபு கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாக இந்த அவை வலியுறுத்த முடியாது.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில்.(மணியடிக்கப் பெற்றது.)

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் இடம் மாறி அமர்ந்து இருக்கிறார்களே, அமைச்சரவையில் ஏதேனும் மாறுதல் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே தமிழகத்திலே 5 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதியிலே ஒரு துணை நிலையமும், 30 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையமும். . . .

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் பொன்னுசாமி அற்புதமான கருத்தை அமைச்சர்களுக்கு வழங்கியதற்காக இந்த அமைச்சரவையே நன்றி உள்ளதாக இருக்கும். (சிரிப்பு)

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது ஒன்றும் அற்புதமான கருத்து அல்ல. அந்த அற்புதமான கருத்து என்பதும் இங்கே பேசிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் இந்த அவையிலே சொல்லப்பட்டு பதிவாகியிருக்கிறது. அவர் அதை வெளிப்படுத்திக் கொள்வதற்காக, இப்போது அதை விளம்பரப் படுத்திக்கொள்வதற்காகச் சொல்கிறார் என்று நினைக்கிறேன்.

1990 மார்ச் 21]

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 5000 மக்கள் தொகைக் கொண்ட பகுதியிலே ஒரு துணை சுகாதார நிலையமும்........

மாண்புமிகு திரு. துரைமுருகன் : ஆனால் ஒன்று, நான்— எந்த அமைச்சருக்கு எந்த இலாகா என்று சரியாக கூறியிருப்பேன். ஆர். டி. எல். ஏ. மினிஸ்டர் தான் அங்கே உட்கார்ந்திருந்தார். அவரை விவசாயத் துறை அமைச்சர் என்று நீங்கள் தான் பழைய ஞாபகத்தில் சொல்லியிருக்கிறீர்கள். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேராசிரியர் பொன்னுசாமி அவர்களுக்கு, வினா நேரத்தில் தான் அமைச்சர்கள் அவரவர்களுக்கு உரிய இடங்களில் இருக்கவேண்டுமேயல்லாமல் சாதாரணமாக இந்த நேரங்களில் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். இது பெரிய '' Point of Information '' என்று சொல்லக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல.

திரு. எஸ். டேனியல்ராஜ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆயிரம் மக்கள் தொகைக் கொண்ட ஒரு பகுதியிலே ஒரு துணை சுகாதார நிலையமும்; 30 ஆயிரம் மக்கள் தொகைக் கொண்ட ஒரு பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையமும் இயங்கி வருவதாக அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். ஆனால் பல துணை சுகாதார நிலையங்கள் இன்று இயங்காமல் மூடப்பட்டிருக்கின்றன என்பதை அரசு அறியுமா? அதேபோன்று ஆரம்ப சுகாதார நிலையங்களிலே டாக்டர்கள் பல சுகாதார நிலையங்களில் நியமிக்கப்படவில்லை. அதேபோன்று நர்சுகள் நியமிக்கப்படவில்லை. பாதுகாக்கப்பட்ட மருந்துகள், ஊசி மருந்துகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இல்லை........

11-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனைகள், 30 ஆயிரம் பேர்களுக்கு ஒரு மருத்துவ மனை என்ற அடிப்படையிலே, இந்த ஆண்டுகூட 164 மருத்துவ மனைகளுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மருத்துவர்கள் அனைத்து மருத்துவ மனைகளுக்கும் நியமிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இப்போது இந்த ஆண்டிலே மட்டும், 1986-லே சர்வீஸ் கமிஷனாலே தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களை நியமிக்காமலேயே காலம் கடத்திவிட்ட சூழ்நிலையை மாற்றியமைத்து இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் 1440 டாக்டர்களை நியமித்து இருக்கிறோம். சர்வீஸ் கமிஷனில், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணியை நாங்கள் கொடுத்து இருக்கிறோம். அதுவும் போதாமல் காலியிடங்கள் இருக்கிற காரணத்தால் மேலும் இப்போது 640 டாக்டர்களை தேர்வு செய்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக இருக்கிற காலியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னால், டாக்டர்களை தேர்வு செய்துவிட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பித்து இருந்தால் இந்தப் பிரச்சினை வராது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வதோடு, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.......... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : புதியதாக, ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டதனால் ஏற்பட்ட பிரச்சினை அல்ல. கடந்த அரசு, நியமிக்கவேண்டிய காலகட்டங்களில் நியமிக்காமல் செய்த காலதாமதங்களினால் ஏற்பட்ட பிரச்சினைதான். டாக்டர்களை நியமிப்பதில் ஏற்பட்ட பிரச்சினையே தவிர, ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கியதால் ஏற்பட்ட பிரச்சினை அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், 640 டாக்டர்கள் இப்போது தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் இப்பொழுது பரீட்சை எழுதிக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் வெற்றி பெற்று வந்ததற்குப் பிறகு, இவர்களுடைய நிலை என்ன ஆகும்? இல்லையென்றால், இவர்கள் எடுக்கப்பட்டக் காரணத்தால், தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்கள் பாதிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற டாக்டர்களில், தற்காலிகமாக நியமிக்கப்படுகிற டாக்டர்களும் அடங்குவார்கள். அவர்களும் அதில் கலந்துகொள்வதற்கு உரிமை இருக்கிறது. அதிலே பல பேர் தேர்ந்து எடுக்கப்பட்டால், அவர்களுடைய பணியும் அதிலிருந்தே வரன்முறை செய்யப்படும். தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள், மற்ற இடங்களிலே நீக்கப்படுவார்கள். அதுதான் எப்போதும் உள்ள விதி. (10(ஏ) (1) டாக்டர்கள் என்ற நியமனமே எல்லாத் துறைகளிலுமே இருக்கின்ற ஒன்றுதான். 1980லேகூட, மருத்துவத் துறையிலே 100 டார்டர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவும் இப்படி தற்காலிகமாக நியமிக்கப்படுவதற்குக் காரணமே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, பல இடங்களிலே, கிராமங்களில் டாக்டர்கள் நியமிக்கப்படுகின்ற பொழுது, பல்பேர், சரிவீஸ் கமிஷனாலே தேர்ந்தெடுக்கப்படுகிற காரணத்தினால், 2 மாதம் 3 மாதம் விடுப்பைப் போட்டுவிட்டு சென்று விடுகிறார்கள். 1466 டாக்டர்கள் முன்பு நியமிக்கப்பட்டபோது அதிலேகூட 116 டாக்டர்கள் அவர்கள் இடத்திலே சேரவேயில்லை. அதனால் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர்களை நாம் உடனடி

யாக பணியிலிருந்து நீக்கவும் முடியாது. ஆனால் அவர்கள் பணியில் சேர்வதற்கு காலதாமதம் கேட்டுக்கொண்டு, காலம் தாழ்த்துகிறார்கள். அதனால் 116 பேர் சேரவில்லை. மேலும், அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் பல்பேர் பி.ஜி. கோர்ஸ், எம்.எஸ். கோர்ஸ், எம்.டி. கோர்ஸ் போன்ற படிப்பிற்கு சென்று விடுகிற காரணத்தினால், அப்படி 196 பேர் சென்று விடுகிறார்கள். ஆகவே 300, 400 காலியிடங்கள் ஏற்படுகின்றன. 10(ஏ) (1) டாக்டர்கள் நியமிக்கப்படுகின்றபோது, அவர்கள் விடுப்பு எடுத்துக்கொண்டு செல்ல முடியாது. உடனடியாக, அங்கே சேரவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அந்தக் காரணத்தினாலே-தான், 10(ஏ) (1) டாக்டர்கள் இப்போது நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு, சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆப் ஆர்டர். இதிலே நிரந்தரமாக 640 டாக்டர்கள் என்று முன்பு சொன்னார்கள். இப்போது 1466 டாக்டர்கள் என்று சொல்கிறார்கள். நிரந்தரமாக இதிலே தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்ற டாக்டர்களின் எண்ணிக்கை என்ன? தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற டாக்டர்கள் எவ்வளவு? ஏற்கனவே முந்தைய அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்னும் பணியில் அமர்த்தப்படாத டாக்டர்களின் எண்ணிக்கை என்ன? இந்த அரசு முறையான தேர்வு எதுவும் வைக்காமல் இதுவரையில் டாக்டர்களை வேலைக்கு தேர்வு செய்திருக்கிறதா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லும்போதே மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறேன். 1986-ல் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர்களுடைய எண்ணிக்கை 1466. 1986-லே அவர்கள் தேந்தெடுக்கப்பட்டு, 1989-ல் இந்த ஆட்சி பொறுப்பு ஏற்கிறவரை, அவர்களுக்குப் பணி கொடுக்கப்படவில்லை. 3 ஆண்டு காலம் எந்தக் காரணத்தினாலோ, அந்தப் பணி நிரப்பப்படாமல், அவர்களுக்குப் பணியே கொடுக்கப்படாமல் ஒரு சூழ்நிலை இருந்தது. அவர்களும் வழக்கு மன்றத்திற்குச் சென்று' ''சர்வீஸ் கமிஷன் தேர்ந்து எடுக்கிறபோது 1000 டாக்டர்கள் தேவை என்று கேட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் தேர்ந்தெடுத்தது 1,466. அது செல்லாது'' என்று வழக்கு தொடுத்து இருந்தார்கள்.

அதற்குப் பிறகுதான், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 1466 டாக்டர்களுக்கும்-அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த 1466 டாக்டர்களுக்கும், காலியிடங்களிலே பணியினை அமர்த்தியது. அவ்வாறு பணியிலே அமர்த்தியவர்களின் எண்ணிக்கைதான் நான் முன்பு சொல்லியிருந்த புள்ளி விபரம். அதி

லேதான் 116 பேர்கள் சேரவே இல்லை. பலபேர் விடுப்பிலே சென்றிருக்கிறார்கள். மேலும் பலபேர்-196 பேர்—அப்படி தேந்தெடுக்கப்பட்டவர்களில் மேல்படிப்பிற்காக விடுப்பிலே சென்றிருக்கிறார்கள். அதனால் 300 இடங்கள் அதிலே காலி ஏற்பட்டிருக்கின்றன. அதைப்போன்றே இடங்களை நிரப்புவதற்காகத்தான்' தற்காலிகமாக பணியிலே அமர்த்தவேண்டுமென்று, இந்த அரசு காலியிடங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு 640 இடங்களை தற்காலிகமாக நிரப்புவதற்கு ஆணை பிறப்பித்து

(11-20 மணி)

இருக்கிறது. தற்காலிகமாக நிரப்பப்படுவது என்பது எப்போதும் எல்லாத் துறைகளிலும் இருக்கிற ஒன்றுதான். அந்தத் தற்காலிகமாக நிரப்பப்படுபவர்கள், லீவ் எடுக்கின்ற வாய்ப்புகள் கிடையாது. ஆகவே, அவர்கள் சேருகிறபோது இத்தனாம் தேதிக்குள் சேரவேண்டும் என்று சொன்னால் சேர்ந்தாகவேண்டும். அவர்கள் பணியாற்றுகிற காலத்திற்குள்தான் விடுப்பே பெறமுடியும். அவர்களே சர்வீஸ் கமிஷனால் தேர்தெடுக்கப்படுபவர்கள் என்று சொன்னால், அவர்கள் ஆற்றுகிற பணி தொடர்ந்து அதே இடத்திலே வரன்முறை செய்யப்படுவது தான் எந்தத் துறையிலும் இருக்கிற வழக்கமாகும். ஆகவே, இதற்கும், சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கும் எந்தவிதமான முரண்பாடும் கிடையாது என்பதை மேலும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

திரு. **எஸ். டேனியல்ராஜ்** ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்வீஸ் கமிஷன் மூலமாக 116 பேர் அவர்கள் பணியில் சேரவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் தேர்வு செய்யப்படும்போதே அவரவர்களை அந்தந்த சொந்தத் தாலுக்காவில் நியமித்தால் இந்தப் பிரச்சினை எழாது. ஏனென்றால், திருமணமாகாத பெண் டாக்டர்களகூட வேறு மாவட்டத்திற்கு அவர்கள் நியமிக்கப்படுகின்ற காரணத்தினால் அவர்கள் அந்தப் பணியிலே சேர முடியாத ஒரு நிலை ஏற்படுகின்றது. ஆகவே, சொந்தத் தாலுக்காவில் அந்த டாக்டர்களை நியமித்தால் இந்தப் பிரச்சினை வராது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆரம்ப சுகாதார நிலையத்தில்.......

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி **என்கிற** தெய்வசிகாமணி ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான மருத்துவர்கள் சென்னையிலேயிருந்து தேர்தெடுக்கப்பட்டவர்கள் தான் பல பேர் இருக்கிறார்கள், சென்னை, செங்கை-அண்ணா மாவட்டத்திலேயே வேண்டும் என்று கேட்பவர்களும், அவரே பல பேருக்கு சிபாரிசு செய்திருப்பதையும் கூட அறிவார்கள். ஒரு மாவட்டத்தில் அதிகமாகத் தேர்தெடுக்கப்பட்ட மருத்துவர்களும் இருக்கிறார்கள்.

1990 மார்ச் 21] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

அதே மாவட்டத்திலே கொடுக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது. அதற்கான ஏற்பாடுகளும் செய்கிறது. ஆனால் முடியாத சூழ்நிலையில் வேறு மாவட்டங்களுக்குப் போட வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய மருந்து, ஊசி மருந்துகள் வழங்கப்படுவது கிடையாது. 6 மாதங்கள் வரையிலே தான் அந்த மருந்துகள் மக்களுக்குப் பயன் அடைபவைகளாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆறு மாதத்திற்கு அந்த சுகாதார நிலையங்களிலே மருந்துகள் இல்லாமல் இருக்கக் கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, வருடம் முழுவதும் அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்துகள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதே போன்று, கடல் தொழிலிலே ஈடுபடுகின்ற மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை அறிவித்துள்ளீர்கள். அதே திட்டத்தை உள்நாட்டு மீனவர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சத்துணவுத் திட்டத்தையும், அதேபோன்று ஊட்டச் சத்துத் திட்டத்தையும் ஒன்றாக இணைத்து . . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 25 மணித் துளிகள் ஆகிவிட்டன. நீங்கள் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் குறுக்கீடு வருகிற மாதிரியே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். கவனத்திற்குக் கொண்டு வந்தால் போதும். (குறுக்கீடு) ஒவ்வொன்றும் குறுக்கீடு வருகிறாற்போலச் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) ஒரு மணித்துளி தருகிறேன். முடியுங்கள். (குறுக்கீடு) அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டு விடுவேன், முடியுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : சத்துணவுத் திட்டத்தையும், ஊட்டச் சத்துத் திட்டத்தையும் ஒன்றாக இணைத்து ஒருங்கிணைப்புத் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஊட்டச் சத்துத் திட்டத்திலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு வேலை உத்தரவாதம் உள்ளதா என்பதை இந்த நேரத்திலே நான் உங்கள் மத்தியிலே கேட்க விரும்புகிறேன்.

அந்நிய ஆட்சிக் காலத்திலேகூட அறப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள், உண்ணாவிரதப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்குக்கூட அவர்களைச் சிறைச் சாலைகளிலே அடைத்ததாக வரலாறு கிடையாது. ஆனால் மக்கள் ஆட்சி நடைபெறுகின்ற இந்த ஆட்சியிலே காங்கிரஸ் கட்சியின் சார்பில் உண்ணாவிரதப் போராட்டத்திலே ஈடுபட்ட எங்களைக் கைது செய்து சிறைகளிலே அடைத்து வழக்குகளைப் பதிவு செய்கின்ற

ஒரு நிலையை இந்த அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கின்றது. இதுதான் மக்களாட்சித் தத்துவத்தினுடைய நெறிமுறையா என்பதை இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல், 10ஆம் தேதியன்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் இரயில் மறியல் போராட்டத்தை நடத்தியபோது கன்னியாகுமரி மாவட்டம், நெல்லை மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களும் சேர்ந்து, பாளையங்கோட்டைச் சிறையிலே நாங்கள் 2,245 பேர் அடைக்கப்பட்டோம். இந்த அரசினுடைய குறிப்பிலே தமிழகம் முழுவதும் பல மத்திய சிறைச் சாலைகளிலே 3,000 பேர் தான் சிறைச் சாலையிலே அடைக்கப்பட்டார்கள் என்ற செய்தியை அரசு அறிவித்திருக்கின்றது. நாங்கள் 20,000 பேர், முதல் 25,000 பேர் வரை தமிழகத்திலே பல மத்திய சிறைகளிலே, காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஆகிய நாங்கள் அறப்போராட்டத்திலே ஈடுபட்டு, அடைக்கப்பட்டோம். உங்களைப் பொறுத்த வரையிலே 3,000 பேர் தான் அந்தச் சிறைச் சாலைகளிலே அடைக்கப்பட்டனர் என்று நீங்கள் கூறுவது என்றால் சிறைச் சாலையினுடைய தணிக்கைக் கணக்கிலே 10 ஆம் தேதி முதல் விடுதலை செய்யப்பட்ட 17-ஆம் தேதி வரை அங்கே 3,000 பேருக்குத்தான் ரேஷன் பொருட்களை நீங்கள் வழங்கியதாக (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திருவாளர் தங்கபாண்டியன் (குறுக்கீடு) 27 மணித்துளிகள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) அவருக்கு Finishing Trouble உள்ளது. (குறுக்கீடு) சரி, சீக்கிரம் முடியுங்கள்.

11-25 மணி

திரு. எஸ். டேனியல்ராஜ் : தணிக்கையினுடைய கணக்கிலே 3,000 பேருக்குத்தான் நீங்கள் ரேஷன் பொருட்கள் வழங்கியதாக கணக்குக் காட்டுவீர்களா என்று இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன். நித்திய கண்டம் அற்ப ஆயிசோடு இன்று தேசிய முன்னணி ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் ஒன்றை தெளிவுப்படுத்த விரும்புகிறேன். நிச்சயமாக கால சூழ்நிலையின் காரணமாக ராஜீவ் காந்தியினுடைய ஆட்சி

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயினிட் ஆப் ஆர்டர். எங்கள் தேசீய முன்னணி சர்க்கார், எங்கள் வி. பி. சிங் அவர்கள் இன்றைக்கு ஆப்ரிக்காவில் நமிபியாவுக்கு போய் இருக்கிறார். அதை வந்து அல்ப ஆயுசு என்று சொல்கிறாரா. அல்ப ஆயுசுக்கு அர்த்தம் தெரியுமா? இவருக்கு நான் கேட்கிறேன். இன்று இவர் ரோடில் போனால் ஒரு கார் ஏறினால் இவருக்கு அல்ப ஆயுசு. நான் வெளியே போய் கீழே விழுந்தால் எனக்கு

1990 மார்ச் 21] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

அல்ப ஆயுசு. என்னமோ நான் இருக்கிறேன் 74 வயதிலே. இவரால் இருக்க முடியுமா நான் கேட்கிறேன். என்னமோ தேசிய முன்னணி அரசை அல்ப ஆயுசு என்று சொல்கிறாரே. இதை வாபஸ் வாங்க வேண்டும் இல்லை என்றால் நான் விடமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த விஷயமே அற்ப விஷயம் தான்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ராஜீவ் காந்தியினுடைய அரசு இந்தியாவிலே மீண்டும் மலர இருக்கிறது.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழமொழியை மாற்றிச் சொல்கிறார்கள். நித்திய கண்டம் பூரண ஆயுசு என்பது தான் பழமொழி என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ராஜீவ் காந்தியினுடைய ஆட்சி இந்தியாவிலே மீண்டும் மலர இருக்கிறது. நிச்சயமாக மறைமலை நகரத்திலே இருக்கின்ற ரயில் நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய பெயரை ராஜீவ் காந்தியினுடைய திருக்கரங்களால் மீண்டும் சூட்டுவோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொண்டு கலைஞர் அவர்கள் அந்த நேரத்திலே நிச்சயமாக மறுப்புக் கொடுக்காமல் இதற்கு ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கையோடு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இப்பொழுது வரவு-செலவுத் திட்டம் பற்றி பேசச் சொல்கிறீர்களா, இன்னொரு சர்க்கார் பற்றி நித்திய கண்டம் பூரண ஆயுசு, நித்திய கண்டம் அல்ப ஆயுசு இதைப் பற்றி பேசச் சொல்கிறீர்களா என்று எங்களுக்குத் தெரியவில்லை. நித்திய கண்டம் பூரண ஆயுசு என்பதற்கு என்ன அர்த்தம் இவரால் சொல்ல முடியுமா? நித்திய கண்டம் என்ன கண்டம் என்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை. முன்பு இருந்த சர்க்காருக்கு இந்த மாதிரி ஏற்படவில்லையா? ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொன்றில் ஏதாவது ஏற்படும், அதையும் பேப்பரில் போடுவார்கள், பத்திரிக்கை சுதந்திரம் கொடுத்த பிறகு பெரியதாகத்தான் போடுவார்கள். காங்கிரஸ் ஆட்சி அப்போது சர்வாதிகார ஆட்சியாக இருந்தது. இப்போது ஜனநாயகம். ஜனநாயகத்தில் இதுவெல்லாம் ஏற்படுவது சகஜம். ஒழுங்கான செயல் நடப்பது ஜனநாயகத்தில் சகஜம்தான்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : அரியானாவில் துணைப் பிரதமர் மகன், பேரன் இவர்கள் எல்லாம் ஆட்சியில் இருக்க வேண்டும் என்று விரும்பவில்லையா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : துணைத் தலைவர் அவர்களே, பரம்பரை என்பது 47 வருடமாக நடந்து கொண்டிருந்தது. நடுவில் ஒருவர் வந்தால் தான் அவர் கிளீன் ஆகி விடுகிறாரே.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியவர் தீட்சிதர் அவர்களுக்கு சொல்லிக் கொள்வது பண்டித நேரு அவர்கள் இந்த நாட்டினுடைய பிரதமராக இருந்த நேரத்தில் இந்திரா காந்தி அமைச்சராக வில்லை; இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்த நேரத்தில் ராஜீவ் காந்தியோ சஞ்சை காந்தியோ அமைச்சராகவில்லை, ஆனால் இன்று பார்க்கிறோம் முதலமைச்சராக இருந்த தேவி லால் அவர்கள் மத்தியில் துணை பிரதமராக ஆன உடனே தன்னுடைய பிள்ளையை அங்கே பதவியில் வைத்து இருக்கிறார்கள். எத்துணையோ சான்றுகள் சொல்லலாம். எனவே தயவுசெய்து நீடித்துக்கொண்டு போனால் இன்னும் பல சான்றுகள் என்னிடம் இருக்கின்றன.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேட்க வேண்டும். காங்கிரசில் இப்போதுதான் வந்து உட்கார்ந்து இருக்கிறார். நாங்கள் எல்லாம் ஒரிஜினல் (குறுக்கீடு) அவரும் சேர்ந்து தான். அவரும் ஒரிஜினலாக இருந்தவர் தான். ஆகவே அவர் அப்போது ட்ரெயினி, ஒரு காலத்திலே பரம்பரை ஆட்சி இருந்தது. இப்போது பரம்பரை ஆட்சி இல்லாமல் வேறு ஒருவரிடம் கொடுத்தால், இது போச்சி, அது போச்சி, நித்திய கண்டம் பூரண ஆயுசு என்று எல்லாம் சொல்கிறீர்கள். டெம்பரரி சேர் என்று எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஜனநாயகத்தில் பிள்ளை அமைச்சராக வரக்கூடாதா? அங்கே 45 பேரில் 42 எம். எல். ஏ.-க்கள் அவருக்கு ஆதரவு கொடுத்து இருக்கிறார்கள். 42 பேர் மெஜாரிட்டி அங்கே அவருக்கு இருக்கிறது. அந்த கட்சியில் 45 பேர் கூடியதில் 42 பேர் சௌதாலாவுக்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். இதில் என்ன தப்பு. அந்த சீட்டை கொடுத்திருக்கிறார்கள். அந்த சீட்டில் அவர் உட்கார்ந்தக் கூடாதா? அவர் உட்கார்ந்தால் அந்த சீட்டு ஓடிவிடுமா. நான் கேட்கிறேன். ஆகவே அதில் தவறு ஒன்றும் இல்லை.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வரலாறு படைக்கின்ற கழகத்தினுடைய தலைவர் தமிழக முதலமைச்சர் 1990-91 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினை

1990 மார்ச் 21] [திரு. வே. தங்கபாண்டியன்]

இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்து பல்வேறு அரசியல் கட்சிகளுடைய உறுப்பினர்கள் இங்கே நல்ல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

மணி 11.30

இங்கே எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிற மாண்புமிகு காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய உறுப்பினர்களும், 13 ஆண்டு காலம் தமிழகத்தினுடைய ஆட்சி பீடத்தில் இருந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களும் கருத்துக்களை இங்கே வழங்கி இருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே, எதுவும் இல்லை என்ற விரக்தியையும், இதிலே எந்தத் திட்டத்தையும் காண முடியவில்லை என்ற கோபத்தையும் அவர்கள் சார்பிலே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தமட்டில் கண்ணை மூடிக் கொண்டு காட்டிலே திரிபவர்களுக்கு அகல் விளக்கினுடைய அருமை தெரியாமலிருந்தாலும் கூட கழகத் தலைவர் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இந்த தமிழ் மக்களின் இதய சிம்மாசனத்திலே நிரந்தரமாக வீற்றிருக்கிற அந்த அற்புதத் தலைவர் அவர்கள் வடித்துத் தந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏழை எளிய மக்கள் விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாள நண்பர்கள் அனைத்துப் பெரு மக்களும் நிம்மதி பெருமூச்சு விடுகிற ஒரு நிதிநிலை அறிக்கையைப் பெற்றிருக்கிறோம் என்று தமிழ் கூறும் நல்லுலகம் கூறுகிறது.

வெறும் பொற்குடத்தை மட்டும் தமிழகத்திற்குத் தரவில்லை. அந்தப் பொற் குடத்தில் பொட்டிட்டு அதை வரவு செலவுத் திட்டம் என்ற முறையிலே நிதிநிலை அறிக்கை என்ற அளவிலே இங்கே தந்திருக்கிறார்கள். 1971—72-லே இதே மாமன்றத்திலே அவர் முதலமைச்சராகவும் நிதியமைச்சராகவும் இருந்து பொறுப்பேற்ற அந்தத் தருணத்திலே எந்தக் கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வலியுறுத்திச் சொன்னாரோ எந்த அடித்தளத்து மக்களை கை தூக்கி விடுவதற்கு கழக அரசு வந்திருக்கிறது என்று அன்றைக்கு ஆணையிட்டு சூளுரைத்து சபதமேற்று சொன்னாரோ அந்த எண்ணத்திலே துளியளவும் மாறாமல் இந்த நிதிநிலை அறிக்கையிலே தன்னுடைய கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சி வரிசையிலே உள்ளவர்கள் தங்களுடைய எண்ணத்தைச் சொன்னார்கள். வெறும் புள்ளி விவரக் குவியல் என்று சொன்னார்கள். அருள்கூர்ந்து மாமன்றத்து உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்ற பொழுது மனம் திறந்து நம்முடைய பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் உண்மையை மறைக்காமல், நெஞ்சிலே பட்டதை நியாயமோடு சொல்ல வேண்டுமென்பதற்காக

தமிழ் விளையாடுகிறது. நாவிலே நன்தமிழ் நர்த்தனம் ஆடுகிறது என்று சொன்னார்கள். மேலும், தமிழையே கவசமாக்கி, தங்களுடைய குறைகளை மறைக்கப் பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். தமிழ் எங்கள் உயிருக்கும் மேல். இலக்கியச் செல்வர் அவர்கள் அறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழும், கர்ணன் கவசத்தோடும் குண்டலத்தோடும் பிறந்ததைப் போல இணைந்து பிறந்தது என்பதை. எங்களுக்கு அது பாது காப்பாக இருந்தால் அது பெருமைதான்.

மறைமலையடிகளுடைய மாபெரும் புகழ் நிலைநாட்டப் பட வேண்டுமென்று இன்றைக்குப் பேசுகிற நம்முடைய கழகத்தினுடைய அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் தமிழுக்காக வெஞ்சிறை சென்றவர்கள். கழகத்தினுடைய தலைவர் தன்னுடைய 14 ஆவது வயதில் தேரோடும் திருவாரூர் வீதியில் தமிழ்க் கொடி ஏந்தி ஓடிவரும் இந்திப் பெண்ணே, நீங்கள் தேடி வரும் கோழை தமிழகத்திலே இல்லை என்று அன்றைக்கு போர் பரணி பாடினார்கள். அந்தத் தலைவருக்கு பாளையங்கோட்டை தனிமைச் சிறையிலே இடம் இருந்ததை, பளிங்குக் கற்களில் பெயர் இருக்கிறது. எங்களுக்கும் அந்தப் பளிங்குக் கற்கள் வேண்டுமென்று கேட்டால் ஆட்சேபணை இல்லை. ஆனால் திரு. ஆல்போன்ஸ் அவர்கள் புதிய காங்கிரஸுக்கு இன்றைக்கு இங்கே புதுக் கவிதை பாடினார்கள். நான், யாருக்கும் யாரையும் சளைத்ததாக குறிப்பிட மாட்டேன். தியாகத்துக்கு ஒருவரோடு ஒருவரை ஒப்பிட்டுச் சொல்லும் பழக்கம் எனக்கு இல்லை. ஆனால் பாளையங் கோட்டை தனிமைச் சிறையிலே கலைஞர் அவர்கள் இருந்ததைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்: என் தம்பி கருணாநிதி தனிமையில் அடைக்கப்பட்ட பாளையங்கோட்டை சிறைச்சாலைதான் நான் சென்று வர விரும்புகிற யாத்திரைத் தலம் என்று. தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்றாலும், அமைச்சர் பொறுப்பை, ஏற்றுக் கொள் என்று கட்டளையிட்டாலும், இரண்டையும் சமமாக மதிப்பவன் என் தம்பி கருணாநிதி என்று அண்ணா அவர்களால். பாராட்டப் பெற்றவர்கள். 50 ஆண்டுக் கால பொது வாழ்வில், எத்தனையோ முறை சிறைச்சாலைக்குச் சென்று வந்தவர்கள். இங்கே சிறைச்சாலையிலே இரண்டு நாட்கள், 25 ஆயிரம் பேர் இருந்தோம் என்று பட்டியலிட்டு வேகமாகப் பேசுகிற அருமை நண்பர்களுக்குச் சொல்கிறேன், உங்களுடைய வேகத்தையும் வீரத்தையும் நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அந்தத் தியாக வரலாற்றை அருள்கூர்ந்து காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய நண்பர்களே, கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். இன்றைக்கு ஜனநாயக மாண்புகள், ஜனநாயக மரபுகள் இந்த ஒரு வருட காலமாக, ஓங்கிக் குரல் ஒலிக்கிற

1990 மார்ச் 21] *(திரு. வே. தங்கபாண்டியன்)*

அந்த உரிமைக் குரல் முன்பு எங்கே சென்றது? காட்டாற்று வெள்ளம் போல் அவிழ்த்து விடப்பட்ட எமர்ஜென்சி காலத்திலே நெருப்பு ஆற்றிலே நீந்தி வந்தோமே, அன்றைக்கு ஜனநாயகத்தின் மரபு பற்றிய குரல் எங்கே வந்தது?

மணி 11-35

13 ஆண்டுக் காலம் உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டு, எங்களுடைய உணர்ச்சிகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டது. இதே தலைவர் கலைஞர் அவர்கள், சட்ட மன்றத்தில் உறுப்பினராக வெள்ளி விழா கொண்டாடியவர்கள், 9 ஆண்டுக் காலம் அமைச்சராக இருந்தவர்கள், 7 ஆண்டுக் காலம் முதலமைச்சராய் இருந்தவர்கள், சென்னை மத்திய சிறைச் சாலையில் கைதி உடையில் வைக்கப்பட்டார்களே, அப்போது ஜனநாயகத்தைப் பற்றிப் பேசினீர்களா? எங்கே ஜனநாயகம் போனது? வாய் திறந்தீர்களா? ஜனநாயகத்திற்கு யார் வக்காலத்து வாங்குவது? கோட்டானா குயிலுக்குப் பாடல் கற்றுத் தருவது? மயிலுக்கு மந்தியா நடனம் கற்றுத் தர முந்தி வருவது? அதைப் போல சில பிரச்சினைகள் இங்கே பேசப்பட்டது. எமர்ஜென்சி காலத்தில் தூக்கியெறியப்பட்டார்கள். இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பலர் அன்றைக்கு மிசா கொடுமையை அனுபவித்தார்களா இல்லையா? ஒரு உறுப்பினருடைய தந்தை, இவர் சிறையிலிருந்தபோது இறந்து விட்டார். இறந்துவிட்ட தந்தைக்கு கடைசி நேர ஈமச் சடங்குகளைச் செய்யக்கூட 2 மணி நேரம் விடுவிக்கக் கூட அவரை அனுமதிக்கவில்லையே? இன்றைக்கு இளைய தளபதியாக இருக்கிற தம்பி ஸ்டாலின் எந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தப்பட்டார்.? மாறன் எந்த அளவுக்கு வதைக்கப்பட்டார்? முதலமைச்சரின் குடும்பம் எந்த அளவுக்கு இழிவுபடுத்தப்பட்டது? அன்றைக்கு இவைகளைப் பற்றி வேகமாகப் பேசியிருந்தால், அன்றைக்கு ஜனநாயகத்திற்குக் குரல் கொடுத்திருந்தால் இன்றைக்கு உங்களுடைய குரலுக்கு வலிமை இருக்க முடியும். ஜனநாயகம் என்பது சந்தர்ப்பவாதமாக இருந்துவிடக் கூடாது. அதைத்தான் தம்பி ராஜன் அவர்கள் இங்கே எனக்கு முன்னால் பேசினார்கள். போதி மரத்தடியில் உட்கார்ந்தவர்கள் எல்லாம் புத்தராகி விட முடியாது. செஞ்சிக் கோட்டை ஏறியவர்கள் எல்லாம் தேசிங்கு ராஜனாகி விடமுடியாது. சட்டை போடாமல் சட்டசபைக்கு வந்தவர்கள் எல்லாம் சா. கணேசனாகி விட முடியாது என்பதை உணர வேண்டும். இன்றைக்கு ஜனநாயகத்திற்காகப் பேச உரிமை பெற்றிருக்கிற இயக்கம், வல்லமை பெற்றிருக்கிற இயக்கம் இருக்கிறதென்றால் இது தி.மு.க. வுக்கு மட்டுமே இருக்கிறது என்பதைவிட வேறு எந்தக் கட்சிக்கு இருக்கிறது என்பதை வேகமாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனநாயகத்தை மதிப்பதால்தான். இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் சில செய்திகளைச் சொல்ல முடிந்திருக்கிறது. நான்

(திரு. வே. தங்கபாண்டியன்) [1990 மார்ச் 21

இரண்டொரு காரியங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நாம் நமது சொந்தப் பிரச்சினையை விட்டு விடலாம். எந்தப் பிரச்சினையை அவர்கள் விட்டிருக்கிறார்கள்? நான் தென் பாண்டி மண்டலத்தைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை, கட்சிக் கண்ணோட்டத்தை விட்டுக் கொஞ்சம் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், நிலைமையை பிரத்தியட்சமாக எண்ணிப் பார்க்க வேண்டாமா? நீண்ட நாள் கோரிக்கை—நெல்லைச் சீமையிலே தாமிரபரணி ஆற்றிலே, அந்த நித்தம் நித்தம் தவமிருக்கிற பொதிகை மலைத் தென்றலைப் பற்றிப் பேசுகிற அந்த மனோன்மணீயம் இருக்கிறதே—அதில் 'நீராருங் கடலுடுத்த' என்று பெருமையாகப் பாடுகிறோமே அந்த அற்புதமான தமிழ்க் கவிதையை தமிழுக்குத் தந்த மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையவர்களின் பெயராலே பல்கலைக் கழகத்தை அமைப்போம் என்று அறிவித்திருக்கிறார்களே, அதைப் பாராட்ட வேண்டாமா? அதைக்கூட பாராட்ட வேண்டுமென்ற உணர்வு இல்லாமல் இருந்தால் யாரை நோவது? Application is a kind of civilization. பாராட்டுவதே ஒரு நாகரிகம். ஆனால் திட்டமிட்டு, அதையும் நாம் பாராட்ட மாட்டோம் என்று சொன்னால், அதை நீங்கள் விரும்புகிறீர்களா?

முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று இருந்தபோது, 1,500 மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்குத்தான் தார்ச்சாலை போடப்படும் என்ற திட்டம் இருந்ததை இன்றைக்கு மாற்றி 1,000 கிராம மக்கள் உள்ள கிராமங்களுக்கும் தார்ச்சாலை போடுகிற திட்டத்தை இந்த அரசு இன்றைக்கு நடைமுறைப்படுத்தக் காத்திருக்கிறது. இன்னொன்றை நாம் மறந்துவிடக் கூடாது. நிதிநிலை அறிக்கையில் சூடான, சுவையான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது இயற்கைதான். அதுவும் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னால், மத்தியில் ஒரு புதிய ஆட்சி அமைந்திருக்கிற இந்த நேரத்தில், பல்வேறு மாநிலங்களில் புதியதாக ஆட்சி மாற்றங்கள் நடந்திருக்கின்ற இந்த நேரத்தில், மத்தியில் குவிந்திருக்கின்ற அதிகாரங்களைப் பரவலாக்கி, நிதிவாயில்களை மாற்றியமைத்து, மாநில, வளர்ச்சித் திட்டங்களுக்கு அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையில் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். சொல்ல வேண்டிய கருத்துக்களை தயங்காமல் கூறி, பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டியிருக்கிறோம். ஆனால் மத்திய நிதிக் குழு—இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிற 9 ஆவது நிதிக் குழுவில் நிதி ஒதுக்கீட்டு முறையில் காட்கில் பார்முலாவைப் பின்பற்றாமல் தன்னிச்சையாக சில முறைகளை மாநில அரசு மீது திணித்து நிதி வாயில்களை அடைக்கத் தக்க அளவுக்கு இருக்கிறது என்பதையும், தவறாமல் தமிழ்

1990 மார்ச் 21] [திரு. வே. தங்கபாண்டியன்]

நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அதிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் எல்லோராலும் பாராட்டப்படக் கூடிய பொருளாதார வல்லுநர் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் ஒரு கருத்தை 19-ந் தேதியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் சொல்லியிருக்கிறார்கள். மத்திய மாநில பட்ஜெட்டுகள் வந்திருக்கிற இந்த நேரத்தில் அந்தக் கருத்துக்களை எண்ணிப் பார்க்க வேண்டும். பற்றாக்குறை பட்ஜெட் என்றாலே மோசமான பட்ஜெட் என்று கருதக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். வளர்ந்து வருகிற

11-40 மணி

நாடுகளில், அதாவது 'டெவலப்பிங் கன்ட்ரீஸ்' என்று சொல்லப்படுகிற நாடுகளில் புதுப்புது திட்டங்கள் அடித்தள மக்களுக்காக அறிவிக்கப்படுகிறது. எனவே நல்ல கண்ணோட்டத்தோடு பார்க்கிறபோது Deficit Budget is not a bad budget பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும்கூட நிதியாதாரங்களை விரைவுப்படுத்த, வேகப்படுத்த, அந்தப் பற்றாக்குறையை ஈடுகட்டக்கூடிய அளவுக்கு உரிய வழிமுறைகளை மாநில அரசு பின்பற்ற வேண்டும். அந்த அளவுக்குத்தான் டாக்டர் ஆதிசேஷயா அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

Limiting centre's dificit financing is more important. அதாவது அந்த பற்றாக்குறையை மத்திய அரசு தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே எவ்வளவுக்கெவ்வளவு சுருக்கிக் கொள்கிறதோ, அந்த இடைவெளியை எந்த அளவுக்குக் குறைத்துக் கொள்கிறதோ அந்த அளவுக்குத்தான் மாநில அரசின் வளர்ச்சித் திட்டங்கள் இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்னொரு கருத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது சென்ட்டர்ஸ் அலோக்கேஷன் ஆஃப் இன்கம் டாக்ஸ் என்று சொல்லப்படுகின்ற அந்த வருமான வரியிலும், ஆயத்தீர்வையிலும் மாநிலங்களுக்குப் போதிய அளவுக்குக் கொடுத்தால் அதாவது மகாராஷ்டிரத்திற்கு, மேற்கு வங்கத்திற்கு, தமிழகத்திற்குத் தேவையான அளவுக்கு, கொடுக்க வேண்டிய அளவுக்கு கொடுக்க வேண்டும் என்று டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்துதான். அதைத்தான் டாக்டர் கலைஞர் அவர்கள் 9-வது நிதி ஆணையம் தன்னுடைய அணுகுமுறையிலே ஒரு மாறுதலை புதிய சிந்தனையோடு கொண்டுவருவது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அனைத்து நிதியாதாரங்களையும் மத்திய அரசினிடத்திலே குவித்து வைத்துக் கொண்டு மாநில அரசுகள் கையேந்திக் கொண்டிருக்கிற நிலைமையில், மத்திய அரசின் தயவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நிலைமையில்

[திரு. வே. தங்கபாண்டியன்] [1990 மார்ச் 21

இருக்கக்கூடாது. மாநிலங்கள் வளமாக இருக்கவேண்டும். மத்திய அரசும் வளமாக இருக்க வேண்டும். மாநில அரசுகள் வளமாக இருப்பதற்கு நிதியாதாரங்கள் அனைத்தும் அதற்குக் கொடுக்கப்பட்டாகவேண்டும். மாநில அரசின் நிதியாதாரங்களை அதிகப்படுத்த வேண்டும் என்றும், அந்தப் பொருளாதாரம் அடித்தள மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்றும் ராஜ மன்னார் குழு அறிக்கை மீது போட்ட தீர்மானம் நமக்குப் பயன்படுகிறது.

மத்திய—மாநில அரசுகளின் உறவு குறித்து இதே மாமன்றத்தில் நாம் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அந்தப் பேருண்மையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு புதிய சிந்தனையோடு நாம் அணுகவேண்டும். ரஷ்ய நாட்டின் இரும்புத் திரை விலகாது, அந்தத் தத்துவத்திலிருந்து மக்கள் மாற மாட்டார்கள் என்று உலகம் பூராவும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில் திரு. கோர்ப்பசேவ் அவர்கள் துணிந்து புதிய சிந்தனைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். இரும்புப் பூட்டுக் கதவு திறக்கப்பட்டிருக்கிறது. சிறுத்தை வெளியே வந்ததுபோல் புதிய தத்துவங்களை திரு. கோர்பச்சேவ் அவர்கள் தந்திருக்கிறார்கள். ஒரு உண்மையான தாக்கம், வேறுநாடுகளில் உள்ள நிலைமைகளைப் பார்த்து ஏற்பட்ட உணர்வு போன்றவற்றை எல்லாம் உணர்ந்த காரணத்தால்தான் அவர்கள் அவ்வாறு கொண்டு வந்தார்கள். அதே உணர்வோடுதான் நமது மத்திய அரசும், மாநில அரசும் இந்தப் பிரச்சினையை உருவாக்கி இருக்கிறது.

மதுவிலக்குப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் சில கொள்கைகளைத் தளர்த்தியிருக்கிறார்களே தவிர, நிர்வாகச் சீர்திருத்தத்திற்காக மாற்றங்களைச் செய்திருக்கிறார்களே தவிர, ஏதோ மதுவிலக்குக் கொள்கையிலிருந்து, மகாத்மா காந்தி சொன்ன கொள்கையிலிருந்து தவறிவிட்டோம் என்பதல்ல. கலாசாரத்தில் இந்தத் தமிழகம் உயர்ந்து இருக்கிறது.

''சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிக ளோட்டி விளையாடிடுவோம்.''

அதாவது நமக்குச் சொந்தமான ஆந்திராவும் அண்டை மாநிலமான கர்நாடகாவும், அதாவது நம்முடைய கலாச்சாரத்திற்கு ஒப்பான கர்நாடகாவும், நம்மைப்போலவே இருக்கிற கேரளாவும் தென்னகம், திராவிட பூமி என்றெல்லாம் அழைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தென் பிராந்தியம் உலக வரலாற்றில் சிறப்புப் பெற்று விளங்குகிறது. இடைத் தரகர்கள் கையிலே வைத்துக் கொண்டு, சீமான்களாக, பூமான்களாக, புதிய பணக்காரர்களாக உருவாகி இருக்கிறார்கள். சமுதாயத்தில் கள்ளச்சாராய ஜாம்பவான்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களால் அரசாங்கத்தை

1990 மார்ச் 21] [திரு. வே. தங்கபாண்டியன்]

மிரட்ட முடிகிறது. அவர்களால் முக்கியமான போலீஸ் அதிகாரி களைக் கையிலே போட்டுக் கொள்ள முடிகிறது. அவர்கள் விரும்புவதெல்லாம் சுலபமாக அவர்களுடைய கைக்குக் கிடைத்து விடுகிறது. சிரமப்படாமல், தொந்தரவு இல்லாமல் பூச்சிக்கொல்லி மருந்து இல்லாமல், உரம் போடாமல், மூலதனம் போடாமல், வரு மான வரி கட்டாமல் எல்லாமே அவர்களுக்குக் கிடைத்து விடு கிறது. ஆகவேதான் அதிலே ஒரு மாறுதலைச் செய்யவேண்டும் என்றுதான் இதைத் கொண்டு வந்திருக்கிறார்கள். (மணியடிக்கப் பட்டது). மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்னும் 5 நிமிடங்கள் எனக்கு நேரத்தை அதிகரித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சொந்தப் பிரச்சினை. காமராஜர் அவர்கள் பற்றிச் சொல்லவேண்டும் என்று விரும்புகிறேன். மாண்புமிகு இலக்கியச் செல்வர், காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். காமராஜரின்மீது இந்த அரசும், எங்கள் தலை வரும் எந்த அளவுக்குப் பற்றும், பாசமும் வைத்து இருக்கிறார்கள் என்பது பற்றி இந்த அவைக்கு நான் சொல்லவேண்டிய தேவை யில்லை. அனைவருக்கும் தெரியும். அண்மையில் நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விருதுநகருக்கு வந்திருந்தார்கள். அரசு விழாவிலே கலந்துகொண்டார்கள். தலைவர்

11-45 மணி

காமராஜருடைய தமக்கையார் உடல்நலம் குன்றி இருக்கி றார்கள் என்ற செய்தியை மேடையிலே நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் சொக்கரும் நானும் சொன்னோம். உடனடியாக அவருடைய இல்லத்திற்குச் சென்று, அரசு விழா முடிந்தவுடனேயே தலைவர் கலைஞர் அவர்கள் அந்த இல்லத்திற்கு, காமராஜர் தமக்கையார் இருக்கின்ற வீட்டிற்குச் சென்று, அவருக்கு ஆறுதல் சொல்லி, நான் பெருமைக்காகச் சொல்லவில்லை, அவருடைய கையிலே பணம் இல்லை, கலெக்டரை வரவழைத்து உடனடியாக ரூ. 10 ஆயிரம் அரசு சார்பில் கொடுத்தார்கள். இதை விளம்பரப் படுத்தவில்லை. ஏற்கெனவே அந்த வீடுகூட,—நம்முடைய மாண்பு மிகு சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற மதிப்பிற்குரிய, திரு. தென்னரசு அவர்கள் கூட சிபாரிசு செய்தார்கள். ரூ. 25 ஆயிரத் திற்குமேல் வாங்க முடியும் என்று சொல்லும்போது, அவருடைய சகோதரியார் முறையிட்டபோது, அப்போதே ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து வாங்கி அதை நினைவகமாக ஆக்கியிருக்கிறோம். ஆகவே யாரும் காமராஜரைக் குறைத்தோ, அவருடைய தியாகத்தை மறைத்தோ, அவருடைய பெயர் வேண்டாம் என்று சொல்வதற்கு கடுகளவும் மனம் வராது. அப்படிப்பட்ட காமராஜர் மாவட்டத்தில் மாவட்டம் பிரிக்கப்பட்டபோது சில காரியங்கள் அங்கே வேகமாக நடைபெறவேண்டும். மாவட்டம் பிரிந்து 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி இன்னும் மதுரையிலேதான் இருக்கிறது. கூட்டுறவு மத்திய

வங்கியின் மூலம்தான் விவசாயிகளுக்கு அடிப்படையான பல்வேறு காரியங்களைச் செய்யமுடியும். விரிந்து பரந்து இருக்கிற முகவை மாவட்டத்தைப் பிரிக்கவேண்டும் என்று சொல்லி, 3 ஆகப் பிரித்தும்கூட வையபிள் யூனிட் என்று வாய்க்கத்தக்க அளவுக்கு ஒரு வாய்ப்பும் வசதியும் உள்ள காமராஜர் மாவட்டத்திலே உடனடியாக மத்திய வங்கி பிரிக்கப்பட்டாகவேண்டும்.

இன்னொரு செய்தி, மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலம் இந்த மாமன்றத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதி அருப்புக் கோட்டைத் தொகுதி. உங்களுக்குத் தெரியும். தலைவர் சொல்லியிருப்பார். கல்யாணி என்று பெயர். ஆனால் அவர்களோ விதவை. பெயரோ அருப்புக்கோட்டைத் தொகுதி. ஆனால் அருப்புக்கோட்டை நகரம் இல்லை. அருப்புக் கோட்டை ஒன்றியம் இல்லை. இந்தியாவிலேயே ஒரு தொகுதி அந்த ஊர் பெயர் இல்லாமல் இருப்பதே அருப்புக்கொட்டை தொகுதியாகத்தான் இருக்க முடியும்.

இதே சட்டமன்றத்தில், எனக்கு முதல்முதலாக கவர்னர் உரையிலே பேசுகின்ற வாய்ப்பு கிடைத்து என்னுடைய கன்னிப் பேச்சிலே சொல்லி இருக்கிறேன். வறுமைக் கோட்டிற்கு என்று ஒரு தொகுதி இருக்குமானால் அந்தத் தொகுதி அருப்புக் கோட்டைத் தொகுதிதான். முழுக்க முழுக்க கிராமங்கள் அடங்கிய தொகுதி. 3 ஒன்றியங்கள் அடங்கிய ஒரு தொகுதி யாகும். அதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. பல் வேறு காரியங்கள் நடைபெறாமல் இருக்கின்றன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முதன்முதலாக அந்தத் தொகுதிக்கு வந்தபோது சொன்னார்கள். இது என்னுடைய சொந்தத் தொகுதி. நான் உலவிய பூமியாகும். இங்கே எல்லா காரியங்களையும் செய்வேன். கிருதமால் நதித் திட்டம் உடனடி யாக நிறைவேற்றப்படும் என்று அன்றைக்கு வாக்குறுதி தந்தார். கம்பிக் கொடி கால்வாய்த் திட்டம், நிறையாறு கால்வாய்த் திட்டம் ஒரு உயிர்நாடியான திட்டம். இங்கே நிதிநிலை அறிக் கையிலே இல்லை. அதுபோல் ஜீவனாக இருக்கின்ற நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தந்தால் காலமெல்லாம் வான் பார்த்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு மறுமலர்ச்சி உருவாக்கித் தரமுடியும் என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய பகுதியிலே அரசு அனுமதித்தால் அர சாங்கத்திலே, மாவட்ட ஆட்சி மன்றத்திலேயிருந்து ஒரு தொழிற் சாலைக்கு இங்கே சிபாரிசு செய்திருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுக்க முழுக்க அதிகாரிகளை நம்பாதீர்கள். புள்ளி விவரங்களை நம்பியிருக்கின்ற அதிகாரிகள் உங்களுக்குத் தவறான கணக்கு சொல்வார்கள். வெறும் 22கோடி ரூபாயில் பின்தங்கிய பகுதியில் ஒரு கூட்டுறவு நெசவாலை அமைக் கலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். மத்தியிலே இருந்து, ஆனால் இங்கே இருக்கின்ற கைத்தறி அமைச்சகம் அது இன்றைக்கு

1990 மார்ச் 21] *[திரு. வே. தங்கபாண்டியன்]*

சரிப்பட்டு வராது என்று சொல்கிறது. வெறும் 22 கோடி ரூபாய்க்கு ஒரு பின் தங்கிய பகுதிக்கு வாய்ப்பாக இருக்கும் என்ற அளவில், அங்கேயிருந்து சிபாரிசு செய்கின்ற காரியத்தை வெறும் புள்ளிவிவரத்தை வைத்துக்கொண்டு பேசுகின்ற சில அதிகாரிகள் இருக்கின்றார்கள்.

அதுபோலவே கல்வித்துறை கடல்போல் வளர்ந்திருக்கிறது. இங்கே நுங்கம்பாக்கம் சாலையில் ஒரு பழைய கட்டடத்திலே முகலாய மன்னர்கள் போல 4 டைரக்டர்கள் உட்கார்ந்துகொண்டு ஆயிரம் கோடி செலவு செய்கின்றார்கள். 4 ஆயிரம் கோடி ரூபாயில் கால் பங்கு செலவு செய்கின்ற அந்தத் துறையில் அதிகாரம் குவிக்கப்பட்டிருக்கிறது. அந்த இயக்குநர்கள் அதிகாரத்தை வைத்துக்கொண்டு சித்து வேலை செய்கிறார்கள். மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி இருக்கிறார்கள். மாவட்டக் கல்வி அதிகாரி இருக்கிறார். ஏ.ஈ.ஓ. இருக்கிறார்கள். பள்ளிகளை பார்க்கும் டெபுடி இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு கடந்து மாறுதல்கள், வேலை வாய்ப்புகள் அனைத்தும் இருக்கின்றன. கல்வித்துறையில் அதிகாரம் குவிந்து இருக்கின்றது. ஹையர் எஜுகேஷன், ஹையர் செகண்டரி எஜுகேஷன் ஸ்கீம் எல்லாம் தனியாக வேறுபட்ட சிந்தனையோடு விரைவுபடுத்தினால் காரியம் நடைபெறாது. தனியார்கள் பள்ளிக்கூடத்திற்கு அனுமதி கொடுப்பது என்பதை நிறுத்தியாகவேண்டும். செல்ப் பைனான்சிங் யூனிட் படுகின்ற சிரமங்கள் உங்களுக்குத் தெரியும். சென்ற முறை உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுமதி கொடுத்தோம். இந்த ஆண்டு அருள்கூர்ந்து கிராமப்பகுதியிலே எங்களைப் போன்றவர்களுக்கு அரசு சார்பாக பள்ளிக்கூடங்கள், உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள், ஆரம்பப்பள்ளிக்கூடங்கள் தொடங்குவதற்கு அரசு முன் வரவேண்டும் என்று சொல்லி அற்புதமான இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

11-50 மணி

*திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச வாய்ப்பளித்தமைக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த பொது விவாதத்தில் கலந்துகொண்டு ஒருசில கருத்துக்களை மட்டும் கூற விரும்புகிறேன். இன்றைய தினம் தமிழக அரசு அறிவித்திருக்கின்ற மதுவிலக்குக் கொள்கையிலே ஏற்பட்டிருக்கின்ற மாற்றத்தைக் குறித்து பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஊருக்குத்தாண்டி உபதேசம், உனக்கும் எனக்கும் அல்லது என்பது போல ஒருசிலர் இங்கே வந்து மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். மதுவிலக்கை சட்டத்தின் மூலமாக இன்றைக்கு அல்ல, என்றைக்குமே, எந்த நாட்டிலேயும் நல்ல முறையில் அமல்படுத்தியதாக சரித்திரமே இல்லை. மதுவிலக்கை-

எந்தச் சட்டத்தின் மூலமும் அமல்படுத்த முடியாது என்பது நம்முடைய அனுபவமும் கூட. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே கூட இது குறித்து குறிப்பிட்டார்கள். அங்கிங்கெனாத படி கள்ளச் சாராயம் எங்கும் பெருக்கெடுத்து ஓடுகிறது. அந்த அளவுக்கு இது பரந்து எல்லா இடங்களிலும் காட்சியளிக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையி லேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். வேலியே பயிரை மேய்வது போல சமூக விரோதச் சக்திகளுக்கு எதிர்பாராத இடத்திலிருந்து கைக்குலுக்கல் கூட கிடைக்கிறது என்று நீண்ட காலமாகவே அத்தகைய ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட கைக்குலுக்கல் எந்த இடத்திலிருந்து வந்தாலும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். கள்ளச் சாராயம் எப்படியாவது ஒழிக்கப் பட வேண்டும். அதற்குக் காரணமானவர்கள் மீது தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். வேலியே பயிரை மேய்வது போலச் சமூக விரோதிகளுக்கு எதிர்பாராத இடங்களிலேயிருந்து கைக் குலுக்கல் கிடைப்பது தடுத்து நிறுத்தப் பட வேண்டும். ஆக, வேறு வழியின்றிதான் மலிவு விலை மது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனாலும் கூட குடிப் பழக்கத்தை ஒழிக்க அரசு ஆவன செய்ய வேண்டும். காரணம், இன்றைக்கு கேள்வி நேரத்தின் போதுகூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் அதை ஒப்புக் கொண்டார்கள். மாற்றாரையும் மயக்கும் பேச்சாற்றல், எழுத்தாற்றல், கலை ஆற்றல் போன்ற அனைத்துத் துறைகளிலும் ஆற்றல் பெற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமை தாங்கி, அனைத்துக் கட்சிகளையும் சார்ந் தவர்களையும் அதில் இணைத்து மக்களிடத்தில் குடிப்பழக்கத் திலுள்ள கேடுகளைப் பற்றி பிரச்சாரம் செய்ய வேண்டும். எங்கள் மார்க்சிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் மது அரக் கனை ஒழிக்க வேண்டும் என்பது கட்சியின் அமைப்பிலேயே ஒரு அம்சமாக இடம் பெற்றிருக்கிறது. எங்கள் கட்சியில் உறுப்பின ராக இருப்பவர் குடிக்கக் கூடாது என்பது முக்கியமான ஓர் விதி. ஆகவே, அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் குடிப் பழக்கத்திற்கு எதிராக, மதுவை ஒழிக்க பிரச்சாரம் செய்ய வேண்டும். பட்ஜெட் உரையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விஷயம் குறித்து மிகவும் உருக்கத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது தாயைப் போற்றும் தமிழகத் தில் ஒருசில மாவட்டங்களில் இன்றைக்கும் பிறக்கும் குழந்தை பெண்ணாக இருந்தால் அதனை உடனேயே கொன்றுவிடுகின்ற கொடுமை நடைபெறுவதால், மிகப் பயங்கரமான, மனக் கலக்க மான, கொடுமையான ஓர் உண்மையை வெளியிட்டிருக்கிறார் கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் இதைப்பற்றி வேதனையுடன் குறிப்பிட்ட நேரத்தில் ஒலிபெருக்கி கூட தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தும் முகத்தான் அதன் சப்தம் குறைந்தது. இத்தகைய ஒரு மிகப் பெரிய கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. இத்தகைய செயல்களுக்கு உடந்தையாக இருப்பவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்து

தண்டிக்க வேண்டும். அந்தப் பகுதி பெண் குழந்தைகளை சாவிலிருந்து காப்பாற்றி வளர்க்க அரசு ஏற்பாடுகளைச் செய்யும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை உள்ளபடியே வரவேற்கிறேன்.

''நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

என்கிற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க இத்தகைய கொடுமைகளுக்குக் காரணம் என்ன என்று பார்க்க வேண்டும். இன்றைக்கும் பெண்களில் மருமகள்களைக் கண்டால் மட்டுமே வெடிக்கின்ற ஸ்டவ்களின் எண்ணிக்கை மலிந்துவிட்டன. அதோடு வரதட்சணைக் கொடுமைகளும் நாட்டிலே மிகப் பெரும் அளவு அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆகவே, வரதட்சணைக் கொடுமை காரணமாக பெண்களைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் எல்லாம் பயப்படுகிறார்கள். சீர் கேட்டதால் சீர் கெட்ட குடும்பங்கள் எத்தனை எத்தனை என்று நமக்குத் தெரியும். ஆகவே, இத்தகைய கொடுமைகளுக்குக் காரணமாய் இருக்கிற வரதட்சணைக் கொடுமையை ஒழிக்க நாம் எல்லாம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய கொடுமை நாட்டிலே இருப்பதால்தான் நம்முடைய உதிரத்தை எல்லாம் உறைய வைக்கும் அளவுக்குக் காரியங்கள் நடைபெறுகின்றன. 10 மாதம் சுமந்து பெற்ற குழந்தையைக் கொல்லத் துணை போகும் அளவுக்கு தமிழ்நாட்டில் தாய்மார்களின் நிலை போய் விட்டது. ஆகவே, இப்படிப்பட்ட வரதட்சணைக் கொடுமைகளைக் களைய நாம் அனைவரும் இணைந்து பாடுபட வேண்டும்.

21 ஆம் நூற்றாண்டை நோக்கி நாம் சென்றுகொண்டிருக்கும் போது பெண்களுக்கு எதிராக சமூகக் கொடுமைகள் நாட்டிலே இன்றைக்கும் நடக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக, இன்றைக்கும் பெண்கள் ஜாக்கட் அணியக் கூடாது, திரைப்படங்களுக்கு செல்லக் கூடாது போன்ற சமூகக் கட்டுப்பாடுகள் உள்ளன. அத்தகைய கொட்டகைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்களை விடுவிக்க வேண்டும். ஏழைப் பெண்களுக்கு திருமணத் திட்டம் குறித்து அறிவித்திருப்பதைப் பாராட்டுகிறேன். இத் திட்டத்தைப் பற்றி இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது 5 ஆயிரம் ரூபாய் பெண்களுக்கு திருமணத்தின்போது வழங்குவதைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்கிறேன். ஒரு குறிப்பிட்ட தொகை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இதற்காக ஒதுக்கப்படுகிறது. நான் தலைவராக இருக்கின்ற பத்மனாபபுரம் நகராட்சிக்கு 25 ஆயிரம் ரூபாய் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது.

11–55 மணி

அந்த 25,000 ரூபாயை 5 பெண்களுக்கு நாங்கள் அளித்தோம். ஆனால் அதற்குப் பின்னரும் ஏராளமான பெண்கள், தகுதி படைத்த பெண்கள் திருமண உதவி கேட்டு மனுச் செய்தார்கள்.

கொடுக்க முடியவில்லை. திருமணம் முடிந்துவிட்டது. மாதங்கள் பல கடந்துவிட்டன. விரைவிலே அவர்கள் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளப் போகிறார்கள். ஆனால் மனுச் செய்தவர்களுக்கு இதுவரையில் உதவி கிடைக்கவில்லை. இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். முதியோர்பென்ஷன் திட்டத்திற்கு முந்தைய ஆட்சிக் காலத்திலே வரம்பு இருந்தது. இந்த ஆட்சி வந்த பிறகு அந்த வரம்பை எடுத்துவிட்டு, தகுதி படைத்த அனைவருக்கும் முதியோர் பென்ஷன் திட்டத்தை அமல்படுத்தியுள்ளீர்கள். அதைப்போல ஏழைப் பெண்கள் திருமணத் திட்டத்திற்கும் ஒரு வரையறை வைத்துக் கொள்ளாமல், தகுதி படைத்த பெண்கள் யார் யார் விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்கு வழங்கும் வகையிலே நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று தமிழக அரசையும், மாண்புமிகு முதல்வரவர்களையும் நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல. இந்தத் திருமணத் திட்டத்திற்கு கல்வித் தகுதியை ஒரு அடிப்படைத் தகுதியாக வைத்திருப்பதை தளர்த்த வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல. நீண்ட காலமாக பள்ளிக்கூடங்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இன்றைக்கு நேற்றல்ல, நீண்ட காலமாகவே இந்த நிலைதான். பெரும்பாலான பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இல்லை. கட்டிடங்கள் இருந்தால் கூரை இல்லை. கட்டிடமும், கூரையும் இருந்தால் மேசை, நாற்காலி, கரும் பலகைகள் இல்லை. இத்தனையும் இருந்தால் ஆசிரியர்கள் இல்லை. இது இன்றைக்கல்ல, நீண்ட காலமாகக் கல்விக் கூடங்களில் இருந்து வருகிற நிலை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இன்றைய பட்ஜெட் உரையில் 1,200 இடைநிலை ஆசிரியர்களை நியமிக்கப்போவதாக முதல்வரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். இவ்வாறு நியமனம் செய்யக்கூடிய ஆசிரியர்கள் தொகுப்பு ஊதியத்தில் நியமிக்கப்படாமல், அவர்களை வரன்முறைப்படுத்தி, அவர்களை முதலிலிருந்தே ஊதிய விகிதத்தில் அமர்த்த வேண்டுமென்று வேண்டுகிறேன். இந்த 1,200 இடங்கள் மாத்திரமல்ல. பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவைகளை எல்லாம் தமிழக அரசு பூர்த்தி செய்து, அந்தப் பள்ளிகளை எல்லாம் நல்ல ஆசிரியர்களைக் கொண்ட பள்ளிகளாக, கட்டிடங்களைக் கொண்ட பள்ளிகளாக. கூரையோடு கூடிய பள்ளிகளாக உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே, என்னுடைய தொகுதியிலேகூட பல பள்ளிக்கூடங்கள் கூரையற்றுக் கிடக்கின்றன. இப்படிக் கிடக்கின்ற பள்ளிகளைப் பற்றி நான் சென்ற ஆண்டி

1990 மார்ச் 21] [திரு. செ. நூர்முகமது]

லேகூட எடுத்துச் சொன்னேன். ஆலூர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கூரையில்லாத நிலையில் இருப்பதைப் புகைப்படம் எடுத்து, அதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். சென்ற ஆண்டு புகைப்படம் கொடுத்தபோது, கூரை இல்லாவிட்டாலும் ஈர்க்கில்கள் இருந்தன. நான் இந்த ஆண்டு சென்று பார்த்தபோது ஈர்க்கில்களைக் கூடக்காணவில்லை. இப்போது பள்ளிக் கட்டிடத்திற்கு கூரைக்குப் பதிலாக வானமே கூரையாக இருக்கும் காட்சியைப் பார்க்கிறேன். ஆலூர் உயர் நிலைப் பள்ளி மாத்திரமல்ல, ஏராளமான பள்ளிகளுடைய நிலைமை இப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய குழந்தைகள் பள்ளிகளுக்குச் சென்று வரலாறு, கணிதம், ஆங் கிலம் பயில்வதற்குப் பதிலாக, கூரையில்லாத காரணத்தால் வானத்தைப் பார்த்துக்கொண்டு, வான சாஸ்திரம் கற்றுக் கொள்கிற நிலைமைதான் இருக்கிறது. இதை மாற்று வதற்கு தமிழக அரசு முயற்சிக்க வேண்டும். குறிப் பாக, குமரி மாவட்டத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து ஆலூர் உயர்நிலைப் பள்ளி, பிலாவிளை நடுநிலைப் பள்ளி, புலியக்குறிச்சி நடுநிலைப் பள்ளி மட்டுமல்ல, பல்வேறு பள்ளி களின் கட்டிடங்கள் சீர்கெட்டிருக்கும் நிலைமையிலே, அவற் றைச் சீர் செய்ய முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, தமிழகம் முழுவதும் இருக்கின்ற பல தனியார் கல்விக் கூடங்களில் இன்றைக்கு கடுமையான கொடுமை களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் அந்தக் கொடுமை களுக்கு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். சில சமயங்களில் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய அறி விப்பு கொடுமை செய்கின்ற கொடியவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக, பயிலும் மாணவர்களைத் தண்டிப்பதுபோல அமை கிறது. நீங்கள் தண்டியுங்கள், அந்தத் தண்டனை என்பது கல்விக் கூடங்களை நடத்தும் நிர்வாகத்திற்கு இருக்க வேண்டுமே தவிர, ஏதோ தெரியாத்தனமாக அந்தக் கல்விக் கூடங்களிலே சேர்ந்துவிட்ட பரிதாபத்திற்குரிய மாணவர்களையும், அவர் களுடைய பெற்றோர்களையும் தண்டிப்பதாக அமைந்துவிடக் கூடாது. இதைப்போலத்தான், தமிழகத்தில் முந்தைய கழக ஆட்சியின்போது, கலைஞர் அவர்கள் ஆண்டபோது, எங்க ளுடைய மாவட்டத்தில் லட்சுமிபுரம் கலை அறிவியல் கல்லூரி நிர்வாகச் சீர்கேடு காரணமாக, அந்தக் கல்லூரி கழக அரசால் எடுக்கப்பட்டு, கேர் டேக்கர் மூலம் கல்லூரி நிர்வாகம் நடை பெற்று வருகிறது.

12-00 மணி

அந்தக் கல்லூரியினுடைய நிர்வாகம் நீண்டகாலமாக 'கேர்-டேக்கர்' முறையில் நடைபெற்று வருவதால் அங்கே கட்டி டங்கள் பழுதுபார்க்கப்படவில்லை என்பது மாத்திரமல்ல,

சோதனைக் கூடங்கள் எல்லாம் உண்மையிலேயே சோதனைக்குப் பயன்படுகின்ற கூடங்களாக இருப்பதற்குப் பதிலாக மாணவர்களை சோதிக்கும் கூடங்களாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. அங்கு எந்த வசதியும் இல்லை. எனவே லட்சுமிபுரம் கலை அறிவியல் கல்லூரியை 'கோர்-டேக்கர்' நிர்வாக அமைப்பிலிருந்து மாற்றி, அரசுக் கல்லூரியாக உயர்த்தி நடத்தினால் மேற்கூறிய நிலைமைகள் மாறி, அந்தக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்களுக்குப் பயன் ஏற்படும் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

குடிநீர்த் திட்டம் பற்றி இங்கே பல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். என்னுடைய பத்மனாபபுரம் நகராட்சி தமிழகத்திலேயே குடிநீர் இல்லாத ஒரேயொரு நகராட்சி. இதை நான் முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சொன்னபோது, நாகர்கோவில் கூட்டத்தில் முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். பத்மனாபபுரம் குடிநீர்த் திட்டம் நீண்டகாலத் தவணையோடு நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார்கள். 'சொன்னதைச் செய்வேன்' என்கின்ற வகையில் அதற்கான அரசாணையையும் பிறப்பித்தார்கள். ஆனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. அவர் அறிவித்த அரசாணை நடைமுறைப்படுத்த முடியாத அளவுக்கு சிக்கலுக்குரியதாக இருக்கிறது. நான் அதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறேன். நீண்டகாலக் கடனைக் கொடுப்பதற்கு இன்றைக்கு எல்.ஐ.சி தயாராக இல்லை. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்வது எல்லாம், நீங்கள் கருணை கொண்டு எங்களுக்காக ஒரு அரசாணை வெளியிட்டீர்கள். அதனால் குடிநீர்த் திட்டம் கைக்கு வந்து இருக்கிறது. நீங்கள் நிதியையும் தருவீர்களேயானால், எங்கள் வாய் வரையிலும் கொண்டுவருகின்ற அளவுக்கு அந்தத் திட்டம் வரும். அது பத்மனாபபுரம் நகராட்சிக்கு மட்டுமல்லாமல், திருவிதாங்கூர் பேரூராட்சி வழித் தடத்தில் இருக்கிற 20 கிராமங்களுக்குப் பயன் அளிக்கின்ற அந்த மிகப் பெரிய திட்டத்தை அரசு மானியம் தந்து உதவியோ அல்லது அரசே எல்.ஐ.சி.யிடமிருந்து கடனாகப் பெற்று, அதை நீண்டகாலத் தவணையிலே எங்களுடைய நகராட்சிக்குத் தந்தோ நிறைவேற்றவேண்டும். இந்த ஆண்டிலே அந்தத் திட்டம் துவக்கப்பட வேண்டும். அது முதல்வர் அவர்களாலே அடிக்கல் நாட்டப்பட வேண்டும். அதற்கான உத்திரவை முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு இருந்தாலும் ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் சென்ற ஆண்டு பட்ஜெட் உரையிலே நான் பேசியபோது எடுத்துச் சொன்னதையொட்டி நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து கான்ட்ராக்ட் ஆசிரியர்களை நிரந்தரப்

1990 மார்ச் 21] [திரு. செ. நூர்முகமது]

படுத்தினார்கள். ஆனால் இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான பகுதிநேர ஆசிரியர்கள் இருந்து கொண்டு இருக்கின்றார்கள். பகுதிநேர ஆசிரியர்கள் இன்றைக்கு பகுதி நேரம் என்ற பெயரளவில் வேலை செய்தாலும் கூட, வாழ்க்கையிலே பகுதிச் செலவைக் கூட ஈடுகட்ட முடியாமல் துன்பத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் கருணை கொண்டு அந்த ஆசிரியர்களைக் கரை ஏற்ற வேண்டும்; அவர்களை முழுநேர ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வருவாய்த் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இன்றுமுதல் இறங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. அவைகளை அரசு பரிவோடு பரிசீலிக்க வேண்டும். அவர்களுடைய பிரதிநிதிகளோடு பேச வேண்டும். பிரச்சினைகளை முடித்து அந்தப் போராட்டத்திற்கு முடிவு கட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளைச் சுருக்கமாகச் சொல்லி என் உரையை முடிக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் கப்பியறை பகுதி நீர் இல்லாத காரணத்தால் வறண்ட நிலையில் காணப்படுகிறது. அங்கு விவசாயமே செய்ய முடியவில்லை. எனவே சிற்றாறு, பட்டணங்காலில், கருங்கலிலிருந்து கிளைச் சானல் ஒன்று திப்பரமலை, ஓலவிலை, கஞ்சிகுழி வழியாக வெட்டி அப்பகுதிகளிலே விவசாயம் செழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு தண்ணீர் இல்லாமல் நாங்கள் அவதிப்படுகிறோம். எவ்வளவு மழை பெய்தாலும், மழை நீர் எல்லாம் வள்ளி ஆற்றில் வழிந்தோடி கடலோடு கலக்கிறது. இப்படி விரயம் ஆகின்ற தண்ணீரைத் தேக்கிப் பயன்படுத்த வள்ளி ஆற்றில் தடுப்பு அணைகள் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யத் திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெருஞ்சிலம்பு, வேலிமலைச்சாலை, குமரபுரம், திட்டுவிளைச்சாலை, கருங்கல்சாலை போன்றவற்றில் கருந்தளம் சாலைகள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்டகாலமாக குழித்துறை நகராட்சிக்கு பேருந்து நிலையம் வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. குழித்துறை நகராட்சி, பேருந்து நிலையத்திற்குப் பொருத்தமான இடம் என்று தெரிவு செய்கின்ற இடத்திலே அமைக்கப்படுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த ஆண்டில் குழித்துறை நகராட்சிக்கு பேருந்து நிலையம் அமைத்து, அந்தப் பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12—05 மணி

கடைசிப் பிரச்சினையாக என்னுடைய தொகுதியில் ஒரு முக்கியப் பிரச்சினையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். குடிநீர்ப் பிரச்சினை என்பது வாட்டி வதைக்கிறது. அடிக் குழாய் கிணறுகளெல்லாம் போடப்பட்டிருக்கின்றன. 250 அடி போடப்பட்டாலும்கூட தண்ணீர் கிடைப்பதில்லை. பெண்க ளெல்லாம் சில ஆழ்குழாய்க் கிணறுகளில் அடி பம்புகளில் ரெஸ்ட் கொடுத்துக் கொண்டே அடித்துக் கொண்டிருக் கிறார்கள். காரணம், ஐந்து நிமிஷங்கள் அடித்தால் ஐந்து நிமிஷங்கள் ரெஸ்ட் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் மீண்டும் தண்ணீர் வரும். அந்த அளவிற்கு இருக்கின்ற ஆழ் குழாய்க் கிணறுகள்தான் என்னுடைய தொகுதியில் ஏராளம். இருக்கின்ற ஆழ் குழாய்க் கிணறுகளில் வருகின்ற தண்ணீரோ குடிப்பதற்குச் சரியானதாக இல்லை. ஆகவே, என்னுடைய தொகுதியிலே இன்றைக்குக் குடிதண்ணீர் இல்லாமல் வாடுகின்ற கிராம மக்களுக்குக் குடிநீர் வழங்குகின்ற முறையில் ஏராளமான திட்டங்களை வகுத்து அந்தப் பகுதியிலுள்ள குடிநீர்ப் பிரச் சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாகத் தெரு விளக்குகள் பற்றிச் சொல்ல விரும்பு கிறேன். இன்றைக்குத் தெரு விளக்குகள் அமைப்பது என்பதை அரசாங்க மின்சார வாரியம் செய்வதற்குப் பதிலாகப் புதிய தெரு விளக்குகள் அமைக்க வேண்டுமென்றால் ஊராட்சிகள், நகராட்சிகள் பணம் செலுத்த வேண்டும் என்று சொல்லப் படுகிறது. நலிந்த பேரூராட்சிகள், ஊராட்சிகள், நகராட்சிகள் தானே பணம் செலவழித்துத் தெரு விளக்குகளைப் போட இயலவில்லை. எனவே, இன்றைக்கு ஏற்பட்ட அந்த நிலையை மாற்றி, முந்தைய நிலையைப்போல அரசே மின்வாரியம் மூலம் புதிய தெரு விளக்குகளை அமைக்க வேண்டும். தெரு விளக்கு களைப் பராமரிக்கின்ற பொறுப்பை மின் வாரியமே ஏற்க வேண்டுமென்று கூறி, இத்தனை நேரம் எனக்கு அனுமதி தந்த மாண்புமிகு துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990—91 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறும் இந்தப் பொது விவாதத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல நான் முன் வருகிறேன். நிதிநிலை அறிக்கை நல்ல தொரு கொள்கை ரீதியில் தமிழகத்தினுடைய முதலமைச்சரால் படிக்கப்பட்டிருக்கிறது. இதே நேரத்திலேதான் மத்தியிலே இருக்கக்கூடிய தேசிய முன்னணி அரசும்கூட நிதிநிலைத்

1990 மார்ச் 21] [திரு. ஜி. பழனிச்சாமி]

கொள்கையை வைத்து இருக்கிறார்கள். மத்தியிலே புதிய வரிகளைப் போடுகின்ற இந்த நேரத்தில், மாநில அரசு பல்வேறு வரிகளைக் குறைத்து, தமிழகம் தன்னிறைவு பெறுவதற்கான பல்வேறு கொள்கைத் திட்டங்களை அறிவித்திருக்கின்றது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இந்த நேரத்தில், சாதாரண ஏழை எளிய மக்கள், உழைக்கின்ற மக்கள், விவசாயிகள் வாங்கிச் சாப்பிடக் கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு இன்றைக்கு அரிசியின் விலை மிகவும் உயர்ந்திருக்கிறது. அரிசி விலை உயர்ந்திருக்கின்றபொழுது, திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது இன்றைய தினத்திலே மக்களினுடைய மிகப்பெரிய அதிருப்தியும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தமிழகத்தினுடைய முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். அரிசியின் விலை என்பது ரூபாய் 2—50-லிருந்து ரூபாய் 3—50 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது. மட்ட ரக அரிசி, சன்ன ரக அரிசி, மிகவும் சன்ன ரக அரிசி என்று சொல்லி மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு அங்காடிகளில் வாங்கச் செல்லுகின்ற நேரத்தில் மிகவும் நடுத்தரமான அரிசி, மிகச் சன்ன ரக அரிசிதான் கிடைக்கிறதே தவிர. அநேகமாகச் சாதாரண, விலை குறைவான அரிசி என்பது கிடைக்கவில்லை. கேட்டால் அப்படிப்பட்ட அரிசி எங்களுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். இதன் காரணமாக இன்றைக்கு மக்களிடத்திலே மிகப்பெரியதொரு கொந்தளிப்பு தமிழகத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல் இன்னொரு விஷயத்தையும் சொல்ல வேண்டும். இன்றைய தினத்தில் மலிவான சாராயம் அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், இன்றைய தினம் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு அவர்கள் பயந்துகொண்டு இன்றைய தினத்திலே சாராயக் கடைகளைத் திறக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றுதான் குறிப்பிட முடியும். அப்படிப்பட்ட நிலைமையில், அரசையும் ஏமாற்றி, காவல்துறையையும் ஏமாற்றி, இன்றைய தினம் நாடு பூராவும் கள்ளச் சாராயப் பேர்வழிகளுடைய கைகள் ஓங்கி இருக்கின்றன என்பதை, அரசும் பணியக் கூடிய நிலைமையில் இன்றைக்குச் சாராயக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சராயக் கடைகளைத் திறப்பதோடு மட்டுமல்லாமல், அதோடு கள்ளுக் கடைகள் மூலமாக, பல ஆயிரக்கணக்கான மரம் ஏறும் தொழிலாளர்கள் பாழ்பட்டு, தங்களுடைய குடும்பங்கள் நலிவுற்ற நிலையில் இருக்கிறார்கள். கள்ளுக் கடைகளையும் சேர்த்து அறிவித்திருந்தால் அவர்களுக்கும் வாழ்வு கிடைத்திருக்கும்.

[திரு. ஜி. பழனிச்சாமி] [1990 மார்ச் 21

அதையும் இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லி, தமிழக முதலமைச்சரவர்களை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

12-10 மணி

தற்போது 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டிருக்கிற உள்ளாட்சி அமைப்புகள் இருக்கின்றன. இங்கே இருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலபேர் ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர்களாக இருக்கிறார்கள். இப்படி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களாக இருப்பவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று பார்த்தால் அநேகமாக எந்த அதிகாரமும் இல்லாத நிலைமைதான் இருக்கிறது. அவர்களால் உள்ளாட்சி அமைப்புகளில் குடி தண்ணீர் வசதி, மின்சார வசதி, சாலை வசதி என்று இப்படி எந்த வசதிகளையும் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் கூட இன்றைய தினம் கிராமப்புறங் களில் சென்று வர முடியாத நிலைமை தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இருக்கிறது. எங்கே போனாலும் அந்த ஊர் மக்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்களை மறித்துக் கொண்டு எங்களுடைய ரோட்டைப் பாருங்கள், குடிதண்ணீர் பிரச்சினையை பாருங்கள். மின்சார வசதியைப் பாருங்கள் என்று அவலக்குரல் எழுப்பும் நிலை இருக்கிறது. இதை நான் சொல்கிறபோது, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகுதான் இது போன்று நடக்கிறது என்று சொல்லவில்லை. இதற்கு முன்பு இருந்த அரசு இப்படிப்பட்ட நிலைமைகளை சரியான முறையில் செய்யாத காரணத்தால் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகும் கூட இந்த வேலைகள் நடைபெறாது என்று மக்கள் நம்பிக்கை இழந்து விடாமல் இருக்கும் அளவிற்கு இந்த அரசு அந்தப் பணி களைச் செய்வதற்கு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டு கோளாகும்.

அடுத்து இன்றைக்கு இறந்தவர்களுக்கு வழங்கப்படும் 100 ரூபாய் உதவியைப் பெறுவதற்குக் கூட 100 ரூபாய் செலவழித்து வாங்கக்கூடிய நிலைமை நாட்டிலே இருக்கிறது. அதை பஞ் சாயத்து யூனியன் தலைவர்கள் வழங்குகிற அளவிற்கு கூட அவர்களுக்கு அதிகாரம் இல்லாத நிலை இருக்கிறது.

அதைப்போல நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய வடபாதி மங்கலம் பண்ணை நிலங்களை — கவர்னர் ஆட்சிக் காலத்தில் ஒரு ஏக்கர் 10,000 ரூபாய் இருந்ததை விலையும் குறைத்து

1990 மார்ச் 21] [திரு. ஜி. பழனிச்சாமி]

நிலத்தையும் குறைத்து இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிறது நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களை இரண்டு தடவைகள் சந்தித்து அந்த நிலங்களை வழங்குவதில் தவறு நடக்காமல் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னேன். அதிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று சொன்னேன். அதிலே பணியாற்றி இருக்கிற தொழிலாளர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும். வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். ஆனால் இன்றைக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிற நிலத்தில் மிராசுதார்கள் பல பேர்களுக்கு நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கண்டறிந்து அவைகளை நீக்குவதற்கு இந்த அரசு முயற்சியெடுக்க வேண்டும். அந்தப் பண்ணையில் வேலை பார்த்திருக்கிற பல்வேறு ஊழியர்களுக்கு நிலம் கிடைக்கவில்லை. அதையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும். அப்படிப்பட்டத் தவறுகளை தவிர்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஆதி திராவிடர் நலத்துறை என்றால் இன்றைக்கு வெல்பேர் ஆபீசர் அலுவலகங்கள் பல்வேறு தாலுக்கா தலைநகரங்களில் இருக்கின்றன. அதன் மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு என்ன நன்மை செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அரிசன மக்களுக்கு சாலை வசதி கிடையாது. சுடுகாடு வசதி கிடையாது, பல்வேறு லோன் வசதிகள் கிடையாது என்ற நிலை இருக்கிறது. அவர்களைக் கேட்கிறபோது நிதி இல்லையென்று சொல்கிறார்கள். அந்த அலுவலகங்களில் இருக்கிற அதிகாரிகளும், ஊழியர்களும் தூங்குகிற நிலைமைதான் இருக்கிறது. அப்படிப்பட்ட நிர்வாகத்தை இந்த அரசு முடுக்கி விட வேண்டும். அதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். பல்வேறு இடங்களில் தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கு குடியிருப்பு மனைப்பட்டா வழங்குவது கோர்ட் வழக்கில் இருக்கிறது. அந்த வழக்குகளை ரத்து செய்து உடனடியாக நிலப் பட்டாக்களை வழங்குவதற்கும், சுடுகாட்டு பாதை வசதி அமைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டும். சுடுகாட்டுப் பாதையை அமைத்து இறந்தவர்களைப் புதைப்பதற்கு உத்தரவாதம் செய்து கொடுக்க வேண்டும். பல்வேறு நலத் திட்டங்களை செய்து வருகிற நிலையில் தஞ்சை மாவட்டத்தில் சுடுகாடு இல்லாத நிலை பல்வேறு இடங்களில் இருப்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அது குறித்து அரசின் கவனத்திற்கு பல்வேறு தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதுகுறித்து அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சுகாதார நிலைமை என்று எடுத்துக் கொண்டால் அது படுமோசமாக இருக்கிறது. திருத்துறைப்பூண்டியில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலும், தமிழகத்திலும் இன்றைக்கு அரசு டாக்டர்கள் பணி புரிந்து வருகிறார்கள்.

[திரு. ஜி. பழனிச்சாமி] [1990 மார்ச் 21

அநேகமாக அவர்கள் எல்லோரும் தனியாக கிளினிக்கு வைத்திருக்கிறார்கள். தங்களுடைய டியூட்டி நேரம் போக மீதி நேரங்களில் அங்குதான் இருக்கிறார்கள். அரசாங்க மருத்துவமனைகளுக்கு வருகிற நோயாளிகளை தனியார் மருத்துவமனைக்கு வரச் சொல்கிறார்கள். அங்கேதான் வைத்தியம் பார்க்கிறார்கள். ஆப்பரேஷன் செய்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசு டாக்டர்களாக இருப்பவர்கள் தனியாக கிளினிக்குகள் வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வருவது என்பது சாதாரண ஏழை எளிய மக்களுக்கு மிகப் பெரிய நன்மை அளிப்பதாக அமையும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற மருத்துவமனை 100 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. அங்கே பல் டாக்டர் இருக்கிறார். கண் டாக்டர் இருக்கிறார்.

(12-15 மணி).

இன்னும் பல்வேறு டாக்டர்கள் இருக்கிறார்கள். இருந்த போதிலும் கூட, அதற்கான வசதிகள் கிடையாது. 300 பேர்கள் இருக்கக் கூடிய பெட்டில் கிட்டத்தட்ட 1,000 பேர்களுக்கு மேலே அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அங்கேயிருக்கக் கூடிய வேப்ப மரங்களின் அடியிலேதான் படுக்கைகள் விரிக்கப் பட்டு நோயாளிகள் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அவல நிலையை ஏதோ ஒரு வாதத்திற்காக, அல்லது விவாதத்திற்காக இங்கே நான் எடுத்துச் சொல்லி பேசுவதாக நினைக்க வேண்டாம். நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைய தினமே, அங்கேயிருக்கிற டி.எம்.ஓ. அவர்களைக் கேட்டால், வேப்ப மரத்தடியின் கீழே எத்தனை பேர்கள் படுத்திருக்கிறார்கள் என்ற பட்டியல் போட்டு காட்டுவதற்கு அவர்கள் தயாராக இருப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை மாற்றி, ஆண்கள் மருத்துவமனையையும் பெண்கள் மருத்துவமனையையும் ஒன்றாக இணைத்து, அங்கே நிரந்தரமாக ஒரு மருத்துவமனையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு மேலாக ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். 1958 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல், 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் இருக்கக் கூடிய பினாமிதாரர்கள் பெயராலே எழுதி வைத்திருக்கிற நிலங்களைக் கையகப்படுத்தி அவைகளை ஏழை எளியவர்களுக்கு வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். தமிழகத்திலே, குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே இப்படிப்பட்ட மோசடிகள் நடைபெற்றுக் கொண்டு

1990 மார்ச் 21] *[திரு. ஜி. பழனிச்சாமி]*

இருக்கின்றன. சட்டத்தில் இருக்கக் கூடிய ஓட்டைகளை பயன்படுத்தி நிலங்களை பல்வேறு பினாமிகள் பெயராலே எழுதி வைத்திருக்கிறார்கள். அதை எடுக்கின்ற சட்டம் என்பது மிகவும் நல்ல திட்டம். அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, அதிலிருந்து யாரும் விடுபடாமல் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்து நிலமற்றவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். இப்படிப்பட்ட பினாமி நிலங்களை வைத்திருக்கக் கூடிய அந்த நிலங்களைக் கண்டுபிடித்து, அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகத்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அன்றைய தினத்திலே தஞ்சை மாவட்டத்திலே போராட்டம் நடத்தி இன்னும் சிறையில், 4 ஆண்டுக்காலமாக இருந்து, தற்போது வழக்கிலே சென்று கொண்டு இருக்கிறார்கள். இது போன்ற சட்டங்களைக் கொண்டு வருகிற நேரத்திலே, அந்த வழக்குகளை ரத்து செய்து, அவர்களை விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கடன் நிவாரணச் சட்டம். அண்ணா தி.மு.க. ஆட்சி இருந்தபோது, 65 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது என்று நமது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தி.மு.க. அரசில் 39 கோடி ரூபாய் தள்ளுபடி என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் கடன்கள் இன்றைக்கு கோ-ஆப்பரேடிவ் சொசைட்டிகளிலே 5 தவணைகளாக ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறதே தவிர, கடன் தள்ளுபடி என்ற நிலைமை வரவில்லை. ஆனால் தள்ளுபடி என்று அறிவித்திருக்கிறார்கள். நானே அங்கே போய் கேட்கிறபோது, 5 தவணைகளாக ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறது என்ற நிலைதான் இருக்கிறது. எனவே இந்தக் கடனை முழுவதுமாக ஒத்திவைப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும், தள்ளுபடி செய்யவேண்டும்.

தமிழகத்தில் வறட்சி, வெள்ளம் என்று மாறிமாறி வருகிற நிலைமை இன்றைய தினம் இருக்கிறது. வெள்ளம் வந்தாலும் வறட்சி வந்தாலும் மத்திய அரசினிடத்திலே நிவாரணம் கேட்கக் கூடிய நிலைமையிலே நம்முடைய தமிழகம் கையேந்தி நிற்கிற நிலைமையிலே இருக்கிறது. ஆகவே வறட்சியானாலும், வெள்ளமானாலும், அவைகளைத் தடுக்கக் கூடிய விதத்தில், தமிழக அரசு அதற்கு என்று நிதியை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு மேலாக குத்தகை விவசாயிகள். குத்தகை விவசாயிகளை எடுத்துக் கொண்டால், கோயில், தர்மஸ்தாபனத்திற்கு உட்பட்ட குத்தகை விவசாயிகள் சம்பந்தப்பட்ட பல்வேறு வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டு இருக்கின்றன. மார்ச் மாதம் 31ஆம் தேதி வரையிலும் குத்தகை விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்ற சட்டம் சென்ற சட்டப் பேரவையில் நிறைவேற்றப்

பட்டு இருக்கிறது. ஆகவே குத்தகை பாக்கிகளை ரத்து செய்து, சிறிய விவசாயிகள் கடனிலிருந்து மீள்வதற்கான ஒரு சட்டத்தை தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே தேர்தல்களை காலத்தே நடத்த வேண்டும். அதில் இருக்கக் கூடிய தவறுகள் களையப்பட வேண்டும். பொதுவாக அங்கே அரசியல் பாகுபாடு இன்றி உண்மையான தொண்டர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அடுத்து, கூட்டுறவுத் தொழிலாளர்களாகப் பணியாற்றக் கூடியவர்களுக்கு மிகக் குறைவான சம்பளங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு சம்பளத்தை சிறிதளவாவது உயர்த்திக் கொடுத்தால்தான், அவர்களுடைய தவறுகளைக் கூட நாம் தைரியமாகத் தட்டிக் கேட்பதற்கான வாய்ப்புக்கள் எழும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

புஞ்சை தானியங்களுக்கும் விலைகளை உயர்த்திக் கொடுக்க வேண்டும். நெல் போன்ற மற்ற தானியங்களுக்கு இன்றைக்கு விலைகளை உயர்த்தி இருந்த போதிலும் கூட, இந்த புஞ்சை தானிய விவசாயிகள் தமிழகத்தில் பெரும் பகுதியிலே இருக்கக் கூடிய விவசாயிகள் இறவைப் பாசனமாக புஞ்சை தானியங்களைப் பயிரிட்டு வருகிறார்கள். அவர்களுக்கும் விலையை உயர்த்தி அரசு அறிவிக்க வேண்டும்.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது, ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர் பிரச்சினை. ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையை வரும் ஜூன் திங்களில் திறக்க இருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். எனக்கு அதிலே ஒரு சந்தேகம் வந்திருக்கிறது. அதிலே $5\frac{1}{2}$ கோடி ரூபாயை அந்த நிர்வாகம் கட்ட வேண்டியிருப்பதிலே $2\frac{1}{2}$ கோடி ரூபாயைத்தான் கட்ட முடியும், மீதியுள்ள 3 கோடி ரூபாயை தமிழக அரசு,—பேச்சு வார்த்தை நடத்தியதில்—கட்டினால்தான் அதைத் திறக்க முடியும் என்ற நிலைமை இன்றைக்கு ஸ்டாண்டர்டு மோட்டார் நிர்வாகத்திலே இருக்கிற காரணத்தால், அதில் அரசும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் தலையிட்டு இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு சமூக அமைப்புகளினுடைய அமைப்பாளர்களாக பல ஆயிரம் நபர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் அது பரிசீலிக்கப்படுகிறது. எதைக் கேட்டாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களைக் கேட்டு யாருக்காவது, ஏழை எளிய மக்களுக்கு வேலை கிடைக்குமா

1990 மார்ச் 21] [திரு. ஜி. பழனிச்சாமி]

என்று எதிர்பார்க்கிறபோது, அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் பரிசீலித்த பின் அது சென்னைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது, அங்கே தான் போடப்போகிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.

12–20 மணி

ஏழை எளிய மக்களுக்கு அரசியல் பாகுபாடின்றி வேலை கிடைப்பதற்கான வகையில் இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து நாங்கள் தொகுதிக்குச் சென்றால், எதையாவது காண்பிப்பதற்காக, இந்த வேலையைச் செய்து இருக்கிறோம், இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம், இந்தக் குடிநீரை வழங்கியிருக்கிறோம் என்று சொல்வதற்குக் கூட எதையும் பெயர் சொல்ல முடியாத அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம். என்னுடைய தொகுதியில் மத்திய அரசால் போடப்பட்டிருக்கின்ற 3,000 அடி ஆழ் குழாய் கிணறு மூலமாகக் கிடைக்கின்ற தண்ணீர் அவ்வளவுமே உப்புத் தண்ணீர். பட்டுக்கோட்டையிலிருந்து வேதாரணியத்திற்குக் கூட, குடிநீர்த் திட்டம், 11 கோடி ரூபாய் திட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருந்தது. $5\frac{3}{4}$ கோடி ரூபாய் செலவாகி இருக்கிறது. பட்டுக்கோட்டைப் பகுதி மக்கள் அங்கே எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கும், வேதாரணியம், திருத்துறைப்பூண்டி அந்தப் பகுதி மக்களுக்கும் பாகுபாடின்றி அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு துரித கவனம் செலுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, வாய்ப்பு அளித்த தலைவருக்கு பணிவான வணக்கம் கூறி முடிக்கிறேன்.

*திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே 1990–91 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணாவின் தத்துவத்தின் அடிப்படையில் என்னுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைய தினம் 1990–91 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கின்றார்கள். சொல்வதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம் என்ற அடிப்படையில் கடந்த ஆண்டு என்ன என்னகாரியங்கள் எல்லாம் செய்வோம் என தேர்தல் அறிக்கையில் கூறினோமோ அந்தக் காரியங்களை எல்லாம் இன்றைய தினம் கடந்த ஓராண்டு காலத்தில் தி. மு. க. அரசு செய்துள்ளது. கடந்த ஆண்டு முதியோர்களுக்கு உதவித் தொகை எல்லோருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த காலங்களில் ஒரு ஊருக்கு இத்தனை பேருக்குத்தான் உதவித் தொகை என குறிப்பிட்ட எண்ணிக்கையில் தரப்பட்டது. புதியதாக ஒருவருக்கு உதவித் தொகை தர வேண்டுமானால் ஏற்கனவே அந்த கிராமத்தின் உதவித் தொகை வாங்கிக் கொண்டிருப்பவர்களில்

யாராவது ஒருவர் இறந்தால்தான் மற்றொருவருக்கு வாங்கிக் கொடுப்பார்கள். ஆகவே உதவித் தொகை பெறும் வயதானவர்களைப் பார்த்து உதவித் தொகை பெறாத வயதானவர்கள் இவன் சாகமாட்டானா நமக்கு கிடைக்காதா என்று ஏங்கும் நிலை எல்லாம் இருந்து கொண்டிருந்தது. யாருமே சாகக் கூடாது எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் இன்றைய தினம் உதவித் தொகை அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதே போல் கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு உதவித் தொகை. சென்ற ஆட்சிக் காலத்தில் கருவுற்றப் பெண்களுக்கு உதவித் தொகை கொடுப்பதாகச் சொன்னார்கள். யாரும் வாங்கியதாகத் தெரியவில்லை. ஆனால் இந்த ஆட்சிக் காலத்தில் கருவுற்ற பெண்கள் அத்துனை பேருக்கும் ரூ. 200 உதவித் தொகை கொடுத்துக் கொண்டிருப்பதைக் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

அதே போல் குடும்பத் தலைவரை இழந்து வாடுகின்ற பெண்களுக்கு அந்தக் குடும்பங்கள் நிர்கதியாகிவிடக் கூடாது என்ற கவலைக் கொண்டு நல்ல எண்ணத்தில் அந்தக் குடும்பத்திற்கு ரூபாய 2,000 கொடுப்பதாகச் சொல்லி இன்றைய தினம் கிட்டத் தட்ட 10 000 குடும்பங்களுக்கு அந்தத் தொகையை தி.மு.க. அரசு, தலைவர் கலைஞரின் அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. அரசு வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 30 சதவீதம்; பெண்களுக்குச் சொத்துரிமையில் சம பங்கு போன்ற சட்டங்களை எல்லாம் கொண்டு வந்து இப்படிப்பட்ட நல்ல கரியங்களை எல்லாம் இந்த அரசு செய்துள்ளது.

எனக்கு முன்னால் பேசிய திரு. நூர் முகமது அவர்களும் கூட இந்த நாட்டில் மருமகளுக்கு மட்டும் ஸ்டவ் வெடிக்கிறது என்று சொன்னார்கள். ஆமாம் கிட்டத்தட்டப் பார்க்கப் போனோமேயானால்' சீர் சிறப்புச் செய்யவில்லை, பேசியபடி நகை போடவில்லை, பணம் கொடுக்கவில்லை என்றெல்லாம் சொல்லி' பெண்களுக்குப் புகுந்த வீட்டில் தீ வைத்தக் கொடுமைகள் எல்லாம் ஏராளமாக சென்ற ஆட்சிக் காலத்திலே நடந்திருக்கின்றன. அதையெல்லாம் கருத்தில் கொண்டு சொத்திலே சம பங்கு வாங்கிக் கொண்டு போ' தீ வைத்துக் கொல்லாதே ஸ்டவ்வும் வெடிக்க வேண்டாம் என்று சொல்லி பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை சட்டம் கொண்டு வந்து இன்றைய தினம் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

அரிசன மக்களுக்கு இலவச வேட்டி' இலவச வீடுகளைப் பொறுத்தமட்டில்' நம் ஆட்சிக் காலத்திலே, 1975 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலம் அந்த நேரத்திலே தான் கான்கிரீட் வீடு கட்டிக் கொடுக்கின்ற ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து என்னுடைய கிணத்துக்கடவுத் தொகுதியில் காட்டம்பட்டி கிராமத்

1990 மார்ச் 21] [திரு. கே. கந்தசாமி]

தில் கிட்டத்தட்ட 40 வீடுகளைக் கட்டிக் கொடுத்தோம். அந்த வீடுகள் இன்றைய தினம் நன்றாக இருக்கின்றன. அதற்குப் பின்னால் வந்த அரசு இலவசமாகக் கான்கிரீட் வீடு கட்டித் தரும் திட்டத்தைக் கை விட்டு 6,000 ரூபாய் செலவில் வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டு வந்து என்னுடைய தொகுதியில் இராமநாதபுரம் கிராமத்தில் அரிஜன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தார்கள். அந்த வீடுகளை எல்லாம் இப்பொழுது இராம நாதபுரம் கிராமத்தில் பார்த்தால் வீடுகளுக்குக் கதவு கிடை யாது. ஒரு சினிமாப் படத்திலே வருவது போல் அந்த வீடு இன்றைய தினம் தொங்கிக் கொண்டிருக்கிறது.

12-25 மணி

சினிமா படத்திலே பாடினார்கள். ''காட்டு ராணிக் கோட்டையிலே கதவுகள் இல்லை அங்கு காவல் காக்க கட வுளையன்றி யாருமே இல்லை'' என்று. அந்தப் போக்கில் இருக் கிறது இன்றைக்கு என்னுடைய தொகுதியில் இராமநாதபுரம் கிராமத்தில் இருக்கிற வீடுகள். அதை நீங்கள் சென்று பார்க்க வேண்டும். ஆனால் இன்றைய தினம் அப்படி காரியங்கள் நடக்க வில்லை. நல்ல தரமான கான்கிரீட் வீடுகள் 42,000 பேருக்கு கட்டித் தரப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இது ஏழைகளு டைய திட்டமா அல்லது பணக்காரர்களுடைய திட்டமா என்பதை எல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சிலர் பேசுகிற போது சொன்னார்கள் இது பணக்காரர்களுடைய பட்ஜெட் ஏழைகளுக்கு ஒன்றுமே கிடையாது என்று. ஆனால் அந்தக் கான்கிரீட் வீடுகளில் யார் குடி இருக்கிறார்கள்? பஸ் முதலாளியா அங்கே போய் இருக்கிறான். ஆகவே செய்யப்பட்ட திட்டங்கள் எல்லாம் ஏழை எளியவர்களுக்காகத் தீட்டப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு இந்த அரசு பாடுபடுகிறதே அல்லாமல் பணக்காரர்களுக்குப் பின்னால் என்றும் திராவிட முன்னேற்றக் கழகம் போகாது.

பஸ் தேசியமயமாக்கப்படுவது யாருக்கு ? அது ஏழை எளி வர்களுக்கான திட்டமா? அல்லது பணக்காரர்களுக்கான திட் டமா? ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேர வேண்டிய திட்டம் அது. அவர்களுக்காகத்தான் பஸ் தேசியமயமாக்கப்பட்டது. அதேபோல பினாமி நிலங்களை ஒழிக்கவும், இன்றைய தினம் நமது அரசாங்கம் சட்டம் கொண்டு வர இருக்கிறது. இச்சட்டத்தை வரவேற்க வேண்டும்.

பினாமி நிலங்களை ஒழித்து நிலமற்ற ஏழைகளுக்கு கொடுக் கப்படும் என்று சொன்னார்கள். யாருக்குக் கொடுக்கிறார்கள்? மகாலிங்கத்திற்கா கொண்டு போய் கொடுக்கப் போகிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு நிலமற்ற ஏழைகளுக்கு கொடுக்க இருக் கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை இன்றைய தினம்

[திரு. கே. கந்தசாமி] [1990 மார்ச் 21

நம்முடைய தலைவர் அறிவித்திருப்பதை பாராட்டாமல் ஏதேதோ வேண்டுமென்றே சிலர் பேசிக் கொண்டிருப்பதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் கிடையாது.

அதேபோல வியாபாரிகளின் நீண்ட நாள் கோரிக்கையான பல முனை வரியைத் தவிர்த்து ஒருமுனை வரியை விதிக்கிற வகையில் பட்ஜெட்டில் அறிவித்துள்ளதைக் கண்டு வியாபாரிகள் பட்ஜெட்டைப் பாராட்டுகிறார்கள். விவசாயிகள் ஏழரை மற்றும் பத்து குதிரை திறன் கொண்ட மோட்டார்களுக்கு 75 ரூபாய் மின் கட்டணம் கட்டிக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு 10 குதிரைதிறன் கொண்ட மோட்டார் வரைக்கும் 1HDமின் கட்டணம் 50 ரூபாய் என குறைத்திருப்பதால் விவசாயிகளும் பட்ஜெட்டைப் பாராட்டுகிறார்கள். வீட்டுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்கள் மிளகு, புளி, வெல்லம், மிளகாய், மஞ்சள், மல்லி, சீரகம், சீயக்காய் போன்ற பொருள்களுக்கு எல்லாம் இன்றைய தினம் வரி குறைக்கப்பட்டிருக்கிறது. அதனால் பெண்கள் பட்ஜெட்டைப் பாராட்டுகிறார்கள்.

ஆகவே எல்லாத் தரப்பு மக்களும் எல்லா இன மக்களும் இன்னும் சொல்லப் போனால் தமிழகமே இன்றைய தினம் நம்முடைய பட்ஜெட்டைப் பாராட்டி நம்முடைய தலைவர் அவர்களைப் பாராட்டி மகிழ்ந்து கொண்டு இருக்கிற நேரத்தில் ஏதோ வேண்டுமென்றே ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக இது ஏழைகளுடைய பட்ஜெட் அல்ல இது பணக்காரர்களுடைய பட்ஜெட் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதே போல விவசாயிகள் பயன்படுத்தும் டிராக்டர்களின் உதிரி பாகங்களுக்கு 9 சதவீதம் வரியை 4 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள். அதனால் ஏழை எளிய விவசாயிகள் பட்ஜெட்டைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் வீடு கட்டப் பயன்படுத்தும் செங்கல் ஓடு போன்ற பொருட்களுக்கு வரியை குறைத்திருக்கிறார்கள். அவர்களும் பட்ஜெட்டைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எல்லோரும் இந்த அரசை பாராட்டியிருக்கிறார்கள். தண்டத் தீர்வை ரத்து செயயப்பட்டு இருக்கிறது. போன இரண்டு மாதங்களுக்கு முன்னால் நம்முடைய தலைவர்களிடத்திலே எல்லா விவசாயிகளும் முறையிட்டிருக்கிறார்கள். தண்டத் தீர்வை போட்டிருக்கிறார்கள். பல ஆண்டுக் காலமாக அப்படியே இருக்கிறது வட்டி ஏறிக் கொண்டிருக்கிறது எங்களால் கட்ட முடியவில்லை அதனால்இந்த தண்டத்தை தீருங்கள் என்று சொன்னார்கள். ஆனால் அந்த தண்டத் தீர்வை இன்றைய தினம் ரத்து செயயப்பட்டிருக்கிறது. இப்படி அடுக்கடுக்கான நல்ல காரியங்களை நம்முடைய தலைவர் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த பட்ஜெட்டைப் பொறுத்த வரையில் இது ஏழை எளிய மக்களுக்கான பட்ஜெட் என்பதைக் கூறிக் கொண்டு என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் சில பிரச்சினைகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1990 மார்ச் 21] [திரு. கே. சந்தசாமி]

என்னுடைய தொகுதி விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள தொகுதி. அங்கே மழை இல்லாமல் இருக்கிறது. பத்தாண்டுக் காலமாகவே பெரிய மழை எதுவும் பெய்யவில்லை. அதனால் தண்ணீரே இல்லை. அங்கே முன்பு ஏராளமாக மழை பெய்து கொண்டிருந்தது. ஆனால் இப்போது மழை பெய்யாததற்குக் காரணம் மகராசன் கூட்டம், வீரப்பன் கூட்டம் எல்லோரும் போய் மரங்களை எல்லாம் வெட்டி எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். மரங்களை வெட்டி விட்டக் காரணத்தினால் மழையே இல்லாமல் போய் தென்னை மரங்கள் எல்லாம் கூட காய்ந்து கருகி, குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் அங்கே மக்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். வீரப்பன் இதுவும் பத்தாது என்று நினைத்து இந்த மலைப் பக்கமும் வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஐயா, இதை எல்லாம் இந்த அரசு தடுக்க வேண்டும். ஆகவே நான் வேண்டிக் கேட்டுக் கொள்வது, இந்த காய்ந்து போன தென்னை மரங்களுக்கு நீங்கள் தண்ணீர் விட வேண்டும். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் கொண்டு அங்கு தென்னை மரங்கள் காயாமல் இருப்பதற்கு உயிர் தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியின் காரணமாக கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் தங்களுடைய ஆடு மாடுகளைக் காப்பாற்ற தண்ணீருக்காக விவசாயிகள் ஆழ் குழாய் கிணறுகள் போட்டிருக்கிறார்கள். அதிலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டும் என்று சொன்னால் கம்ப்ரசர் மோட்டார் வைத்து, ஏற்கனவே உள்ள மின் இணைப் பிலேயே மின் இணைப்பு கொடுத்து கம்ப்சரர் மோட்டாரை ஓட்டு கின்றனர். கம்ப்ரசிற்கு ஒரு மோட்டார், கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க ஒரு மோட்டார். ஆனால் அதற்கு டி. சி. சுவிட்ச் பொருத்திக் கொண்டு கம்ப்ரசர் மோட்டார் ஓடினால், பம்ப்செட் மோட்டார் ஓடாது, பம்ப்செட் மோட்டார் ஓடினால், அந்த மோட்டார் ஓடாது என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே அதற்கு கம்ப்ரசர் மோட்டார் ஓட்டுவதற்கு இரட்டைக் கட்டண மாக வசூலிக்கப்படுகிறது. இது எவ்விதத்திலும் நியாயமில்லை. எனவே இரட்டிப்புக் கட்டணத்தை கண்டிப்பாக கட்டாயமாக தயவுசெய்து ரத்து செய்யுங்கள் ஐயா. நிச்சயமாக அந்தக் கடனை நீங்கள் ரத்து செய்ய வேண்டும். விவசாயிகளுடைய கடன்களை எல்லாம் ரத்து செய்யவேண்டும்.

12.30 மணி

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணன் ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் சொல் வது முற்றிலும் உண்மை. ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது. ஆனால், நாங்கள் பேசும்போது, அமைச்சர் குறுக்கிடுகின்றார். ஆளுங்கட்சி உறுப்பினர் கேட்கும்போது அவருக்கு ஆறுதலாக ஒரு பதிலாவது சொல்ல வேண்டும். மின்துறை, பாசன துறை ஆகிய இரண்டையும் வகிக்கின்ற அமைச்சர் பேசாமல் இருப்பது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : ஆளும்கட்சி, எதிர்க்கட்சி எல்லா உறுப்பினர்களுக்கும் கோரிக்கை என்பது பொதுவானது தான். ஆளுங்கட்சி உறுப்பினர் என்கிற காரணத்தினாலேயே கோரிக்கை வைக்கக் கூடாது என்பதல்ல. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களிடத்திலே கோரிக்கையை எடுத்துச் சொல்லலாம். அதன்மீது அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

*திரு. கே. கந்தசாமி : நான் கோரிக்கையைத்தான் சொன்னேனே தவிர, குற்றம் சொல்லவில்லை, திரு. சின்னச்சாமி அவர்களே, கோரிக்கையைத் தான் சொன்னேன். ஆகவே, விவசாயக் கடன்களைப் பொறுத்தவரையில், கிணறு வெட்டக் கொடுக்கப்படுகின்ற கடன், நிலவள வங்கி மூலம் கொடுக்கப்படுகின்ற கடன் இதன் மூலம், கிணத்துக்கடவு நிலவளவங்கியில், பேரிவாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமசாமி கவுண்டர் அவர்கள் 6-1-71-ல் கிணறு வெட்ட வாங்கிய கடன் ரூ. 30,900 தொடர்ந்து மழை மாரி இல்லாமல் வேளாண்மை இல்லாமல், அந்தக் கடனைத் திருப்பிக்கட்ட முடியாத நிலையில்கூட அவரால் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ரூ. 42,600. ஆனால் இன்னும் வங்கிக்கு அவர் செலுத்த வேண்டிய தவணை தவறிய பாக்கி ரூ. 19,000. ஆகவே, தயவுசெய்து பெரிய மனது வைத்து, இந்த ஏழை எளிய விவசாயிகளைக் காப்பாற்றும்பொருட்டு, கிணறு வெட்டி தண்ணீர் இல்லாத கிணறுகளுக்காவது, அந்தக் கடன்களை ரத்து செய்து விவசாயிகளுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் பயிர்க் கடன். பயிர்க்கடன் வாங்கிய விவசாயிகளுள், கிணத்துக்கடவு 10ஆம் நெம்பர் முத்தூரைச் சேர்ந்த திருமதி பேச்சியம்மாள், 19-6-1974ஆம் தேதியில், கிணத்துக்கடவு வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில், வாங்கிய பயிர்க்கடன் ரூ. 4,950, 25 6-1976-ல், வறட்சியின் காரணமாக 3 வருட தவணைக்குள் வாய்தா மாற்றம் செய்து, நாளது தேதி வரை செலுத்திய தொகை ரூ. 5,700. ஆனால், இன்னமும் நாளது தேதியில் தவணைத் தவறிய நிலுவைத் தொகை ரூ. 7,300-ஆக, இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணம், 10 ஆண்டுகளாக பருவ மழை கிடையாது; 10 ஆண்டுகளாக கிணற்றில் தண்ணீர் கிடையாது. விவசாயிகளுக்கு எந்த வேலையும் கிடையாது. சுருக்கமாகச் சொல்லப்போனால், அந்தப் பகுதியிலே, டவுன் பஸ் இல்லையென்றால் கஞ்சியே கிடையாது. அங்கு டவுன் பஸ் ஏறித்தான் கிராமங்களிலே இருக்கின்ற வேலையற்ற விவசாயிகள் பட்டணங்களுக்குச் சென்று, வேலைவாய்ப்புத்தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து, இப்படிப்பட்ட கடன்களையெல்லாம் நிச்சயமாக ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முடிந்த அளவு சேர்ந்திருந்த வட்டியையாவது ரத்து செய்யுங்கள். அபராத வட்டியையும் ரத்து செய்யுங்கள். (மணியடிக்கப்பட்டது).

1990 மார்ச் 21] [திரு. கே. கந்தசாமி]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் . திரு. இரா. மோகன் சீக்கிரம் முடித்து விடுங்கள். இன்னும் 5 மணித்துளிகள்தான் உங்களுக்குத்தரப்படுகிறது.

திரு. கே. கந்தசாமி : விவசாய நிலங்களிலுள்ள வீடுகளுக்கு மின் இணைப்புத் தருவதில், கம்பம், கம்பி ஆகிய இவைகளுக்கு ஆகும் செலவுகளை, மின்வாரியம் விவசாயிகளையே கட்டச் சொல்கிறது. விவசாயிகள் எப்படி இதைக் கட்ட முடியும்? ஆகவே, மின் இணைப்பு கொடுப்பதில், விவசாயிகளுக்கு, விவசாய நிலங்களிலே இருக்கின்ற மக்களுக்கு, முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு கம்பம், கம்பி போன்றவற்றிற்கான செலவுகளை மின் வாரியமே ஏற்றுக்கொண்டு இலவசமாக மின் இணைப்பு உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும். அதேபோல், பம்ப்செட் மோட்டார் ஓடாத கிணறுகளுக்கு மின் கட்டணம் வசூலிப்பது நியாயமே இல்லை. தண்ணீரே இல்லை. 4, 5 வருஷங்களாக பம்ப்செட் மோட்டாரை ஓட்டவில்லை. இருந்தாலும், பணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். என்ன காரணம்? மின் இணைப்பு துண்டித்துவிட்டால், மீண்டும் மின் இணைப்புக் கிடைக்காது என்ற காரணம். ஆகவே, மின் இணைப்பைத் துண்டிப்பதை நிச்சயமாக நிறுத்த வேண்டும். இல்லையென்றால், விவசாயிகள் தாங்களாகவே முன்வந்து, ''எங்களுடைய கிணறுகளில் தண்ணீர் இல்லை; மின் இணைப்பைத் துண்டித்து விடுங்கள்'' என்று சொன்னால் மின் இணைப்பைத் துண்டித்து விடுங்கள், பின்பு மழை பெய்து கிணற்றுக்கு தண்ணீர் வந்து விவசாயி மின்வாரியத்திடம் மின் இணைப்பு வேண்டும் என கேட்கும் போது மின் இணைப்புத் தந்து, அந்த நாளிலிருந்து மின் கட்டணம் வசூலிக்க ஆவன செய்யுங்கள்.

12—35 மணி

விவசாயத்தைப் பொறுத்தவரையில் மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபட்டு இருக்கிறது. நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், தஞ்சாவூரிலே விவசாயம் மாறுபட்ட விவசாயம். மதுரையிலே மாறுபட்டிருக்கிறது. சேலத்திலே மாறுபட்டிருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்திலே மாறுபட்டிருக்கிறது. ஏனென்று சொன்னால், இப்போது விவசாயிகளை நாம் சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பிரித்துச் சொல்கிறோம். சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. காரணம், ஒரு பள்ளம் படுகையில், குளம் குட்டைக்குப் பக்கத்தில் கிணறு இருக்கிறவர்களுக்கு, கிணற்றிலே தண்ணீர் இருக்கிறது. தண்ணீர் இருக்கின்ற விவசாயி, 4 ஏக்கர் கரும்பு வைத்தால் அல்லது வாழை வைத்தால் அல்லது மஞ்சள் வைத்தால் ரூபாய் 10,000 அல்லது 15,000 வருமானம் வரும். அதுவே பக்கத்தில் இருக்கின்ற மேடு, வானம் பார்த்த பூமி 6 ஏக்கர் நிலம் வைத்து இருந்தாலும் அந்த விவசாயி பெரிய விவசாயி.

[திரு. கே. கந்தசாமி] [1990 மார்ச் 21

ஆகவே, அந்த பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்ற பாகுபாடு அறவே ஒழிக்கப்படவேண்டும். அப்போதுதான் விவசாயிகள் எல்லோருக்கும் கிடைக்கின்ற வகையில் சலுகைகள் கிடைக்கும். அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரைக்கும் இப்படித்தான் பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்று இருந்து கொண்டிருக்கிறது. பெரிய விவசாயி என்பதை ஒழிக்க சட்டத்தைக் கொண்டு வந்து அவர்களிடம் இருக்கிற நிலங்களை எடுத்துக் கொள்ளவேண்டியதே தவிர, அதற்காக பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்ற பாகுபாடு இருக்கக் கூடாது. ஏழை சிறிய விவசாயிகளுக்கு உதவுவதற்கு கடன்களைத் தள்ளுபடி பண்ணுவதற்கு, யார், யாருக்கு உதவ வேண்டும் என்று தீர்மானிப்பதற்கு ஒரு விவசாய நிபுணர் குழுவை மாவட்டத்திற்கு மாவட்டம் அமைத்து பரிசீலனை செய்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பி.ஏ.பி. பாசனப் பகுதிகள், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மூன்று மண்டலங்களாக ஆயக்கட்டுப் பகுதி இருப்பதை நான்கு மண்டலங்களாகப் பிரித்து புதியதாக வெட்டப்பட்ட வாய்க்கால்களுக்கு முறையாக பாசனத்திற்குத் தண்ணீர் விடவேண்டும் என்று பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரைவில் பரிசீலனை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தென்னை மரம் எல்லாம் காய்ந்து போய் விட்டது. தண்ணீர் கொடுத்தாலாவது இந்த வருடமாவது வேளாண்மை செய்து குடியிருப்பதற்காவது விவசாயிகளுக்கு வழி இருக்கும். இல்லையெனில் ஊரை விட்டே எல்லோரும் போகவேண்டிய நிலை ஏற்பட்டு விடும். ஆகவே, நீங்கள் 4 மண்டலங்களாகப் பிரித்து இந்த ஆண்டே நிச்சயமாகத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வடசித்தூர் வாய்க்காலில், கடந்த காலத்தில், நான் பெயர் சொல்வது நன்றாக இருக்காது—கடந்த காலத்தில், வடசித்தூர் வாய்க்காலில், கொண்டம்பட்டி உப கிளை வாய்க்கால் 19.4 கிலோமீட்டர் வெட்டப்பட டெண்டர் விடப்பட்டு, டெண்டர் விடப்பட்டதை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆள் வைத்து எடுக்க முடியாத காரணத்தால், அந்த வாய்க்கால், வெட்டும் பணி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரால் நிறுத்தப்பட்டு கிட்டத்தட்ட 3,667 ஏக்கர் பாசனத்தையே நிறுத்திக் கெடுத்துவிட்டார். ஆகவே அதை மீண்டும் துவக்கி 3,667 ஏக்கர் நிலத்தையும் பாசனப் பகுதியிலே சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

1990 மார்ச் 21] [திரு. கே. கந்தசாமி]

அதேபோல், கிணத்துக்கடவு தொகுதியில் புரவிபாளையம் அருகே சோளகுளஹள்ளி ஆற்றின் குறுக்கே 7 கோடியே 43 இலட்சம் செலவில் ஒரு அணை கட்டும் திட்டம் ஏற்கெனவே பரிசீலனையில் இருந்து கொண்டு இருந்தது. அந்தத் திட்டத்தை ஏனோ கை விட்டு விட்டார்கள். அந்தத் திட்டத்தை உடனடியாக ஏற்பாடு செய்தால், மேற்கு நோக்கி கேரளத்திற்குப் போகும் நீரைத் தேக்கி, அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் பாசனம் பெறுவதோடு பக்கத்திலே இருக்கின்ற கிணறுகளுக்கு எல்லாம் தண்ணீர் வரும் என்பதையும் தெரிவித்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

ஆனைமலையாறு நல்லாறு திட்டத்தை நிறைவேற்றி பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்துடன் இணைத்து விடுபட்டுப் போன நிலங்கள் ஆயக்கட்டில் சேர்க்கப்பட வேண்டும். கோதவாடி, தேவம்பாடிவலசு மற்றும் குளங்களுக்கு தண்ணீர் விட வேண்டும். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கிணத்துக்கடவு தொகுதியில் திம்மங்குத்து ஊராட்சிக்குட்பட்ட தப்பட்டைக் கிழவன் புதூர் என்ற ஊர் இருக்கிறது. அந்தப் பகுதியில் ஆளியாறு ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. மேற்கே ஒரு சின்ன அணை கட்டி அதிலிருந்து தண்ணீர் எடுத்தால் சுமார் அந்தப் பகுதியிலே இருக்கின்ற 15 பஞ்சாயத்துகளுக்கும், கிட்டத்தட்ட 40 கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வழங்கப் பயன்படும். ஏனென்று சொன்னால் ஆழ் குழாய் கிணறு போட்டால் கூட தண்ணீரே வருவதில்லை. அங்கே அணை கட்டி, பம்பிங் செய்து தண்ணீர் கொண்டு வந்தால் 40 கிராமங்களுக்கு நிச்சயமாக எந்தக் காலத்திலும் குடி தண்ணீர்ப் பஞ்சமே வராது. எனவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

கிணத்துக்கடவு பேரூராட்சி, 10 ஆயிரம் பேர் வசிக்கின்ற இடம், அந்த இடத்தில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை. ஆகவே, அம்பராம்பாளையம் குடிநீர்த் திட்டத்தை கிணத்துக்கடவு பேரூராட்சி பகுதிக்கும் விரிவுபடுத்தி வழங்க வேண்டும். அதேபோல், கடந்த ஆட்சியில் காட்டம்பட்டியில் ஒரு திருமண மண்டபம் கட்டப்பட்டது. நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் அறநிலையத் துறை அமைச்சராக இருந்தபோது வாங்கப்பட்ட திருமண மண்டபம். அப்

12-40 மணி

போது நமது ஆட்சியில் பாதி வரைக்கும் கட்டப்பட்டு, ஆட்சி மாறிய காரணத்தால் அது அப்படியே நின்று விட்டது. ஆகவே அந்த திருமண மண்டபத்தை நீங்கள் சுட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

LEGISLATIVE
TRUTH ALONE TRIUMPHS

நல்லிட்டிப்பாளையத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி அதை உயர் நிலைக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணத்துக்கடவு தொகுதியில் 4 உயர் நிலைப்பள்ளிகள் அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் எம்.எல்.ஏ. வாக இருந்த காலத்தில் தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு 20 வருடமாக அங்கே வேறொரு உயர்நிலைப்பள்ளியையும் ஏற்படுத்த வில்லை. அந்த 4 உயர் நிலைப்பள்ளிகளில் முத்துகவுண்டனூர் பாளையத்திலுள்ள உயர்நிலைப்பள்ளி எப்பொது விழுமோ என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. எந்த நேரத்தில் குழந்தைகள் மீது விழுமோ என்று தெரியவில்லை. அந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது ஆகவே, அந்த கட்டிடங்களை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிணத்துக்கடவில் உள்ள மேல் நிலைப் பள்ளியில் 2 ஆயிரம் பேர் படித்துக் கொண்டிருக் கிறார்கள். அங்கே அவர்களுக்கும் இட வசதி இல்லை. சேரிபாளையத்தில் உள்ள உயர் நிலைப் பள்ளிக்கும் இட வசதி இல்லை. அதேபோல் கொல்லம்பட்டியில் உள்ள உயர் நிலைப் பள்ளிக்கும் இட வசதி இல்லை. ஆகவே இந்தப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டித்தர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத தலைவர் (திரு. இரா. மோகன்) : திரு. கந்தசாமி அவர்களே, மற்ற விவரங்களை அமைச்சர் இடத்திலே நேரடியாகக் கொடுத்து விடுங்கள், அவையெல்லாம் சிறிய சிறிய விஷயங்கள்தான். மண்டபம் கட்டுவது எல்லாம் சிறிய விஷயம்தான். அமைச்சர் அவர்களிடம் கொடுத்து விட்டால் அவர்கள் கவனிப்பார்கள். சீக்கிரம் முடித்து விடுங்கள்

திரு. கே. கந்தசாமி ; மாற்றுத் தலைவர் அவர்களே, சொல்ல வேண்டியதை விட்டுவிட்டேன். அரிசன நலத்துறை யின் மூலம் கிணத்துக்கடவில் ஒரு மாணவர் விடுதி கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஒன்று கூட இல்லை. அங்கே மாணவர்கள் மரத்தின் அடியில் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் கிணத்துக்கடவில் ஒரு தீ அணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் கிணத்துக்கடவு தொகுதி யில் நெகமம் கிராமத்தில் காவல் நிலையம் குப்புற விழுகிற நிலையில் இருக்கிறது. ஏற்கெனவே அந்த காவல் நிலையத்தில் லாக் அப் வசதி இல்லை. சும்மா கொண்டு போய் உட்கார வைக்கத்தான் வேண்டும். 15 வருடமாக அந்த வசதி அங்கே இல்லை. அதனால் அன்னாள் பதவியில் இருந்தவர்கள் லாக் அப்பில் இருந்தவனை கடத்திக் கொண்டுபோய் விட்டார்கள். இதுவெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே போலீஸ் ஸ்டேஷன் ஒன்று கட்டி அங்கே இருக்கிற காவலர்களுக்கு

1990 மார்ச் 21] [திரு. கே. கந்தசாமி]

குடியிருப்பு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை விட முக்கியமான ஒன்று நெகமம் கிராமத்தில் மயானமே இல்லை. மயானமே இல்லாமல் எல்லாவற்றையும் நிலமாக மாற்றிவிட்டார்கள். நிச்சயமாக சொல்கிறேன். பொய் சொல்லவில்லை. நீங்கள் வந்து ஒரு ஆய்வு செய்து பாருங்கள். மயானத்தில் முன்னாள் இருந்த சட்டமன்ற உறுப்பினர் குளம் கட்டி தன்னுடைய காட்டுக்குத் தண்ணீர் கொண்டு போய் இருக்கிறார்கள். இறந்து போனால் புதைப்பதற்குக் கூட வழி இல்லை. 2 மாதத்திற்கு முன்னால் ஒருவர் இறந்துபோய்விட்டார். அவரை மயானத்திற்குக் கொண்டுபோய் புதைப்பதற்கு குழி தோண்டும்போது அங்கே தண்ணீர் வந்துவிட்டது. ரோட்டில் தான் புதைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ரோட்டையும் வெட்டிவிட்டார்கள். ஆகவே தயவுசெய்து இந்த நெகமத்திற்கு ஒரு சுடுகாட்டை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அருமையான பட்ஜெட்டைத் தயாரித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் மாண்புமிகு உறுப்பினர் காட்டாம்பட்டியார் அவர்கள் அருமையாக விவசாயிகள் பிரச்சினையை பற்றி சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் விவசாயிகளுடைய கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் முரசொலி, குங்குமம் படிக்கிறாரா இல்லையா எனக்குத் தெரியாது. நான் படிக்கிறேன். அதிலே 11–5–1989 ஆம் நாள் இதழில் இலவச இணைப்பில் ஆட்சியினுடைய 100 நாள் சாதனைப் பட்டியலில் விவசாயிகளுக்கு நிவாரணம், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் மாற்றி அமைக்கப்பட்ட குறுகிய கால கடன்களை, தவணை தவறிய கடன்களை அனைத்தும் அறவே தள்ளுபடி, குறுகிய மத்திய கால கடன்கள் மீதுள்ள அபராத வட்டி அறவே தள்ளுபடி, நீண்ட கால கடன்கள் மீது ஒத்தி வைக்கப்பட்டுள்ள வட்டி அறவே தள்ளுபடி, நிதி நிலை நெருக்கடி நிலவும் இந்த நேரத்தில் இந்த சலுகைகளால் ரூபாய் 106 கோடி கூடுதல் செலவினை ஏற்க அரசு முன் வந்துள்ளது; இப்போது அறிவிக்கப்படும் சலுகைகளால் பயன் அடைவோர்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. மோகன்) : திரு. அர்ஜுனன் அவர்களே, இதில் என்ன Point of order இருக்கிறது? உங்களுடைய உறுப்பினர் பேசும்போது உங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். அவர் பேசியதிலே நீங்கள் என்ன Point of order எழுப்புகிறீர்கள்? (குறுக்கீடு). குங்குமம், முரசொலி எல்லோரும் படிக்கிறார்கள். நீங்கள் அதில் உள்ளதைப் படிக்கவேண்டும் என்பது அல்ல. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகர். (குறுக்கீடு) ஒன்றும் இல்லை திரு. அர்ஜுனன் அவர்களே, உட்காருங்கள். நீங்கள்

படித்ததில் Point of order ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) அதில் ஒன்றும் இல்லை. அதை பார்த்துக் கொள்ளலாம். தயவு செய்து உட்காருங்கள். அடுத்து திரு. சந்திரசேகர்.

12–45 மணி

*திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1990—91ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி கலந்த வணக்கத்தை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்ததன் காரணமாகவும், சத்துணவு திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்காகவும், இலவசமாக வேட்டி, சேலை தருவதற்கு ஏற்பட்ட நிதி நிலை பற்றாக்குறை காரணமாகவும் இன்றைக்கு அரிசியினுடைய விலையை ஏற்றியிருக்கிறோம் என்று இந்த அரசு குறிப்பிட்டு இருப்பதை பார்க்கிறபோது, உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. மத்தியிலே காங்கிரஸ் சர்க்கார் ஆண்டு கொண்டிருந்த அந்த நேரத்திலே, ரேஷன் கடைகளிலே ஒரு விளம்பர அட்டையை தொங்கவிட்டு இருந்தீர்கள். அந்த விளம்பர அட்டையிலே, மத்திய அரசு அரிசி விலையை ஏற்றினாலும் மாநில அரசு அரிசி விலையைக் கட்டுப்படுத்தி அதே விலைக்கு அரிசியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்று விளம்பரத்தை ரேஷன் கடைகளில் தொங்கவிட்டு இருந்தீர்கள். அப்படிப் பட்ட அட்டைகள் இன்றும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்கு மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற சர்க்கார், தேசிய முன்னணியினுடைய சர்க்கார், அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கிறது. அங்கே ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற நேரத்திலே நாங்களும் மக்களும் நினைத்தது எல்லாம் மத்தியிலே இருக்கிற அரசு அரிசியினுடைய விலையை குறைக்கும், இங்கே ஆண்டு கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சர்க்கார், மாநிலத்திலேயும் அரிசி விலையைக் குறைத்து மக்களுக்கு அளிப்பார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிற நேரத்திலே இன்றைக்கு அரிசியின் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் ஏழையெளிய மக்கள் என்பதை மட்டும் உங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறோம்.

அதேபோல, இன்றைக்கு கள்ளச்சாராயம் மக்கள் மத்தியிலே கொடுமையாகப் பரவிக் கொண்டிருக்கிற நேரத்திலே கள்ளச் சாராயத்தை ஒழிக்க அரசு அதற்கென்று போலீஸ் துறையை நியமித்து இருக்கிறது. தமிழகப் போலீஸ் என்று சொன்னாலே சிறந்த போலீஸாக, இந்தியாவிலேயே சிறந்த போலீஸாக விளங்கிக் கொண்டிருக்கிற உண்மையை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். முதல்வர் அவர்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் குறிப்பிடுகின்றபோது, சாராயத்தை ஒழிப்பதற்காக அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு, கள்ளச் சாராய விற்பனைக்கு துணை புரிபவர்கள் அப்படி துணை

1990 மார்ச் 21] [திரு. வி. பி. சந்திரசேகர்]

புரிகின்ற போலீசார் மீது குண்டர் சட்டம் பாயும் என்று அறிவித்தார்கள். ஆனால் தற்போது பண்ருட்டியிலே கள்ளச்சாராயத்தின் காரணமாக எத்தனையோ பேர் இறந்ததற்குப் பின்னால், எந்த போலீஸ் அதிகாரி மீது இந்த குண்டர் சட்டம் பாய்ந்திருக்கிறது என்பதை நாங்கள் கேட்க விரும்புகிறோம். அப்படி குண்டர் சட்டம் பாய்ந்திருந்தால் கண்டிப்பாக இன்றைக்குக் கள்ளச்சாராயம் ஒழிக்கப்பட்டு இருக்கும். அப்படிப் பட்ட நிலை இல்லாமல், இன்றைக்கு குறைந்த விலையிலே மது கொண்டு வருவது, கள்ளச்சாராயத்தின் மூலமாக ஏற்படுகின்ற தீமையின் காரணமாகக் கொண்டு வருகிறோம் என்று சொன்னால், எலிக்கு பயந்து கொண்டு வீட்டை எரிக்கிற நிலையைத்தான் பார்க்க முடிகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்று அரசை நான்கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல மாதம் 300 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்குகிறோம் என்று அறிவித்தார்கள். பாராட்டவேண்டிய திட்டம். வேட்டி, சேலை இலவசமாக வழங்குகிறோம் என்று சொன்னார்கள். பாராட்ட வேண்டிய திட்டம். ஆனால் இந்தத் திட்டங்களிலே குறைபாடுகள் இருப்பதை நீங்கள் பார்க்க வேண்டும். 300 ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு, ரேஷன் அட்டைகளிலே வருமானம் போடப்பட்டிருந்தாலும்கூட, பல்வேறுபட்ட மக்கள் அப்படிப்பட்ட ஒரு பயனை அடைய முடியாத நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. இலவச வேட்டி, சேலை என்று சொன்னால் அதை வாங்காத மக்கள், அதனுடைய வரை முறைக்கு உட்பட்டிருந்தாலும்கூட, அதை வாங்காத மக்கள் நிறைய பேர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலையை இந்த அரசு களைய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல விவசாயிகளுடைய பிரச்சினை, இந்த அரசு கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய பிரச்சினை விவசாயிகளுடைய பிரச்சினையாகும். அவர்களுடைய கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று பல்வேறு நிலைகளில் நாங்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு இருக்கிற விவசாயிகளிலே, எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால், அந்த விவசாயிகள் அன்றாட வாழ்க்கைக்கே கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிற நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே அவர்கள் வாங்கிய கடன்களை திருப்பி கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. மழை பெய்து 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அப்படிப்பட்ட நிலையில் விவசாயிகள் அந்தக் கடன்களை திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமையிலே இருந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய சிரமத்தை அறிந்து, சிறு, குறு விவசாயிகள்

[திரு. வி.பி. சந்திரசேகர்] [1990 மார்ச் 21

என்று பார்க்காமல் எல்லா விவசாயிகளுடைய கடன்களையும் கண்டிப்பாக தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, விவசாயிகள் பயன்படுத்தும் $7\frac{1}{2}$, 10 குதிரை வேகம் உள்ள மின்சார மோட்டார்களுக்கு 75 ரூபாயிலிருந்து 50 ரூபாய் குறைந்து இருக்கிறது என்று சொன்னார்கள். இதனால் பயனடைகின்ற விவசாயிகள் ஒரு சிலரே என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கோவை மாவட்டத்தை எடுத்துக் கொள்வீர்களேயானால் அங்கே மழை பெய்யாத காரணத்தினாலே அங்குள்ள விவசாயிகளுடைய கிணற்றிலே தண்ணீர் இல்லாமல், கிணற்றிலே பப்பாளி மரங்களை பயரிட்டுக்கொண்டிருக்கிற நிலையை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலையில் 5 ரூபாய் கூட மின்சாரக் கட்டணத்தை நிர்ணயிப்பீர்களேயானால் கூட கண்டிப்பாக அது விவசாயிகளுக்கு நஷ்டத்தைத்தான் ஏற்படுத்தும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே இருக்கின்ற விவசாயிகளினுடைய கிணற்றிலே நீர் கிடையாது. எந்த கிணறுகளிலே நீர் இல்லாமல் மோட்டார் பம்ப் செட்டுகள் ஓடாமல் இருக்கிறதோ அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு இந்த மின் கட்டணத்திலேயிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைபோலத்தான் பல்வேறுபட்ட தொழிலாளர்கள் இறந்தால் அவர்களுடைய குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக அரசு அறிவித்து இருக்கிறது.

12-50 மணி.

நான் தெரிவித்துக் கொள்வதெல்லாம் எல்லா தொழிலாளர்களுக்கும் மேலாக இன்றைக்குப் பாரம் தூக்கும் தொழிலாளர்கள் அதிகமாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தொழிலாளி என்று எடுத்துக கொண்டால், 8 மணி நேரம் தான் உழைப்பார். ஆனால், இன்றைக்குப் பாரம் தூக்கும் தொழிலாளர்கள் 24 மணி நேரம் உழைத்தால்தான் அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் குடும்பத்தை நடத்துவதற்குப் போதுமானதாக இருக்கும். அப்படிப்பட்ட தொழிலாளி இறந்தால், அவனுடைய குடும்பத்திற்கு ரூ. 10,000 நிதி உதவி தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடந்த 2 நாட்களுக்கு முன்னாலேகூட, என்னுடைய தொகுதியிலே பாரம் ஏற்றும்போது, மரம் ஏற்றுகின்றபொழுது ஒரு தொழிலாளியினுடைய கடப்பாறை குரல்வளையிலே பட்டு இறந்திருக்கிறார். அப்படிப்பட்ட தொழிலாளர்கள் குடும்பத்திற்கு எதிர்காலத்திலே என்ன இருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1990 மார்ச் 21] [திரு. வி. பி. சந்திரசேகர்]

தொழிலாளர்களுடைய பிரிவு ஓய்வூதியத்தின் மூலமாக, கிட்டத்தட்ட 4 ஆண்டுக்காலமாக, மாதம் ரூ. 10 செலுத்திக் கொண்டிருந்தார்கள். 9 மாதங்களுக்கு முன்பாக இந்த அரசு ஓர் அறிவிப்பின் மூலமாக இந்தத் திட்டத்தை நிறுத்தியிருக்கிறது. அப்படி அவர்கள் 4 ஆண்டுக் காலமாக செலுத்திய அந்தப் பணத்தை அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்தால், அவர்கள் குடும்பம் நடத்துவதற்கும் தொழில் செய்வதற்கும் ஏதுவாக இருக்கும். கொடுத்த தொகையை இன்னும் திருப்பியளிக்காத நிலை இருக்கிறது. அதையும் இந்த அரசு கண்காணித்து, அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர், ரோடு, பள்ளிகள் இவற்றிற்காக நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். நான் சொல்வதெல்லாம், இன்றைக்குப் பள்ளிகள் இருக்கிற நிலையைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. பல ஆரம்பப் பாடசாலைகளில் பழைய கட்டிடங்கள்தான் உள்ளன: நாங்கள் எல்லாம் படித்த காலத்திற்கு முன்னாலேயிருந்த கட்டிடங்கள் தான் உள்ளன. அவை மிகவும் மோசமான நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன.

நகரத்தை எடுத்துக் கொண்டோமானால், பெண்கள் படிக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளிலே, பெண்களுக்குப் போதிய இட வசதி இல்லாத காரணத்தாலே, மரத்தடியிலும் ஆரம்பப் பள்ளியிலே இருக்கிற திண்ணையிலும் வகுப்புகள் நடக்கின்ற நிலையை இன்றைக்குப் பார்க்க முடிகின்றது. அப்படிப்பட்ட ஒரு நிலையை மாற்றி, பள்ளிகளுக்குப் போதிய இடவசதி அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

10-வது வரை படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்போவதாக அறிவித்து இருக்கிறீர்கள். நான் சொல்வதெல்லாம் பள்ளிகளிலே நிறைய ஆசிரியர் பதவிகள் காலியாக இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களைப் பூர்த்தி செய்து, கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளை எடுத்துக் கொண்டீர்களானால், எங்களது கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கிற விவசாயிகள் அதிகமாகப் பயிரிட்டு, வளர்த்து வருவது தென்னை மரங்களாகும். அப்படிப்பட்ட தென்னை மரங்கள் தண்ணீர் இல்லாமல் வாடிக் கொண்டிருக்கின்றன. அந்தத் தென்னை மரங்களிலிருந்து அங்கேயிருக்கிற விவசாயிகள் தென்னங்காய்களைப் பறித்து, பணம் சம்பாதிக்கின்ற நிலை அங்கே இல்லை. தென்னங்கன்றுகளைப் பிள்ளை என்று சொல்வார்கள். அப்படிப் பிள்ளையைப் போல்

வளர்த்துக் கொண்டிருந்த தென்னை மரங்கள்—கன்றுகள் இறந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே புதிதாக வெட்டப்பட்ட வாயக்கால்களிலே ஒரு உயிர்த் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்கின்றோம். உயிர்த் தண்ணீர் என்று சொன்னாலே அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட ஓர் உயிர்த் தண்ணீரை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். அங்கே மழை கிடையாது, விவசாயிகள் கண்களிலே ரத்தம் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே மீண்டும் மீண்டும் நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம் புதிதாக வெட்டப்பட்டிருக்கிற வாயக்கால்களிலே உயிர்த் தண்ணீர் கொடுத்து அந்தத் தென்னை மரங்களை, கன்றுகளைக் காப்பாற்றுங்கள். மழை பெய்தால், விவசாயம் செய்கின்ற விவசாயி அதனால் பலன் அடைந்துவிடுவான் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனக் கருத்தரங்கிலே அமைச்சர் அவர்கள் ஒன்றைக குறிப்பிட்டார்கள். தண்டத் தீர்வையை ரத்து செய்கிறேன் என்று சொன்னார்கள். அதற்குப் பின்னால், முதல்வர் அவர்கள், பல்லடம் வந்தபொழுது, அதே மாதிரி ஒரு அறிவிப்பை செய்தார்கள். அந்தத் தண்டத் தீர்வையை ரத்து செய்ய வேண்டுமாய் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

தமிழகத்தைத் தொழில் மயமாக்க வேண்டுமென்று இதிலே அறிவித்து இருக்கிறார்கள். நான் குறிப்பிடுவது எல்லாம் என்னுடைய தொகுதியிலே சோயா பீன்ஸிலிருந்து எண்ணெய் எடுக்கின்ற ஒரு தொழிற்சாலை அமைத்திருக்கிறார்கள். அங்கே கச்சாப் பொருள் கிடைக்குமானால், அது சம்பந்தப்பட்ட தொழில்களை ஏற்படுத்தினால் அது நல்ல முறையிலே இருக்கும். ஆனால், கிட்டத்தட்ட 10 ஏக்கராவிலேகூட அந்தச் சோயா மொச்சை பயிரிட முடியாத நிலைமையிலே பொள்ளாச்சி தொகுதி இருக்கும்போது, அங்கே சோயா மொச்சையிலே எண்ணெய் தயாரிக்கின்ற தொழிற்சாலையை அரசின் சார்பாக ஏற்படுத்தி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை மாற்றப்பட்டு, அங்கே கரும்பு உற்பத்தியாகிறது. ஆற்றுப் பாசனம் இருக்கின்ற ஏரியாக்களிலே, சர்க்கரை உற்பத்தி செய்கின்ற சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த அரசு உதவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேருந்துகளை அரசுடைமையாக்கியதற்காக நான் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசுடைமையாக்குகின்ற பேருந்துகள், மிகவும் மோசமான நிலைமை

1990 மார்ச் 21] [திரு. வி. பி. சந்திரசேகர்]

யிலே ஓடிய பேருந்துகளை மாற்றி, நல்ல பேருந்துகளை ஓட வைத்து, அங்கே தனியார்களுடைய பேருந்துகள் எப்படிச் சிறப்பாக ஓடிக்கொண்டிருக்கின்றனவோ, அந்த நிலையில் அரசுப் பேருந்துகளை ஓட விட வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிற லோக் பால், சட்டமுன்வடிவு அடிப்படையிலே இங்கே சட்டம் கொண்டு வருவதற்காக இந்த அரசை நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

பினாமி நிலம் ஒழிப்பு. பினாமி நிலம் ஒழிப்பு திட்டத்திலே, அந்த நிலம் கைப்பற்றப்பட்டு, ஏழை எளிய மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே, இந்தத் திட்டங்கள் அமைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இப்படிப்பட்ட நல்ல ஒரு வாய்ப்பினை எனக்குக் கொடுத்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

12.55 மணி

திரு. பி. வி. இராஜேந்திரன்; மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, 1990–91ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது வேதாரண்யம் மக்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான் பார்க்கின்றபோது இதே காலகட்டத்தில் கர்நாடக மாநிலத்திலும் ஆந்திர மாநிலத்திலும் அந்தந்த அரசுகள் கொண்டுவந்திருக்கிற நிதி நிலை அறிக்கைகளையும் நான் பார்க்கிறேன். எல்லா நிதிநிலை அறிக்கைகளுமே இன்றைக்கு பற்றாக்குறை நிதிநிலை அறிக்கைகளாகத்தான் இருக்கின்றன: மத்திய அரசை எதிர் நோக்கியிருக்கின்ற நிதிநிலை அறிககைகளாகத்தான் இருக்கின்றன இன்னும் சொல்லப்போனால் நிதி ஆதாரங்களை எந்த எந்த வழிகளில் எல்லாம் தேடவேண்டுமென்று தேடிக்கொண்டிருக்கிற கடைசி காலத்திற்குள், 'பிளான் அவுட்லே' முடிவதற்கான திட்டக் காலத்திற்குள், மேலும் சில வரவினங்களை எல்லாம் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், எல்லா இடங்களிலும்.

குறிப்பாக, தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த கால மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை எல்லாம் தொட வேண்டுமென்ற எண்ணத்தோடு, கடந்த கால அரசுகளின் நல்வாழ்வுத் திட்டங்கள் அல்லது நாங்கள் சொல்லுகின்றதைப் போல 'பாப்புலிஸ்ட் புரோகிராம்ஸ்' எல்லாம் விடாமல் தொடர்ந்து

செயல்படுத்த வேண்டுமென்று நினைக்கிறார்கள். அதன்மீது என்னுடைய கருத்துக்களை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் சொல்ல விரும்புகிறேன்.

நான்கூட இந்த நிதிநிலை அறிக்கை இலக்கியம் தவளுகின்ற, தமிழ் தவளுகின்ற ஒரு நிதி நிலை அறிக்கை என்று சொல்ல முடியும். வேண்டுமானால் தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தை எடுத்துக் கொண்டால்கூட இதிலே தமிழ் வார்த்தைகள், தமிழ் இலக்கிய மேற்கோள்கள் காட்டுதல்களை எல்லாம் பார்த்தால் நிச்சயமாக இதை பாராட்டும். ஆனால் இதனை நான் தமிழ் ரீதியாக ஆராய்வதை விட நான் ஒரு மெடிக்கல் ஸ்டுடன்ட் தான் நிதிநிலை அறிக்கையை கணக்கு ரீதியாக நான் கணக்குப்போட்டு பார்க்க வேண்டும். என்னுடைய கடமை ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற முறையில் -

"The role of the opposition is to oppose and not to support. When called upon to support it can support with a kick but never with a caress"

என்று வின்சென்ட் சர்ச்சில் பெருமகனார் சொல்வதைப் போல இதிலே என்னென்ன ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன என்று துளாவிப் பார்த்து சொல்ல வேண்டியதுதான் என்னுடைய பொறுப்பு. நாங்களும் மற்றவர்களைப் போல பாராட்டி, டமாரம் வாசிக்க முடியாத ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறோம் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). (சிரிப்பு). நிறைய ஓட்டை உடைசல்கள் இதிலே இருப்பதைக் கண்டு பிடித்து வைத்திருக்கிறேன். அதையும் நீங்கள் பொறுமையோடு கேட்க வேண்டும். என்னை இடை மறிக்காதீர்கள். மாற்றுத் தலைவர் அவர்கள் இருந்தால் இரண்டு நிமிடங்கள் கூடுதலாக வேண்டுமென்று கேட்டால்கூட கொடுத்து விடுவார்கள். பேரவைத் தலைவர் அவர்கள் வந்ததிலிருந்து எனக்கு வயிற்றிலே புளியைக் கரைத்தது மாதிரி இருக்கிறது (சிரிப்பு). நிச்சயமாகக் கூடுதல் நேரம் விட மாட்டார்கள் மணி அடித்துவிடுவார்கள், அதனால் சற்று நேரத்தை கூட்டித் தர வேண்டுமென்று ஆரம்பத்திலேயே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையை கையிலே வைத்து பார்க்கிற போது ஆளும் கட்சியினுடைய தேர்தல் வாக்குறுதியையும் கையிலே வைத்துத்தான் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். 'சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று சொல்லி இதுவரையில் எதை எதை அமல்படுத்தி இருக்கிறார்கள்; எதை எல்லாம் அமல்படுத்தாமல் விட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டி காட்ட வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. அதனால் அதைச் சொல்கிறேன். சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற கோசத்தை முன் வைத்து ஆட்சியைப் பிடித்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு, இன்றைக்கு ஓராண்டு

நிறைவு பெற்றிருக்கிற நேரத்தில் மக்களிடமிருந்து பல்வேறு கால கட்டங்களில் மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறது. அப்படிப் பட்ட மதிப்பெண்கள்தான் மருங்காபுரி இடைத் தேர்தல். மதுரை இடைத்தேர்தல், பழனி நாடாளுமன்றத்திற்கான இடைத் தேர்தல். இப்படிப்பட்ட மதிப் பெண்களைப் பெற்றிருக்கிற இந்த அரசு தன்னுடைய தேர்தல் அறிக்கையில் ஆரம் பத்திலே ஈழத் தமிழர் பிரச்சினை என்று சொல்லிட்டுத்தான் தேர்தல் அறிக்கையை ஆரம்பித்திருக்கிறது.

இன்றைக்கு ஈழத் தமிழர்களுடைய பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்னவென்றால், ஒரு நிலையில் டெலோவை' ஆதரித்து இருந்தாலும் மற்றொரு நேரத்தில் அது 'டெசோவை ஆதரித்து அதை கலைத்திருந்தாலும் இன் றைக்கு யதார்த்தங்களோடும் நிதர்சனங்களோடும் ஒரு சமா தானத்தை செய்து கொண்டு, இன்றைய அரசு இன்றைக்கு புலி களை ஆதரித்து அவர்களுக்கு வீர வணக்கம் சொல்லியிருப்பது யதார்த்த நிலையில் நான் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிற விவசாய நலன்கள் என்று பார்க்கிறபோது சிறு விவசாயிகளின் பழைய கூட்டுறவுக் கடன் அனைத்தும் அறவே ரத்து செய்யப் படும் என்று அறிவித்து விட்டு; அதிலே குறுகிய காலக் கடனை மட்டும் ரத்து செய்து: மத்திய கால மற்றும் நீண்டகாலக் கடன் கள் விடப்பட்டிருப்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டா மல் இருக்க முடியாது.

(13-00 மணி)

அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வாக்குறுதி யிலும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால், விவசாயிகள், கடனை அறவே ரத்து செய்வோம் என்று சொல்லியிருந்ததை, தி.மு.க. தேர்தல் அறிக்கை குத்திக் காட்டி கேலி செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமது யுடன் அவையின் அலுவல் நேரம் சில மணித்துளிகள் நீட்டிக்கப் படுகிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : அதேபோல, கவர்னர் ஆட்சிக் காலத்தில் மூன்று முறை விவசாயிகள் கவர்னரிடம் அலைந் தார்கள். ராஜீவ் காந்தி அவர்கள் தமிழகத்திற்கு 4 முறை வந்தபோது அவரிடம் விவசாயிகள் அலைந்தார்கள். நிவாரணம் இல்லை; எங்களிடம் வாருங்கள், நிவாரணம் தருகிறோம் என்று சொல்லிவிட்டு, குறுகிய காலக் கடன்களை மட்டுமே ரத்து செய் தது என்ன நியாயம்? நேற்று முன்தினம், வந்த மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் விவசாயிகள் கடன் பற்றி சொல்லியிருப் பதைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒன்றைச் சொன்

னார்கள். அது பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிற கடனில் 10 ஆயிரம் ரூபாய்க்குள் இருந்தால்தான் நிவாரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கோவாபரேடிவ் சொசைட்டியாக இருந்தாலும், வேறு சொசைட்டிகளாக இருந்தாலும் கடன் ரத்து என்று 'நபார்டு' நிறுவனம் சொல்லியிருப்பதால், நாங்கள் பேச வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இன்றைக்கு விவசாயிகளை அலைக்கழிப்பது தேசிய முன்னணியும், அதில் அங்கம் ஆக இருக்கிற நீங்களும்தான் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கரும்பு விவசாயிகள் நிலையைப் பார்த்தால் சென்னையில் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். நேற்று கூடசென்று பார்த்தோம். மகாராஷ்டிரா மாநிலத்திலும், வடக்கேயிருக்கிற உத்தரப் பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 380 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ரொக்கவரியைப் பொறுத்து 500 ரூபாய் அங்கே கிடைக்கிறது. தமிழ்நாட்டில் ரூ. 288.2 என்ற அளவில் இருந்து ரூ. 341 என்ற அளவில்தான் அது இருக்கிறது. அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் கரும்பு விவசாயிகள் ஏக்கருக்கு 40 டன் எடுத்து விடுகிறார்கள். 100 டன் எடுக்கிறார்கள் என்று பலர் சொல்கிறார்கள். அதையெல்லாம் விட பல இடங்களிலும் இங்கே இருக்கிற விவசாயிகள் கல்சுரல் இன்புட் காஸ்ட்ஸ் கூலி வரம்பு விகிதம் ஒவ்வொன்றிலும் அவர்கள் மிகப் பெரிய பாரத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள். ஆகவே அவர்களை அழைத்துப் பேச வேண்டும். இன்றைக்கு ஒரு மூட்டை சர்க்கரை ரூ. 750-க்கு விற்கப்படுகிறது. மிக அதிகமாகப் பணம் பண்ணக்கூடிய தொழில் எது என்று சொன்னால் அது சர்க்கரைத் தொழில்தான் என்று பேசப்படுகிறது. அப்படி சர்க்கரை ஆலைகள் சம்பாதிக்கிற பணத்தில் விவசாயிகளுக்கும் கொஞ்சம் கிடைக்கலாம். அதில் அரசாங்கம் கையை விட்டுக் கொடுக்கப் போவது ஒன்றுமில்லை. பட்ஜெட்டிலும் பணம் ஒதுக்குவது கிடையாது. அவர்களுக்கும் நியாயமான விலை கிடைக்க இந்த அரசு அவர்களை அழைத்துப் பேசவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் மலிவு விலை மதுவைப் பற்றிச் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். அதைப் பொறுத்தவரையில், பொதுத் துறையில் தயாரிக்கத் திட்டமிட்டிருப்பதாக சொல்லியிருக்கிறீர்கள். நம் நாடு முழுவதும் மதுவிலக்கு, மதுவிலக்கு என்று கோஷம்—காங்கிரஸ் உட்பட கோஷம் போடுகிறோம். ஆனால் அது செயல் இழந்து இருப்பதை காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களில்கூட நாம் பார்க்கிறோம். அதை நாம் மறக்க முடியாது. மறந்து விடவும் முடியாது. என்னைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சிக்

1990 மார்ச் 21] [திரு. பி. வி. இராஜேந்திரன்]

குள்ளேயே மதுவிலக்குக் கோஷம் மகாத்மா காந்தி, வரதன், குமரப்பா போன்றவர்களால் எழுப்பப்பட்ட போதிலும்கூட பல தலைவர்கள் ஒரு பொருளாதார பார்வையினால்தான் அதை வேண்டுமென்று சொன்னார்களே தவிர, ஏதோ காங்கிரஸ் ஒரு மத புனிதக் கூடாரம் என்றோ, ஏதோ ஹராம் செய்து ஒதுக்கிடவோ இல்லை. ஏழைகள் ஏழைகளாக இருக்கிற நிலையில் அவர்களுடைய பணமெல்லாம் மதுக்கடைக்குச் சென்று விடக் கூடாது என்ற நோக்கத்தினால்தான் அவ்வாறு சொல்லப் பட்டது. காங்கிரஸ் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் கூட, அந்த மாநாட்டில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் பி.ஏ.வாக இருந்தவர்—அவர் பெயர் வரதாச்சாரி என்று கருது கிறேன்—அப்படி 98 வயதான அவர் எழுந்து மேடைக்கு வந்தார். நானும் காங்கிரசில்தான் இருந்தேன். இன்றைக்கு காங்கிரசில் இல்லை. மதுவிலக்கை இந்தியா பூராவும் அமல் செய்யுங்கள், நான் காங்கிரசில் சேர்கிறேன் என்று சொன்னார். ஷிலா தீட்சித் அம்மையார் அவர்கள் மேடையில் பதில் சொல்ல முடியாமல் அமர்ந்துவிட்டார்கள். காரணம், இன்றைக்கு யதார்த்தத்தோடு நாம் சமாதானம் செய்து கொண்டு விட்டோம். சோவியத் நாட்டை எடுத்துக் கொண்டால் பெரஸ்த்ராய்கா-வில் சொல்லி யிருக்கிறபடி எல்லாம் யதார்த்தத்தோடு சமாதானம் செய்யாத கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸம் (அம்மையார் அவர்கள் அருகில் இருக்கிறார்கள், கோபப்படுவார்கள்) கம்யூனி ஸம் வீழ்ந்து விட்டது. (குறுக்கீடு) யதார்த்தத்தோடு சமா தானம் பேசினால்(குறுக்கீடு)

திரு. கோ. **வீரையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிசம் வீழ்ந்து விட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார் கள். அப்படி கம்யூனிஸம் ஆரம்பித்த காலத்திலிருந்து ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு மேலாக பலபேர் இப்படிச் சொல்லி சொல்லி அவர்கள் தான் வீழ்ந்து கொண்டிருக்கிறார்களே தவிர கம்யூனிஸம் என்றைக்கும் வீழ்ந்துவிடவில்லை. வீழாது என்பதை இந்தச் சபை யின் மூலமாக இந்த நாட்டுக்குக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

13.05 மணி

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் தலைவர் அவர் களே, சம்யூனிஸம் வாழவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. சமத்துவம் வளர வேண்டும். இருந்தாலும் இருக்கின்ற நடைமுறைகளை நான் சொல்கிறேன். ஒரு வறட்டு தத்துவமாக அது இருந்தால் அழிந்துவிடும் என்றுதான் சொல்கிறேன். அப்படி இருந்தால் காங்கிரஸ் கூடத்தான் அழிந்துவிடும். It should not be dogmatic but it should be a developing principle அவ்வப்போதைய நிலைமைக் கேற்ப உண்மை நிலை மைகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதுவும் அழிந்துதான் விடும். அப்படி வீழ்ந்ததைத்தான் சுட்டிக் காட்டுகிறேனே தவிர நான் நிச்சயமாக கம்யூனிஸத்தை எதிர்ப்பவன் அல்ல. மகாத்மா

காந்தியும் அதற்கு எதிரானவர் அல்ல. அவர்களுக்கும், பல கம்யூனிஸ தலைவர்களுக்கும் இருந்த கடிதத் தொடர்புகள் எத்தனையோ, ஆகவே. அவர்களும் கம்யூனிஸத்தை எதிர்த்தவர்கள் அல்ல.

இன்றைக்கு மதுவைப் பொறுத்தவரையில் நம்முடைய நிதிநிலை அறிக்கையைக் காரணம் காட்டி மதுவை விட்டிருக்கிறார்கள். அதாவது மலிவு விலையில் மது. ஏற்கெனவே ஐ. எம். எஃப். எஸ். இருக்கிறது. இன்றைக்கு சீப்ரேட் லிக்கர் என்ற அது வேறு இருக்கிறது. ஆனால் அதன்மீது விதிக்கப்படுகின்ற 25 சதவீத டாக்ஸ் என்பது தேவையில்லை என்பதுதான் எங்கள் கருத்து. அப்படி அதனுடைய விலை கூடுகின்ற நிலைமை இருந்தால் நிச்சயமாக எல்லா வீடுகளிலும் கள்ளச் சாராயம் தயாரிப்பார்கள். அந்த நிலையில் வீட்டுக்கு ஒரு போலீஸ் என்று நியமிப்பதற்கு தமிழக அரசால் முடியாது. மேலும் நம்மிடத்திலே பெரிய டெக்னாலஜி ஒன்றும் கிடையாது. இரண்டு பானைகளை மேலே வைத்துவிட்டால், வடிந்துவிடும். அதைப் போல நீண்ட நாட்களுக்கு......................

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் மலிவு விலையில் மது கூடாது என்கிறாரா? அல்லது இன்னும் மலிவாக்க வேண்டுமென்று சொல்கிறாரா?

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மலிவு விலை மது மலிவாகத்தான் இருக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. அதன்மீது மேலும் 25 சதவீதம் வரியைப் போட்டால் அதன் விலை அதிகரித்துவிடும். அதன் காரணத்தால் மீண்டும் கள்ளச் சாராயக்காரர்கள் அதற்குக் கீழே விலை வைத்து விற்றுக்கொண்டிருப்பார்கள். அதனால் நிச்சயமாக அந்த வரியைக் குறைக்க வேண்டும். அப்படி வரியைக் குறைத்தால் டர்ன் ஓவர் அதிகரித்துவிடும். அதாவது 200 மில்லி என்பது 300 மில்லி ஆகிவிடும். அப்படி டர்ன் ஓவர் அதிகரிப்பதால் நிச்சயமாக உங்களுடைய ப்ராஃபிட் கூடிவிடும். எனவே இதனை வியாபாரக் கண்ணோட்டத்தோடு பாருங்கள். அந்த 25 சதவீத வரியை எடுத்துவிடுங்கள். நிச்சயமாக உங்களுக்கு டர்ன் ஓவர் கூட கிடைக்கும். 150 கோடி என்ன, 350 கோடி கூட கிடைக்கும். நிச்சயமாக தாய்மார்கள் திட்டினாலும் கூட அரசு பணம் பண்ண வேண்டும் என்று விரும்பினால் இவ்வாறு பணம் பண்ணுங்கள். வேண்டுமானால் அதற்கு இன்னும்கூட ஆலோசனைகள் தருகிறோம். நம்முடைய அருமைச் சகோதரி திருமதி நல்லத்தம்பி அவர்கள் நீண்ட நாட்களாக கள் இறக்குவதையே குலத் தொழிலாக அவர்கள்

1990 மார்ச் 21] [திரு. பி. வி. இராஜேந்திரன்.]

பகுதியில் செய்து வருவதாகக் குறிப்பிட்டார்கள். நாங்கள் என்ன பாவம் பண்ணினோம் என்று கூடக் கேட்டார்கள். அந்த நாடார் பெருமக்கள் வாழ்கிற அந்தப் பகுதியிலே உள்ள அந்த நிலைமை குறித்துக் குறிப்பிட்டார்கள். முன்பு நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டார்கள். நாடார்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று. அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள்—நான் சின்ன வயதில் பேப்பரில் படித்த ஞாபகம், அதைத்தான் சொல்கிறேன்—என்னை நாடார்களுக்கு நான் என்ன செய்ய முடியும் என்று. ஆனால் இன்றைக்கு நாடார்கள் உங்களை நாடிவிட்டார்கள். அவர்களிடம் இருந்து சம்பந்திபுரத்துச் சீதனமாக 50 கோடி கிடைக்கும். எனவே அந்த கள்ளுக் கடைகளையும் திறந்து விடுங்கள். அந்த சம்பந்திபுரத்து சீதனம் 50 கோடியின் மூலம் நிச்சயமாக நல்ல திட்டங்கள் நிறைவேறட்டும். நான் நடைமுறையில் பார்த்ததைச் சொல்கிறேன். நீங்கள் கடைகளை இழுத்து மூடுவதால் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லை என்றால் அதனால் அரசுக்குத்தான் நிறைய சேதங்கள் வரும். அப்படிப்பட்ட நிலைமைகள் தான் வந்திருக்கின்றன. தனியார்கள்தான் சம்பாதித்துக் கொண்டு இருந்தார்கள். எனவே அந்தக் கள்ளுக்கடைகளை நீங்கள் வேண்டுமானால் திறந்து நடத்துங்கள். அதன் மூலம் நல்ல திட்டங்களை நிறைவேற்றுங்கள். It has some nutritious value calorific value, diet value, சாராயத்தை வேண்டுமானால் மூடிவிட்டு கள்ளைத் திறந்து விடுங்கள். ஏனென்றால் கள்ளுக்கு நியூட்ரிஷியஸ் வேல்யூ இருக்கிறது. டையட் வேல்யூ இருக்கிறது. எனவே வேண்டுமானால் அதைத் திறந்துவிடுங்கள். ஒரு காலத்தில் இந்த மாநிலத்திற்குள் சாராயம் நுழையாமல் செய்திருக்க முடியும். மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் வீடுதேடி வந்தபோது அன்றைக்கு இந்த ப்ரஹிபிஷனை லிஃப்ட் பண்ணவில்லை என்றால், தடை போட்டு இருந்தார்கள் என்றால் இன்றைக்குவரை வராமல் நின்று இருக்கும். ஆனால் இன்றைக்கு டலரும் கற்றுக்கொண்டார்கள். புதிய தலைமுறையினரும் கற்றுக்கொண்டார்கள். அதனால் நானும் என்னையும் பொதுக் கருத்தோடு இணைத்துக்கொள்கிறேன். ஆனால் பிரச்சாரங்களின் மூலமாக தடை செய்வோம். வேண்டாம் என்று சொல்வோம். மதுவை விலக்கச் சொல்வோம். ஆனால் மக்கள் பிரியப்படுகிறார்கள் என்றால் ஏற்றுக்கொள்ளட்டும்.

அடுத்து தொழில் துறையினைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கை மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது. 'ரீகன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் ஃபார் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்' அமைப்பதாகத் தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இன்று வரையில் காணோம் அதேபோல் உப்பு உற்பத்தி நிறுவனம் அமைப்போம் என்று

சொல்லியிருக்கிறீர்கள். இன்றுவரையில் அந்த நிறுவனம் வரவில்லை. பப்ளிக் செக்டாரான தமிழ்நாடு சால்ட் கார்ப்பரேஷன்தான் இருக்கிறது.

அடுத்து கிராமத் தொழில் நிறுவனம் அமைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேதாரண்யத்தில் சோடா ஆஷ் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். எனவே இந்த நிதிநிலை அறிக்கையில் மாமல்லபுரத்திலிருந்து தூத்துக்குடி வரையில் இருக்கின்ற உப்புத் தொழிலாளர்களை ஏமாற்றியிருக்கிறீர்கள். உப்பிட்டவர்களை உள்ளளவும் நினைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே உப்புக்காவது நல்ல திட்டங்களைத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'டாட்டா எக்கனாமிக் கன்சல்டன்சி'—யிடமிருந்து ஆலோசனை பெற்றிருக்கிறது இந்த அரசு என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லியது டாட்டா, பிர்லா கூட்டாளி, பாட்டாளிக்குப் பகையாளி என்று. எனவே எதற்காக அவர்களிடம் செல்ல வேண்டும்? இந்த அரசிடம் மூளை இருக்கின்ற அதிகாரிகள் இல்லையா? சிட்கோ நிறுவனம் இல்லையா? இங்கே வேதாரண்யத்தில் சோடா ஆஷ் தொழிற்சாலை போட முடியுமா, முடியாதா என்று அது குறித்து ''பீஸிபிலிட்டி''-ஐ ஸ்டடி பண்ணுவதற்கு ஆட்கள் இல்லையா?

13.10 மணி

மேலும் சோடா தொழிற்சாலை பல கோடி ரூபாய் மதிப்பில் டாடா கையிலே ஆந்திர பிரதேசத்தில் இருக்கிறது. அவர்கள் எப்படி மற்றொரு பொதுத்துறை நிறுவனம் தன்னோடு போட்டிக்கு வர விரும்புவார்கள். நிச்சயமாக டாடா எக்னாமிக் கன்சல்ட்டன்சியினுடைய ரிப்போர்ட்டைக் குப்பையிலே போட வேண்டும். நிச்சயமாக கலைஞர் அவர்கள் தெரிந்து இதைச் செய்திருப்பார் என்று நான் நினைக்கவில்லை. நிச்சயமாக டாட்டா எகனாமிக் கன்சல்டன்சிக்கு காது கொடுக்கக் கூடாது. அவர்களுக்கு பீஸ் கொடுக்காமல் நடுவிலேயே நிறுத்துங்கள். டாட்டா நிறுவனம் ஏற்கனவே சோடா ஆஷில் மோனோபலி பண்ணுகிறார்கள். அவர்கள் நிச்சயமாக ஒத்துவரமாட்டார்கள். நீங்கள் பாட்டாளிகள் கூட்டாளியாக இருங்கள். டாட்டா, பிர்லாவிற்கு கூட்டாளியாக இருக்க வேண்டாம் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இன்றைக்கு ஓர்ல்ட் பாரஸ்ட்டரி டே. மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை இதற்கு ஈர்க்கிறேன். இன்றைக்கு உலக நாடுகள் எல்லாம் ஓர்ல்ட் பாரஸ்ட்டரி டே கொண்டாடுகின்றன. இன்றைக்கு டாக்டர் சாமிநாதன் அவர்களுக்குரிய மரியாதையைத் தந்து அவர்கள் தலைமையில் ரிசர்ச் அண்ட் டெவலப்மெண்ட் கமிஷன் போட்டிருக்கிறார்கள்.

1990 மார்ச் 21] [திரு. பி. வி இராஜேந்திரன்]

மாநில காடு வளர்ப்பு வன விலங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் இந்த அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளை எல்லாம் வரவேற்கிறேன். இன்டர்ஸ்டேட் பாரஸ்ட்டரி திட்டத்தை விரிவாக்குங்கள். ரிசர்வ் பாரஸ்ட்டினுடைய பௌண்டரியிலே ஆரம்பிக்கிறார்கள். இதனால் சோசியல் பாரஸ்ட்டுடைய ஆப்ஜெக்ட் எல்லாம் இன்றைக்கு டிபிட் ஆகிறது. யாருக்கும் கிராமத்தில் விறகு கிடைப்பது கிடையாது. அங்கே போடப்படுகின்ற யூகாலிப்டஸ், வாட்டில் இவைகள் எல்லாம் பேக்டரிக்குத்தான் போகிறதேயொழிய சோசியல் பாரஸ்ட் நமக்கு கடன் கொடுக்கின்ற உதவி செய்கின்ற நிறுவனங்கள் ஓர்ல்ட் பேங்க் எல்லாம் கிராம மக்களுக்கு ஃபாடர் கிடைக்க வேண்டும், விறகு கிடைக்க வேண்டும் என்றுதான் சொல்கிறதே ஒழிய......

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாடு பிளான்ட்டேஷன் கார்ப்பரேஷன் மூலமாக வளர்க்கப்படுகின்ற மரங்கள்தான் போகின்றனவே தவிர, சோசியல் பாரஸ்ட்டிலே இருந்து இதுவரையில் போனதாக எனக்குத் தகவல் இல்லை. ஆதாரத்தோடு தந்தால்தான் நான் அதைப்பற்றி விசாரிக்க முடியும்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆதாரங்களோடு சொல்கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தின் ஆற்றுப் படுகையிலே இருக்கின்ற இடங்களை நான் உங்களுக்கு ஆதாரமாகத் தருகிறேன். மேலும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காவிரி-மேட்டூர் பாசன திட்டப் பகுதியில் நீர்வளம் குறைந்திருக்கின்ற பகுதிகளில் டீப் போர் வெல்ஸ் போடுவதற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்ட மக்கள் சார்பாக வெகுவாக வரவேற்கிறேன். தஞ்சை மாவட்டம் புறக்கணிக்கப்பட்ட மாவட்டமாக இருக்கிறது. அதிலே நம்முடைய முதல்வர் அவர்கள் ஏதோ தான் பிறந்த மாவட்டத்திற்கு செய்துவிட்டால் மற்றவர்கள் குறை சொல்வார்களோ என்று நினைக்கின்றார்களோ என்னவோ என்று நினைக்கிறேன். அதனால் சந்திரனுக்குள்ளே ஒரு கருப்புப் பகுதி இருப்பது போல சேடோ-பிளேஸ் ஆக தஞ்சாவூர் இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். மேலும் இன்றைக்கு டிஸ்ட்ரிக்ட் பைபர்கேஷன் என்பதற்கு பாபுலேஷன் சென்சஸ் கணக்குகள் சரிவர வராததால் கால தாமதம் ஏற்படுவதாக இந்த நிதிநிலை சொல்கிறது. அதுவரையில் டி.ஆர்.ஓ. 2 பேர்களைப்போடுவதாகவும், அதற்கு மேலும் புராஜக்ட் ஆபீசர்ஸ், டிஸ்ட்டிரிக்ட் ரூரல் டெவலப்மெண்ட் ஏஜென்சி இருப்பார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதோடு டிஸ்ட்டிரிக்ட் இண்டஸ்ட்ரீஸ் சென்டர்கள் 2 மாவட்டங்களுக்குக் கொடுங்கள். தஞ்சை மாவட்டத்திற்கும் நீங்கள் விரும்புகிற இடத்தில் கொடுங்கள். ஏற்கெனவே

[திரு. பி. வி. இராஜேந்திரன்] [1990 மார்ச் 21

டிஸ்ட்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் தீர்மானம் போட்டிருக்கிறோம். திருவாரூரிலே, நாகப்பட்டிணத்திலே, எந்த இடமாக இருந்தாலும் எங்களுக்கு ஏற்புடையதுதான். திருத்துறைப்பூண்டி மக்களுக்கு, நாகப்பட்டிண மக்களுக்கு, வேதாரண்ய மக்களுக்கு, நன்னிலம் மக்களுக்கு எல்லாம் ஏற்புடையதுதான். அந்த இடத்திலே விரைவாக நீங்கள் டி.ஆர்.ஓ. போடவேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக இன்றைக்கு வெளியிலே பாமோலின் ஆயில் கிடைக்கவில்லை. ருப்பி பேமெண்ட். ஏற்கெனவே ராஜிவ் காந்தி மீது குற்றம் சொல்லியிருக்கிறீர்கள். எதற்கெடுத்தாலும் காங்கிரஸ்தான் அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று கதர் சட்டையைப் பார்த்தாலே அப்படி என்று சொன்னார்கள், ஆளுங்கட்சிக்காரர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் இப்போது அந்த இடத்திலே இல்லை. இன்றைக்கு மற்றவர்கள், அதாவது உங்களுக்கு ஆனவர்கள், தோழமை கிடையாது, பார்ட் அண்ட் பார்சல் ஆக இருக்கிறார்கள். நீங்கள்தான் அங்கு எல்லாமே நீங்களாக இருக்கிறீர்கள். ஏற்கெனவே இந்த அரசின் மீது அக்கறை இருக்கின்ற ஒரு தமிழராக இருக்கின்ற ஒருவர் தங்களுக்கு இங்கே பாமோலின் ஆயில் சப்ளை செய்வதாக எழுதிக்கொடுத்ததாக சொன்னார்கள். அவரைக் கூப்பிட்டு உடனடியாக பாமோலின் ஆயில் ரூப்பி பேமெண்ட்-ல் ஏற்றுக் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு எம்.ஆர்.டி.பி. ஏற்கெனவே சொன்னார்கள். காங்கிரஸ்காரர்கள் பணம் தரவில்லை என்று சொன்னார்கள. ஏற்கெனவே கடந்த நிதி ஆண்டில் 10 கோடி ரூபாய், அதாவது 9 கோடியே 80 இலட்சம் தந்ததை இன்றைக்கு ரூபாய் 14 கோடியாக கொடுத்திருக்கிறார்கள் என்றால் 4 கோடி ரூபாய்தான் மேலே கொடுத்திருக்கிறார்கள. நாங்கள் ஏற்கெனவே சொன்னது கல்கத்தா எம்.ஆர்.டி.பி. வரட்டும். சென்னை எம்.ஆர்.டி.பி.க்கு பணம் தருகிறோம் என்று மாதவ ராவ் சிந்தியா அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு கல்கத்தா முடிந்து விட்டது. ஆனால் ஏன் ஜார்ஜ் பெர்னான்டஸ் அவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நெருங்கிய நண்பர் அவர்கள் அவசரநிலை காலங்களிலே முதல்வர் அவர்களோடு நெருங்கிய பழக்கம் வைத்திருந்தவர்கள். அவர்களைக் கூப்பிட்டு ஏன் அந்த பணத்தைக் கேட்கக் கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கடைசியாக தேர்தல் அறிக்கையிலே நில சீர்திருத்தம் கொண்டு வருவதிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். மக்கள் நல உத்தரவுகளில் கையெழுத்திட்டமை காய்வதற்கு முன்பே

1990 மார்ச் 21] [திரு. பி. வி. இராஜேந்திரன்]

அதை அமுல்படுத்துவோம், மிகுந்த தீவிரம் காட்டுவோம், அது மீண்டும் கொண்டுவரப்படும். மை காய்வதற்கு முன்பே அமுல்படுத்துகிற வேகம் என்று சொன்னார்கள். வேண்டுமானால் மாண்புமிகு முதல்வர் அவர்களோ, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களோ மாறு வேடத்தில் வரட்டும். பல இடங்களுக்கு நான் அழைத்துச்செல்கிறேன்.

13-15 மணி

மை காய்ந்து ஓராண்டுக் காலம் ஆனாலும், நடவடிக்கை எடுக்காத கோப்புகள், மக்கள் நலத் திட்டங்கள் பல நிறைவேறாமல் இருக்கின்றன. நீங்கள் பியூரோக்ரசிக்கு பயப்படுவதாக நான் நினைக்கவில்லை. நீங்கள் பியூரோக்ரசிக்கு நாளுக்கு நாள் விட்டுக் கொடுத்துக்கொண்டே போவதைப் பொறுத்தவரையில் யூ ஆர் ஈல்டிங் டு தி பியூரோக்ரசி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் காலத்திலிருந்தே அவர்களுடைய போராட்டங்களைத் தூண்டியவர்கள் நீங்கள். ஆக, இன்னறக்கு பலியாகிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களிடம் வேலை வாங்குவதில்தான் மக்களுடைய நல்வாழ்வு இருக்கிறது என்பதைச் சொல்லி தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.]

3. அறிவிப்பு

பேரவை அலுவல் நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. உறுப்பினர்களில் பலர் நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதால் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும்பொருட்டு 22-3-1990, வியாழக்கிழமை பேரவையின் கூட்டம் மாலையிலே 4 மணி முதல் 6 மணி வரை நடைபெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22-3-1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை 13-15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

அதை அமுல்படுத்துவோம், மிகுந்த தீவிரம் காட்டுவோம், அது மீண்டும் கொண்டுவரப்படும். மை காய்வதற்கு முன்பே அமுல்படுத்துகிற வேகம் என்று சொன்னார்கள். வேண்டுமானால் மாண்புமிகு முதல்வர் அவர்களோ, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களோ மாறு வேடத்தில் வரட்டும். பல இடங்களுக்கு நான் அழைத்துச்செல்கிறேன்.

13–15 மணி

மை காய்ந்து ஓராண்டுக் காலம் ஆனாலும், நடவடிக்கை எடுக்காத கோப்புகள், மக்கள் நலத் திட்டங்கள் பல நிறைவேறாமல் இருக்கின்றன. நீங்கள் பியூரோக்ரசிக்கு பயப்படுவதாக நான் நினைக்கவில்லை. நீங்கள் பியூரோக்ரசிக்கு நாளுக்கு நாள் விட்டுக் கொடுத்துக்கொண்டே போவதைப் பொறுத்தவரையில் யூ ஆர் ஈல்டிங் டு தி பியூரோக்ரசி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் காலத்திலிருந்தே அவர்களுடைய போராட்டங்களைத் தூண்டியவர்கள் நீங்கள். ஆக, இன்றைக்கு பலியாகிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களிடம் வேலை வாங்குவதில்தான் மக்களுடைய நல்வாழ்வு இருக்கிறது என்பதைச் சொல்லி தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.]

3. அறிவிப்பு

பேரவை அலுவல் நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. உறுப்பினர்களில் பலர் நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதால் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும்பொருட்டு 22–3–1990, வியாழக்கிழமை பேரவையின் கூட்டம் மாலையிலே 4 மணி முதல் 6 மணி வரை நடைபெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22–3–1990) காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை 13–15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008
213427.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

25. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் படிவத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிசவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1–11–1989 ஆம் நாளிட்ட 785ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

26. சென்னை மாநகராட்சி எல்லைக்குள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள சில பகுதிகளில், 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலுக்கு வரும் நாளினை அறிவிப்பது குறித்து வருவாய்த்துறையின் 23–6–1989ஆம் நாளிட்ட 849ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1966ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 45(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. 1965ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 31–8–1989ஆம் நாளிட்ட 1441ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1961ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

28. எம்.டி.இ. 6156ஆம் எண் கொண்ட இயக்கூர்திக்காக 1973ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் 1974ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடியவுள்ள கால அளவில் செலுத்தப்பட வேண்டிய வரி பாக்கி மற்றும் தண்டத் தீர்வையினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 16–10–1989ஆம் நாளிட்ட 2183ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

29. 1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் சட்ட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 20–12–1989ஆம் நாளிட்ட 2765 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
213427.
சென்னை-600 008

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

25. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் படிவத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1–11–1989 ஆம் நாளிட்ட 785 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

26. சென்னை மாநகராட்சி எல்லைக்குள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள சில பகுதிகளில், 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலுக்கு வரும் நாளினை அறிவிப்பது குறித்து வருவாய்த்துறையின் 23–6–1989 ஆம் நாளிட்ட 849 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 45(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 31–8–1989 ஆம் நாளிட்ட 1441 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

28. எம்.டி.இ. 6156 ஆம் எண் கொண்ட இயக்கூர்திக்காக 1973 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடியவுள்ள கால அளவில் செலுத்தப்பட வேண்டிய வரி பாக்கி மற்றும் தண்டத் தீர்வையினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 16–10–1989 ஆம் நாளிட்ட 2183 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

29. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் சட்ட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 20–12–1989 ஆம் நாளிட்ட 2765 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.
